விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 111 | வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 06 புதன்கிழமை (21.11.2012) | பக்கங்கள்: பதினாறு + 8

கல்வி ஒளி இலவச இணைப்பு உள்ளே...




இலங்கையின் தொலைத்தொடர்பு செயற்கைக்கோள் (...ற்றர்லைற்) இன்று சீன ஏவுதளத்திலிருந்து விண்ணுக்கு ஏவப்படவுள்ளது. செயற்கைக்கோளையே படத்தில் காண்கிறீர்கள்.

### பிரதம நீதியரசர் விவகாரம்:

# இரண்டு ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைக்கு முஸ்தீபு

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், பிரதம நீதியரசர் மீதும் ஏனைய உயர் நீதிமன்ற நீதிபதிகள் மீதும், விமர்சனங்களை மேற்கொண்ட இரண்டு ஊடகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது பற்றி இலங்கை சட்டவுரைஞர் சங்கம் ஆலோசனை நடத்தி வருகின்றது.

அவதூறு கூறும் நிகழ்ச்சிகளை ஒலி பரப்பிய இரண்டு ஊடக நிறுவனங்களுக்கு எதிராகவே சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காகவே இலங்கை சட்டவுரைஞர் சங்கம் குழு ஒன்றை நியமித்துள்ளது. அந்தக் குழு தனது கடமையை தொடர்ந்து முன்னெடுக்கும் என்றும் சங்கம் அறிவித்துள்ளது.

இந்தக் குழு தனது செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ளவில்லை எனவும் இந்த ஊடகங்களுக்கு எதிரான

02

## இலங்கையின் முதல் செயற்கைக்கோள் இன்று விண்ணுக்கு ஏவப்படும்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இளைய புதல்வர் ரோஹித ராஜபக்ஷவின் கனவிற்கிணங்க உருவாகிவரும் தனித்துவமான தொலைத்தொடர்பு செயற்கைக் கோள் (சற்றலைட்) இன்று வியாழக்கிழமை விண்ணுக்கு ஏவப்பட வுள்ளது.

சீனாவின் சீசாங் செயற்கைக் கோள் ஏவு தளத்திலிருந்தே இன்று இலங்கை நேரப்படி மாலை [illegible] மணிக்கு இந்தச் செயற்கைக்கோள் ஏவப்பட வுள்ளது.

மூன்று கட்டங்களாக விண்ணுக்கு அனுப்பப்படவுள்ள "சுப்றீம்சற்" விண்கலத்தின்

02

## யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து பாலியல் தொந்தரவு முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியாலையிலிருந்து பாலியல் தொந்தரவு குறித்த முறைப்பாடொன்று சுகாதார அமைச்சர் நியமித்த ஒழுக்காற்றுக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன. தாதியர் தரத்தைச் சேர்ந்த பெண் ஊழியர் ஒருவரே இந்த முறைப்பாட்டினைச் செய்துள்ளனரென்றும் தெரிய வருகிறது.

அரசாங்க சுகாதார சேவைத் துறையில் இடம்பெறும் பாலியல் தொந்தரவுகள், துஷ்பிரயோகங்கள் வல்லுறவுச் சம்பவங்கள் போன்றவற்றை விசாரித்து நடவடிக்கை எடுக்க ஒழுக்காற்றுக் குழு வொன்று நியமிக்கப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கடந்த வாரம் அறிவித்திருந்தார்.

அரசாங்க சுகாதாரத்துறை சார்ந்த நிறுவனங்களில் பாலியல் குற்றங்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன என்று தெரிவித்த அமைச்சர், இது தொடர்பாகத் தமக்குப் பல

02

## 332 புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

இதுவரை சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளாக 332 இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

நௌரு தீவில் புகலிடக் கோரிக்கையாளர் முகாம்கள் நிறுவப்பட்டதனைத் தொடர்ந்து அதிகளவான இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

தன்னார்வ

02

## யாழ்ப்பாணத்தில் பெண் கைதிகளுக்கென புதிய சிறைக்கூடக் கட்டடம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் பெண்களுக்கான புதிய கட்டிடம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை திறந்து வைக்கப்பட்டது. யாழ். சிறைச்சாலை நலன்புரி சங்கத் தலைவியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான சாந்தா அபிமன்னசிங்கம் சிறைக்கூடத்தினை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

யாழ். சிறைச்சாலை நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் ஆர்.எம்.செனரத் பண்டார தலைமையில் நடைபெற்ற

02

## கறுப்பு மையினால் அழிக்கப்பட்ட ஐ.நா.அறிக்கைப் பக்கங்கள் அம்பலத்தில்

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உள்ளக விசாரணை அறிக்கையில் தணிக்கை செய்யப்பட்ட சில பக்கங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு தணிக்கை செய்யப்பட்டு அழிக்கப்பட்ட 29 பக்கங்கள் எவ்வாறு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு கிடைக்கப் பெற்றன என்று அரசாங்கம், ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

இந்த 29 பக்கங்களின் உள்ளடக்கங்கள்

02

## அனலைதீவு பொதுநூலக கட்டட திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

அனலைதீவு பொது நூலகக் கட்டடத் திறப்பு விழாவும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று காலை பத்து மணியளவில் அனலைதீவு பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது.

02

## பாராளுமன்ற தெரிவுக் கமிட்டி நீதிமன்றமல்ல அதற்கு இடைக்காலத் தடை விதிக்கவும்

(கொழும்பு)

### பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பாக சட்டத்தரணி வாதம்

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் சட்டமல்ல. பாராளுமுன்ற நிலையியற் கட்டளைகளின் கீழ் உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டி நீதிமன்றமோ, விசாரணை மன்றமோ அல்ல, எனவே தெரிவுக் கமிட்டியினால் விசாரணை நடத்த முடியாது. இவ்வாறு பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநயாக்கா மீது விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டிக்கு இடைக்காலத் தடையுத்தரவு விதிக்குமாறு கோரித் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மனுதாரர் தரப்பில் ஆஜரான ஜனாதிபதி

02

## கொழும்புப் பெண் தமிழக விபத்தில் பலி

(சென்னை)

தமிழகத்தின் திருவண்ணாமலை கோவிலுக்கு சுற்றுலா சென்ற இலங்கைப் பெண்ணொருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கொழும்பு, கொட்டாஞ்சேனை, கதிரேசன் வீதியை சேர்ந்த ரோகினி (வயது-62). என்ற பெண் நேற்றுமுன்தினம் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோவிலில் சாமி திசனம் செய்தார். பின்னர் வீதி வலம் சென்றுள்ளார்.

02

## வல்லையில் புலிக் கொடி?

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை, தீருவில் பகுதியில் இனந்தெரியாத நபர்களினால் நேற்றுமுன்தினம் இரவு புலிக்கொடி ஒன்று பறக்கவிடப்பட்டிருந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தீருவில் பகுதியில் அமைந்துள்ள தனியார் தொலைத்தொடர்பு கோபுரத்திலேயே இந்தப் புலிக் கொடி

02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# முதன்முதலில் தமிழ் மொழியிலும் அச்சிடப்பட்ட மாகாணசபை கொள்கைப் பிரகடனம் சப்ரகமுவ மாகாண சபையில்

வரலாற்றிலேயே இம்முறை முதலாவது தடவையாக சப்ரகமுவ மாகாண சபையின் கொள்கை பிரகடனம் தமிழ், சிங்கள, ஆங்கிலம் மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளமை பெரும் வரவேற்கத்தக்க விடயமாகும் என்று அம் மாகாண சபையின் தமிழ், முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு மாகாண சபையில் கூட்டங்கள் நடைபெறும் போது சிங்கள உறுப்பினர்கள் பேசுவதை தமிழ் மொழியிலும் தமிழ் உறுப்பினர்கள் பேசுவதை சிங்கள மொழியிலும் மற்றும் ஆங்கில மொழியிலும் மொழி பெயர்த்து கேட்கக் கூடியவாறு சபை அனைத்து உறுப்பினர்களுக்கும் மொழிபெயர்ப்பு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சப்ரகமுவ மாகாண சபையின் மாதாந்த அமர்வு சபை தலைவர் கஞ்சன ஜயரட்ன தலைமையில் நடைபெற்ற போது இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சிறுபான்மை உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

கடந்த மாகாண சபை வரலாற்றில் எமக்கு கிடைக்காத ஒரு வரபிரசாதம் இம்முறை கிடைத்துள்ளது. தொடர்ந்தும் இம்முறைமையை செயற்படுத்தவேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சப்ரகமுவ மாகாண சபை சிறுபான்மை மக்களுக்கு கிடைத்த மிக பெரியதொரு வரப்பிரசாதமாகும் என்று சப்ரகமுவ மாகாண சபையின் தமிழ் முஸ்லிம் உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

# முதலாவது சிங்களப் பத்திரிகையை அச்சடித்த இயந்திரம் தீயில் சேதம்

1860 இல் முதலாவது இலங்கையில் சிங்களப் பத்திரிகையான லங்காலோகய என்ற பத்திரிகையை அச்சடித்த அச்சியந்திரம் தீ விபத்தால் மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

காலியில், கதலுவவில் உள்ள ரன்வெல்ல கோவிலில் ஏற்பட்ட தீ விபத்தின்போதே இந்த இயந்திரம் சேதமடைந்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில் பெண்...(தொடர்)

இந்நிகழ்வில் யாழ்.சிறைச்சாலை நலன்புரிச் சங்க உப தலைவி பொன்னம்பலம், உறுப்பினர்கள், யாழ்.சிறைச்சாலைப் பிரதம அதிகாரி சி.இந்திரகுமார், யாழ்.சிறைச்சாலை நலன்புரிச் சங்க உத்தியோகத்தர் ப.சுசிதரன் உட்பட அருட்சகோதரிகள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# எண்ணெய், வாயுப் படிவுகளை ஆராயும் வேலை பெப்ரவரியில் ஆரம்பம்

எண்ணெய் மற்றும் இயற்கை வாயு படிவுகளை ஆராயும் வேலைத் திட்டத்தின் அடுத்த கட்டம் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஆரம்பமாகும் என பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் நாடாளுமன்றில் தெரிவித்தார்.

மன்னார் படுகையில் இயற்கை வாயு படிவுகளை தேடி மூன்று கிணறுகள் கெயன் இன்ரநஷனல் நிறுவனத்தால் தோண்டப்பட்டது என அமைச்சர் கூறினார்.

இவற்றில் இரண்டில் இயற்கை வாயு படிவு இருப்பதற்கான தடயங்கள் உள்ளன. இந்த வாயுவை வெளிக்கொணர்வது வர்த்தக ரீதியில் இலாபம் தருவதாக அமையுமா? என்பது இப்போது ஆராயப்படுகின்றது. கெயன் இன்ரந'னல் நிறுவனம் இதுவரையில் 131 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை எண்ணெய் ஆய்வுக்காக செலவளித்துள்ளது என அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்துக்கு அப்பாலுள்ள கவேரிப்படுகையிலுள்ள கடலிலும் தென்கிழக்கு மாகாணத்துக்கு அப்பாலுள்ள கடலிலும் விரைவில் எண்ணெய் ஆய்வு தொடங்கும் என அமைச்சர் கூறினார்.

வர்த்தக ரீதியில் எடுக்கும் அளவுக்கு வாயுப்படிவு காணப்படினும் அதை எடுப்பதற்கு மூன்று தொடக்கம் ஐந்து வருடங்கள் எடுக்கும் என அமைச்சர் கூறினார்.

## 332 புகலிடக் கோரிக்கை...(தொடர்)

அடிப்படையிலும், பலவந்தமான முறையிலும் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நௌரு தீவுகளுக்கும், இலங்கைக்கும் திருப்பி அனுப்பி வைக்கப்படுவதன் மூலம், பின்னர் சட்டவிரோத ஆட்கடத்தல்காரர்களுடன் தொடர்புகளைப் பேணுவதில் நன்மை இல்லை என்பது புலனாகியுள்ளதாக அவுஸ்திரேலிய குவரவுத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சட்டங்களுக்கு முழுமையான வகையில் இலங்கையர்கள் நாடு கடத்தப்படுவதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் கிறிஸ் பொவுன் தெரிவித்துள்ளார்.

## யாழ்.போதனா வைத்திய...(தொடர்)

முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் குறிப்பிட்டிருந்தார். கடந்த வாரம் நூல் வெளியீட்டு விழாவொன்றில் உரையாற்றிய அமைச்சர், அரசாங்க சுகாதாரத்துறை சார்ந்த நிறுவனங்களில் பணியாற்றும் பெண் சிற்றூழியர்கள் சிலரிடமிருந்தும், நிர்வாகத் தரத்தில் பணி புரி யும் பெண்களிடத்தில் இருந்தும் பாலியல் குற்றச்சாட்டுகள் தொடர் பான முறைப்பாடுகள் பல தனக்குக் கிடைத்திருப்பதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். சகல அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் பாலியல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு விசேட ஒழுக்காற்றுக் கமிட்டி களை நியமிக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

## இரண்டு ஊடகங்களுக்கு...(தொடர்)

சட்ட நடவடிக்கை பற்றிய தனது பரிந்துரைகளை செய்யும் எனவும் சங்கத்தின் செயலாளர் சஞ்சய கமகே தெரிவித்தார்.

பிரதம நீதிபதி மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் வழங்கிய தீர்ப்புகளை விமர்சித்தமை, மன்னார் நீதவான் எ.யூட்ஸன் அவரது குடும்பங்களுக்கு அவதூறு விளைவிக்கும் வகையில் நிகழ்ச்சி ஒன்றை ஒலிபரப்பியமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலேயே இந்த நிறுவனங்கள் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாகவும் அந்த நிறுவனங்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஆராய்ந்து வருவதாகவும் சட்டவுரைஞர் சங்கம் கூறியுள்ளது.

## இலங்கையின் முதல்...(தொடர்)

முதல்பகுதி இப்பொழுது தயாராகிவிட்டது. ஏனைய இரண்டும் 2013 மற்றும் 2016ஆம் ஆண்களில் ஏவப்படவுள்ளன.

சுமார் 360 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் இந்த செயற்கைக்கோள் உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்று ஏவப்படவுள்ள இந்த சற்றலைட் ஆனது 2013ஆம் ஆண்டு ஜூன் மாத்தின் பின்னர் வர்த்தக ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான கட்டுப்பாட்டு மைய வேலைகள் கண்டி - பல்லேகலவில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தனக்கென சொந்தமாக தொலைத்தொடர்பு சற்றலைட் வைத்திருக்கும் நாடுகளில் 45ஆவது இடத்தினையும் ஆசியாவில் 3ஆவது இடத்தினையும் இலங்கை பெறவுள்ளமை சிறப்பானதாகும்.

தெற்காசியாவில் இந்தியா, பாகிஸ்தானுக்கு அடுத்ததாக சொந்த தொலைத்தொடர்பு சற்றலைட் உள்ள நாடு என்ற பெருமை இலங்கையைச் சாரவுள்ளது.

## அனலைதீவு...(தொடர்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையுடன் இணைந்து கனடா - அனலைதீவு கலாசார ஒன்றியத்தினால் மெருகூட்டப்பட்ட கட்டடத் திறப்பு விழாவே இன்று நடை பெறுகிறது.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபைச் செயலாளர் சு.சுதர்ஜன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறுகிறது. மேற்படி பிரதேச சபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு, சமூகமட்ட நிறுவனங்களோடு இணைந்து நூலக அபிவிருத்தி என்ற தொனிப்பொருளில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஞாபகார்த்தக் கல் திரைநீக்கம், மரநடுகை, மங்கள விளக்கேற்றல், ஆசியுரை போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்.

## கறுப்பு மையினால்...(தொடர்)

தொடர்பிலான தகவல்கள் புலி ஆதரவு அமைப்புக்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளன.

வன்னிப் போரில் பாதிக்கப்பட்டோர் பற்றி உறுதியான தகவல்களை வெளியிட முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கை முன்கூட்டியே வெளியானமை ஒழுக்க விதிகளுக்கு புறம்பானது என்று இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

## கொழும்புப் பெண்...(தொடர்)

இலங்கை அகதிகள் முகாம் அருகே சென்ற போது, மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் ரோகினி மீது மோதியுள்ளார்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த அவரை சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் அவர் வழியில் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து திருவண்ணாமலை பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். உயிரிழந்த ரோகினியின் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வல்லையில் புலி...(தொடர்)

பறிக்கவிடப்பட்டிருந்ததாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், நேற்று அதிகாலை குறித்த பகுதிக்கு வந்த இராணுவத்தினரும் பொலிஸாரும் அந்த புலிக்கொடியை அவ்விடத்திலிருந்து அகற்றியதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

புலிக்கொடி பறக்கவிடப்பட்டிருந்த பகுதியில் விடுதலைப் புலிகளின் நினைவுத்தூபியொன்றே அமைக்கப்பட்டிருந்ததாகவும் பின்னர் அது அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்ட நிலையிலேயே தனியார் தொலைக் தொடர்பு கோபுரம் நிர்மாணிக்கப்பட்டதாகவும் பிரதேசவாசிகள் குறிப்பிடுகின்றனர்.

எவ்வாறாயினும், இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெறவில்லை எனவும், தாங்கள் அவ்வாறானதொரு புலிக்கொடியை அங்கிருந்து அகற்றவில்லை எனவும் வல்வெட்டித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

## பாராளுமன்றத் தெரிவு...(தொடர்)

சட்டத்தரணி கனக ஈஸ்வரன் வாதிட்டார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றப் பிரேரணை குறித்து பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டி விசாரணை நடத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு விதிக்குமாறு கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட றிட் மனு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது. இலங்கை வர்த்தகச் சேம்பரின் முன்னாள் தலைவர் சந்திரா ஜெயரட்ண இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார். பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியில் அங்கம் வகிக்கும் பதினொருபேரும் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

சட்டத்தரணிகள், நிலாந்தி டி சில்வா, புத்திக இலங்கத்திலக ஆகியோரின் அனுசரணையோடு மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆஜராகியிருந்தார். பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு பாராளுமன்றத்தின் 78 ஏ நிலையியற் கட்டளைகளின்படி சபாநாயகர் பிரதிவாதிகளைத் தெரிவுக்கமிட்டிக்கு நியமித்தார் என்று மனுதாரரின் சட்டத்தரணி தமது வாதத்தில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் வாதிடுகையில்,

இலங்கையில் பாராளுமன்றம் மிக உயர்வானதோ அல்லது இறைமையுடையதோ அல்ல. நாட்டின் மிக உயர்ந்த சட்டமாக மதிக்கப்படும் அரசியல் யாப்பில் இருந்தே பாராளுமன்றம் தனது அதிகாரங்களையும், அதிகார வலுவையும் பெற்றுக் கொள்கிறது. எனவே அதன் மீது அரசியல் யாப்புச் செலுத்தும் கட்டுப்பாடுகள், கடப்பாடுகள் என்பவற்றால் பாராளுமன்றம் கட்டுப்படுத்தப்படுகிறது.

நீதித்துறையின் சுயாதீனம் அரசியல் யாப்பினால் அங்கீகரிக்கப்பட்டுப் பேணப் படுகிறது. எனவே எந்தவொரு நபரும், சட்ட அதிகா ரம் இல்லாமல் எந்தவொரு நீதித்துறையின் செயற்பாட்டில் அல்லது நடவடிக்கையில் தலையிடுவதோ அல்லது தலையிட முயற்சிப்பதோ குற்றமாகும்.

அரசியல் யாப்பின் ஏற்பாடுகள் நீதித்துறையின் சுயாதீனத்தை மேற்கொள்ளும் நோக்கம் கொண்டவை. அத்துடன் நீதித்துறையின் அதிகாரமும் செயற்பாடுகளும் எந்தவித பயமோ, பக்கச்சார்போ இல்லாமலும் சட்டவிரோதமான தலையீடுகள் இல்லாமலும் மேற்கொள்ளப்பட வேண்டியவை என்று மனுதாரர் குறிப்பிட்டார்.

அரசியல் யாப்பின் 107(2) ஆவது சரத்தின் படி பிரதம நீதியரசர், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், உயர் நீதிமன்றத்தின் நீதியரசர்கள், மேல் நீதிமன்ற நீதியரசர்கள், நன்னடத்தையான காலத்தில் பதவிகளை வகிக்க முடியும். நிரூபிக்கப்பட்ட தவறான நடத்தைகள் அல்லது தகுதியின்மை என்ற அடிப்படையில் ஜனாதிபதி மேற்கண்ட நீதிபதிகளைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு பாராளுமன்றத்தின் பெரும்பான்மையான அங்கத்தவர்களின் ஆதரவுடன் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய பின்னர் விடுக்கும் ஓர் உத்தரவு இல்லாமல் பிரதம நீதியரசரின் பதவி நீக்க முடியாது.

இதன்படி 117 பாராளுமன்ற உறுப்பினர்கள் கைச்சாத்திட்டு குற்றப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டத.

இதற்கு இணங்க உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்கமிட்டி நவம்பர் 14ஆம் திகதி கூடி, 22ஆம் திகதிக்கு முன்னதாக தனது பக்க நியாயங்களை தெளிவுபடுத்தி எழுத்து மூல ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு பிரதம நீதியரசரைக் கோரியுள்ளது.

பிரதம நீதியரசர் மீதான குற்றச்சாட் டுகளை விசாரிக்கும் நோக்குடனேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது என்றும் மனுதாரரின் சட்டத்தரணி தெரிவித்தார்.

### இலங்கை விவகாரம் இந்திய நாடாளுமன்றத்துக்கு வருமா?

# ஊடகவியலாளரின் கேள்விக்கு மௌனம் காத்த கருணாநிதி



டெசோ மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு ஆதரவாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் குரல் எழுப்பவேண்டுமென அந்தப் பேரவையின் உறுப்பு நாடுகளிடம் வலியுறுத்துவது என டெசோ ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டுள்ளது.

தி.மு.க தலைவர் கருணாநிதி தலைமையில் அக்கட்சியின் தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சென்னையில் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற டெசோ மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய கோவை ஐ.நா. அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டதன் பின்னர் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது ஐ.நா, மனித உரிமைகள் பேரவையில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளின் இந்தியாவிற்கான தூதுவர்களை சந்தித்து டெசோ தீர்மானங்களுக்கு ஆதரவு திரட்டுவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆலோசனைக் கூட்டத்தின் பின்னர் அங்கு குழுமியிருந்த செய்தியாளர்கள் இலங்கைப் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் கவன ஈர்ப்பு தீர்மானம் ஏதேனும் கொண்டு வரப்படுமா என கருணாநிதியிடம் வினவினர். இதற்கு அவர் பதிலளிக்காத நிலையில் அருகிலிருந்த தி.மு.கவின் நாடாளுமன்ற அணித் தலைவர் டி.ஆர் பாலு, அப்படியானதொரு தீர்மானம் கொண்டுவரப்படும் என்றார்.

# காஸா மீதான தாக்குதல்களுக்கு தேசிய சுதந்திர முன்னணி கண்டனம்

காஸா நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தாக்குதல்களுக்கு விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி கண்டனம் வெளியிட்டுள்ளது. இஸ்ரேலியப் படையினர், காஸா நிலப்பரப்பின் மீது கடும் தாக்குதல்களை நடாத்தி வருவதாக தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

தாக்குதல்களின் மூலம் சிவிலியன்கள் கொல்லப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. வான் தாக்குதல்கள் காரணமாக சிறுவர்கள் உள்ளிட்ட 50 சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர். பாரிய மனித சங்காரமொன்றை செய்ய இஸ்ரேல் ஆயத்தமாகி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் அமைப்போ அல்லது சர்வதேச சமூகமோ இந்தத் தாக்குதல்களுக்கு கண்டனம் வெளியிடவில்லை. இந்த தாக்குதல்களை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை.

ஐக்கிய நாடுகள் அமைப்பு மற்றும் சர்வதேச சமூகத்தின் இந்த மௌனம் உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக அமையும். தாக்குதல்களில் உயிரிழந்த பலஸ்தீன சிவிலியன்களது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதாக தேசிய சுதந்திர முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# குற்றப் பிரேரணை தொடர்பில் சட்டத் திருத்தம் தேவையில்லை

### நிமல் சிறிபால டி சில்வா

குற்றப் பிரேரணை தொடர்பில் சட்டத் திருத்தம் செய்யத் வேண்டிய அவசியமில்லை என அவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அமுலில் இருக்கும் அரசியல் அமைப்பு மற்றும் நிலையியற் கட்டளைக் கொண்டு குற்றப் பிரேரணை விசாரணைகளை நடாத்த முடியும். புதிதாக சட்டத் திருத்தங்கள் அவசியமில்லை. நாடாளுமன்றமும், தெரிவுக் குழுவும் விசாரணைகளை நடாத்த நடவடிக்கை எடுக்கும்.

முன்னாள் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோனுக்கு எதிரான குற்றப் பிரேரணை விசாரணைகளை நாடாளுமன்றத் தெரிவுக் குழு நடத்திய சந்தர்ப்பத்தில், நிலையியற் கட்டளைகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டதாக நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பில்



எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்.,கிளிநொச்சி மாவட்ட உலமா சபை நிர்வாகிகள்

(மீரான்)

கடந்த வாரம் யாழ்ப்பாணம், பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளியில் நடைபெற்ற அகில இலங்கை ஜெம்மியதுல் உலமா சபையினரினால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் யாழ் - கிளிநொச்சி மாவட்டத்துக்கான உலமா சபைத் தெரிவும் இடம்பெற்றது.

இதில் பின்வருவோர் நடப்பாண்டுக்கான நிர்வாக சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - அஷ்ஷெய்க் ஏ.எம்.ஏ.அப்துல் அஸீஸ் (காசிம்), செயலாளர் - அஷ்ஷெய்க் எஸ்.ஏ.ளி.ருசான் (மதனி), பொருளாளர் - அஷ்ஷெய்க் எம்.எம். முஜாஹித் (ரஹ்மானி), உப தலைவர் - அஷ்ஷெய்க் பீ.ஏ. சுபியான் (யாகூத்தி), உப பொருளாளர் - அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம்.சஹீத் (கபூரி), உப செயலாளர் - ஏ.எம்.ரபியுத்தீன் (கபூரி) இவர்களுடன் யாழ்.கிளிநொச்சி மாவட்ட உலமாக்கள் அனைவரும் ஜம்இயாவின் அங்கத்தவர்களாகச் செயற்படுவார்கள்.

# கல்வி அமைச்சின் செயலரைப் போல் ஒப்பம்

### ஒருவருக்கு விளக்கமறியல்

கல்வி அமைச்சின் செயலாளரினது கையெழுத்தை இட்டதாகக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவரை எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

சந்தேகநபரின் பிள்ளையை றோயல் கல்லூரியில் சேர்க்கும்படி கல்வி அமைச்சின் செயலாளர் கேட்டுக்கொள்ளும் வகையில் கடிதமொன்றை எழுதி அதனை குறித்த நபர் பாடசாலையில் சமர்ப்பித்துள்ளார்.

இந்தக் கடிதம் தொடர்பில் சந்தேகம்கொண்ட அதிபர், கறுவாத்தோட்டம் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந் நிலையில், கைது செய்யப்பட்ட நபர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதில், இந்தக் கடிதத்தை மற்றுமொரு நபர் தன்னிடம் தந்ததாகக் கூறியுள்ளார்.

# மின்னஞ்சல் மூலம் பணம் அபகரிப்பு

"அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றுள்ளீர்கள்" என குறிப்பிட்டு மின்னஞ்சல் மற்றும் கையடக்கத் தொலைபேசி மூலமாக பணம் பறிக்கப்பட்டு வருவதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இணையத்தின் மூலம் இவ்வாறு தகவல்களை அனுப்பி மோசடி செய்யப்படுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறு பணம் பறிக்கப்பட்டமை குறித்து கடந்த சில நாட்களாக பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக கணினி அவசர செயற்பாட்டு பிரிவின் ஊடகப் பேச்சாளர் ரொஷான் சந்ரகுப்த தெரிவித்தார். இவ்வாறான மின்னஞ்சல்களோ இல்லது குறுஞ் செய்திகளோ கிடைத்திருப்பின் விழிப்பாகவும் எச்சரிக்கையுடனும் நடந்து கொள்ளுமாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முதலாவது அச்சு இயந்திரம் தீயில் சேதம்

1860 இல் முதலாவது இலங்கையின் சிங்களப் பத்திரிகையான லங்காலோகய என்ற பத்திரிகையை அச்சடித்த அச்சியந்திரம் தீ விபத்தால் மிக மோசமாக சேதமடைந்துள்ளது.

காலியில், கதலுவவில் உள்ள ரன்வெல்ல கோவிலில் ஏற்பட்ட தீ விபத்தின்போதே இந்த இயந்திரம் சேதமடைந்துள்ளது.

# நெடுந்தீவில் மரநடுகை

(தீவகம்)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அதிக வரட்சியான இடங்களில் வரட்சிகளைத் தாங்கி வளரக் கூடிய தான மரங்களையும் மற்றும் வரட்சிகள் குறைந்த இடங்களை இனங்கண்டு அங்கு பயன்தருகின்ற மரங்களையும் நடுகை செய்வதற்கு விவசாயத் திணைகளம் நடவடிக்கை எடுத்துள்ளது. அங்கு நாம்டி வைக்கப்படவிருக்கும் இந்த மரங்களைப் பாதுகாத்து வளர்ப்பதற்கென 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். இம்மரங்களைப் பாதுகாப்பதற்கான வேலிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளையும் விவசாயத் திணைக்களமானது மேற்கொள்ளவிருக்கிறது.

# பயனாளிகள் தெரிவு

(தீவகம்)

வெங்காய விதை குமிள் உற்பத்தியினை மேற்கொள்வதற்கென தீவகப் பகுதியில் இருந்து மூன்று பயனாளிகள் யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினரால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட மூன்று பயனாளிகளுக்கும் ஐம்பது வீத மானிய அடிப்படையில் தலா 300 கிலோ வெங்காயம் வழங்கப்படவிருக்கின்றன.

இதற்கு சரவணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி ஆகிய இடங்களில் இருந்து மூன்று பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இன்றைய இராசி பலன் (21.11.2012)

**நந்தன வருடம் கார்த்திகைத் திங்கள் 6ஆம் நாள்**
**புதன்கிழமை**

**நட்சத்திரம்** : சதயம் பி.இ. 5.39 வரை அதன் பின் பூரட்டாதி
**திதி** : அட்டமி பி.ப. 1.35 வரை. அதன் பின் நவமி
**சுபநேரம்** : 4.40 - 6.10 **இராகுகாலம்** : 12.10 - 1.40
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : ஆதாயம் அதிகரிப்பு, திறமை வெளிப்பாடு, தொழில் மூலதனம்
**இடபம்** : புதுத் தொழில், அந்நியரிடம் கவனம், போட்டி நிலை
**மிதுனம்** : வியாபார விருத்தி, தொழிற்திறமை, மனமகிழ்ச்சி
**கடகம்** : தொழில் கவனம், பிறரால் தொல்லை, சந்தர்ப்பத்தை பயன்படுத்தல்
**சிங்கம்** : பணவரவு, சமூகத்தில் மதிப்பு, சிரமத்தை சமாளித்தல்
**கன்னி** : புதிய சிந்தனை, வேலைவாய்ப்பு, எதிரிகள் ஏமாற்றம்
**துலாம்** : வியாபார வளர்ச்சி, நண்பர்கள் ஆதரவு, தர்மசங்கடம்
**விருச்சிகம்** : எதிர்பார்பு தாமதம், குடும்ப மனஸ்தாபம், பிரயாணத்தில் கவனம்
**தனுசு** : தாரள மனப்பான்மை, எதிர்பார்பு நிறைவேறல், குடும்பச் செலவு
**மகரம்** : நன்மையான செயற்பாடு, தொழிற்தடை விலகும், பிறர்பாராட்டு
**கும்பம்** : மனச்சஞ்சலம், வீண் செலவு, தொழிற் குழப்பம்
**மீனம்** : தொழில் மாற்றம், ஓரளவு வருமானம், உறவினர் உதவி

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# வெலிக்கடைச் சிறை மோதல் தணிந்த பின்னர் கைதிகளைப் பெயர் சொல்லி அழைத்துப் படையினர் சுட்டுக் கொல்லவில்லை

## சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் மறுப்பு

"வெலிக்கடைச் சிறைச்சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மோதலையடுத்துக் குழப்ப நிலை தணிந்த பின்னர் சனிக்கிழமை அதிகாலை கைதிகள் சிலரைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டுப் படையினர் சுட்டுக் கொன்றனர் என்றெல்லாம் கூறப்படுகிறதே" என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் பி. டபிள்யூ. கொடிப்பிலியைக் கேட்ட போது, "இந்தக் குற்றச்சாட்டுக்கள் பொய் யானவை" என்று அவர் மறுப்புத் தெரிவித்தார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் மோதல்கள் இடம்பெற்ற தினத்தன்று பிற்பகல் நாலரை மணியளவிலேயே அதிரடிப்படையினருக்கும் கைதிகளுக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்தே மோதல்கள் வெடித் தன என்கிறார் சிறைச்சாலை ஆணையாளர் பி.டபிள்யூ கொடிப்பிலி.

வெலிக்கடைச் சிறையில் விளக்கமறியல் கைதிகள் வைக்கப்பட்டிருக்கும் 'எல்' வார்ட்டே முதலில் சோதனைக்குள்ளாக்கப்பட்டது. போதைவஸ்துப் பொருட்கள், செல்போன்கள் ஆகியவற்றைக் கைப்பற்றும் நோக்குடனேயே இந்தச் சோதனை நடத்தப்பட்டது. பிற்பகல் நான்கு மணியளவில் அங்கு சோதனை முடிந்த பின்னர் 4.30 மணியளவில் விசேட அதிரடிப் படையினரும், சிறைக் காவலர்கள் சிறையின் சப்பல் வார்ட் பகுதிக்குச் சென்றனர். அங்கிருந்த 250 கைதிகளை வெளியேற்றி விட்டுச் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்த போது மார்லன் என்ற கைதி விஷேட அதிரடிப் படையினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதனையடுத்து வேறு பல கைதிகளும் வாக்குவாதப்படத் தொடங்கினர். கைதிகளின் நடவடிக்கைகள் அளவுக்கு மீறிப் போகத் தொடங்கவே நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டன என்றும் சிறைச்சாலைகள் ஆணையாளர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

இதனையடுத்துக் கைதிகள் செங்கற்களால் விஷேட அதிரடிப் படையினரைப் தாக்கத் தொடங்கினர். புதிய கட்டடமொன்றினை நிர்மாணிப்பதற்காக அங்கு கொண்டு வந்து போடப்பட்டிருந்த செங்கற்களைக் கொண்டே விஷேட அதிரடிப்படையினரைத் தாக்கத் தொடங்கினர். விளக்கமறியல் கைதிகளும் சேர்ந்து கொண்டு தாக்கத் தொடங்கியதால் நிலைமை மேலும் மோசமடைந்து. கைதிகளின் கை ஓங்கத் தொடங்கியது. சிறைச்சாலைக் கட்டடத்துக்குள் 25 சிறைக்காவலர்கள் சிக்கியிருந்தனர்.

கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசப்பட்டதால் ஆயுதக் களஞ்சியசாலைக்குக் காவலாக இருந்த சிறைக்காவலர்கள் பின்வாங்க நேரிட்டது. இது கைதிகளுக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. கைதிகள் சிலர் ஆயுதக்களஞ் சியசாலையின் கூரைக்கு மேலேறி உள்ளே இறங்கினர். வேறு சில கைதிகள் களஞ்சியசாலையின் சுவரை உடைத்துக் கொண்டு உள்ளே சென்றனர். மகஸீன் ரைப்பிள்கள் உட்பட 104 ஆயுதங்களைக் கைதிகள் கைப்பற் றினார்கள்.

மோதல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, சிறைச்சாலை தேநீர்ச்சாலையின் பயன்பாட்டுக்கென நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டியைக் கைப்பற்றிக் கொண்டு ஒன்பது கைதிகள் அதிலேறித் தப்பிச் செல்ல முயன்றனர். இவர்கள் மீது அதிரடிப் படையினர் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்க முச்சக்கர வண்டிக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த பதினொரு கைதிகள் தப்பிச் சென்றுவிட்டனர். இவர்களில் ஏழு பேர் மட்டுமே இதுவரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இதன் பின்னர் நிலைமை இன்னும் மோசமடைந்தது.

விஷேட அதிரடிப்படை அதிகாரி ஆர்.டபிள்யூ.ரணவன உட்பட 13அதிரடிப்படையினர் காயமுற்றனர். இரண்டாவது ஆயுதக் களஞ்சியசாலைக்குள் கைதிகள் உடைத்துச் செல்ல முயன்ற போது தான் இராணுவம் வரவழைக்கப்பட்டது. அந்தக் களஞ்சியசாலைக்குள் 300 ஆயுதங்களும், சுமார் ஆயிரம் ரவைகளும் வைககப்பட்டிருந்தன. வெள்ளிக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் ஒரு மணித்தியாலம் கடந்த நிலையிலேயே அதிரடிப்படையினர் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இனிமேலும் இவ்வாறான மோதல் சம்பவங்கள் நடக்காமல் தடுப்பதற்காக வெலிக்கடைச் சிறையிலுள்ள கைதிகள் பலரை யாழ்ப்பாணம், அங்குனுகொலபெலஸ்ஸ, யள்ளேகல ஆகிய இடங்களிலுள்ள திறந்தவெளிச் சிறைச்சாலைகளுக்கு அனுப்பவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு திட்டமிட்டு வருகிறது.

# இரு குளங்களை இணைக்கும் ஒரு வாய்க்கால் புனரமைப்பு

(தீவகம்)

விவசாயிகளின் கோரிக்கையினை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு வேலணை மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வேலணைக்குளம், கேணிக்கரைக் குளம் ஆகிய இரண்டு குளங்களையும் இணைக்கும் வாய்க்காலைப் புனரமைக்கும் ஆரம்ப நிகழ்வு கடந்த 19ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த ஆரம்ப நிகழ்வில் வேலணை பிரதேசசபையின் தவிசாளர் சி.சிவராசா, வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன் உட்படப் பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்

(தீவகம்)

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 70க்கு மேல் புள்ளிகளைப் பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் கடந்த 20ஆம் திகதி திங்கட்கிழமை பாடசாலை வளாகத்தில் வைத்து கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் வேலணைப் பிரதேசசபையின் தவிசாளர் சி.சிவராசா, கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களையும் கல்வி கற்பிப்பவர்களையும் பாராட்டி உரையாற்றினார்.

# வேலணையில் உள்ளூராட்சி வார இறுதிநாள் நிகழ்வு நேற்று

(தீவகம்)

வேலணைப் பிரதேசசபையின் உள்ளூராட்சி வார இறுதிநாள் விழா நேற்று 20ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வேலணைப் பிரதேசசபை வளாகத்திலுள்ள கலையரங்கில் நடைபெற்றது.

வேலணைப் பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பா.ஜெயகரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன், தீவகக் கல்வி வலயப் பணிப்பாளர் ஐ.ஜோன்குயின்றஸ் ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

பிரதேசசபையின் செயலாளர் செ.ரமேஷ் கருத்துரையினையும், உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகள் தொடர்பான உரையினை ப.பாலசுப்பிரமணியமும் நிகழ்தினர்.

பிரதேச சபையின் எல்லைக்குள் சிறந்த வாசகர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளுடன் சிறந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட டனர்.

# 29ஆம் திகதி கிளிநொச்சி நகர காணி உரிமையாளர்களுக்கான செயலமர்வு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர கிராம சேவையாளர் பிரிவில் காணி உத்தரவுப் பத்திரம் இல்லாத காணி உரிமையாளர்களுக்கான காணிச் செயலக அமர்வு எதிர்வரும் 29 ஆம் திகதி கிளிநொச்சி நகர் கிராம அலுவலர் செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராம அலுவலர் பிரிவில் காணி உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான காணிச் செயலக அமர்வு டிசம்பர் மாதம் 18ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே இவ்வாறான காணிச் செயலக அமர்வுகள் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் உதயநகர் மேற்கு, திருவையாறு, ஆனந்தபுரம், ஆனைவிழுந்தான், கனகபுரம், திருநகர் தெற்கு, உருத்திரபுரம் கிழக்கு, பெரியபரந்தன், திருநகர் வடக்கு, உருத்திரபுரம் மேற்கு முதலான கிராம சேவையாளர் பிரிவுகளில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கட்டாக்காலிகளைப் பிடிக்க நடவடிக்

(தீவகம்)

வேலணை பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட இடங்களில் கட்டாக்காலிகளாகத் திரிந்து விவசாயிகளினது பயிர்வகைகளை அழித்து வருகின்ற ஆடு, மாடுகளை உடனடியாக பிடிப்பதற்கான உத்தரவை வேலணைப் பிரதேசசபை நிர்வாகம் விடுத்துள்ளது.

இதனடிப்படையில் கட்டாக்காலிகளாகத் திரிந்து பயிர்வகைகளை அழித்து வருகின்ற ஆடு, மாடுகளைப் பிடிப்பதற்கான ஆட்களையும் தெரிவு செய்து அவர்களுக்கான அனுமதிப்பத்திரங்களையும் வழங்கியுள்ளது. உத்தரவுப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளாதவர்கள் எவருமே இந்த ஆடு, மாடுகளைப் பிடிக்க முடியாதெனவும், அவ்வாறு பிடிப்பவர்கள் மீது சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் பிரதேச சபையின் தலைவர் அறிவித்துள்ளார்.

# மனைவி, பிள்ளைகளை துன்புறுத்தியவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை

(கிளிநொச்சி)

நித்தம் மதுபோதையில் வந்து மனைவி பிள்ளைகளை அடித்தும், தகாத வார்த்தைகளினால் பேசியும் துன்புறுத்தி வந்த எட்டுப் பிள்ளைகளின் தந்தை ஒருவர் வீட்டில் யாரும் இல்லாதவேளை வீட்டு முற்றத்தில் உள்ள வேப்பமரத்தில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இச் சம்பவம் கிளிநொச்சி உதயநகர் கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

மரணமானவர் செல்லையா புஸ்பராசா (வயது 53) என்பவராவார். இம் மரணம் தொடர்பான மரண விசாரணையை கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே.திருலோகமூர்த்தி மேற்கொண்டார்.

மரணமானவரின் மனைவியான திருமதி புஸ்பராசா யோகேஸ்வரி (வயது 48), மகன் புஸ்பராசா டனோசன் (வயது 11), உறவினர்களான அமிர்தலிங்கம் டிலானி (வயது 17), வேலன் செல்வராசா (வயது 50) ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

பிரேத பரிசோதனையை கிளிநொச்சி சட்டவைத்திய அதிகாரி டாக்டர் வாசுதேவா மேற்கொண்டார். தற்கொலை மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

# ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய நிர்வாகிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவின் அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய பொதுக் கூட்டம், கரைச்சி பிரதேச செயலகக் கணக்காளர் ப.லுவேந்திரன் தலைமையில் இடம்பெற்றபோது புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவானார்கள்.

தலைவர் அ.கனகரத்தினம், உப தலைவர் இ.இராசரத்தினம், செயலாளர் நா.யோகராணி, பொருளாளர் சி.சந்திரராசா, உப செயலாளர் சி.சின்னத்தம்பி ஆகிய ஆறு பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகவும் தெரிவானார்கள்.

இப்பொதுக் கூட்டத்தில் கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட செயலகக் கணக்காளர் கில்பேட் குணநாயகம் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பினத்தனர்.

# ஆசிய மனித உரிமை ஆணைக்குழு குற்றச்சாட்டு

நீதித்துறையின் மீது நிறைவேற்று அதிகாரம் அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக ஆசிய மனித உரிமை ஆணைக் குழு குற்றஞ் சாட்டியுள்ளது.

தனிப்பட்ட நபர்களின் மீதான தாக்குதலாக இதனைக் கருதக் கூடாது, இதனை நீதிமன்றக் கட்டமைப்பின் மீதான தாக்குதலாகக் கருத வேண்டும்.

நாட்டின் நீதித்துறையை பாதுகாக்க உச்ச நீதிமன்ற நீதியரசர்கள் முயற்சி எடுத்தால் அதற்கு ஏனைய பொதுமக்களும் ஆதரவளிப்பார்கள்.

நீதியரசர்கள் சிந்தித்து சரியான தீர்மானங்களை எடுக்க வேண்டிய அவசியமானது எனவும் ஆசிய மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

# வன்னியில் குழந்தைகள் மரண வீதம் அதிகரிப்பு: விசாரணை அதிகாரி தகவல்

கிளிநொச்சி

வன்னிப் பகுதியில் சிசு மற்றும் குழந்தைகள் இறப்பு விகிதம் அதிகரித்து வருவதாக கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே. திரலோகமூர்த்தி தமிழ்நாதத்துக்கு குறிப்பிட்டார்.

இதில் சட்ட விரோதமாக கருத்தரிப்பு கற்பத்தை மறைத்து உரிய சிகிச்சைகளுக்கு சென்று சிகிச்சை பெறாமல் பிறந்து இறக்கும் சிசுக்களும் அடங்குவதாக குறிப்பிட்டுள்ள சிரேஷ்ட மரண விசாரணை அதிகாரி டாக்டர் திருலோகமூர்த்தி இது விடயத்தில் பெண்கள் விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் மருத்துவ மாதுக்களின் கண்காணிப்பும் ஒவ்வொரு பிரிவுகளிலும் அதிகரிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

தொழில் இன்மை யுத்தத்தில் கணவன் மாரை இழந்து நிக்கதியான நிலைமை வறுமை போன்றவற்றை பயன்படுத்தி பல பெண்கள் ஆண்களால் ஏமாற்றப்பட்டு கற்பவதியாகும் சம்பவங்களும் கூடிச் செல்கிறது இது தொடர்பில் கிராம ரீதியாக விழிப்புணர்வு செயற்பாடுகள் அதிகரிக்க வேண்டும் எனவும் பொலிஸாரின் நடவடிக்கைகள் துரிதப்படுத்த வேண்டும் எனவும் மரண விசாரணை அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# பலஸ்தீன விவகாரத்தில் ஐ.நா. உடனடியாக தலையிட வேண்டும்

## - இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை

பலஸ்தீன் மக்களுக்கு எதிராக இஸ்ரேல் படையினரால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக பிரார்த்திக்குமாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனால் ஐந்துவேளை தொழுகைகளின் போதும் பிரார்த்திக்குமாறு அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பொதுச் செயலாளர் மௌலவி எம்.எம். ஏ.முபாரக் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மௌலவி எம். எம்.ஏ.முபாரக் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பலஸ்தீனத்தின் அப்பாவி மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து மேற்கொள்ளப்படுகின்ற இஸ்ரேலின் பயங்கரவாத தாக்குதல்களை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.



இந்த தாக்குதல் களை தடுத்து நிறுத்தி பிராந்தியத்தில் அமைதியை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக் தலையிட வேண்டும்.

இதற்கு எதிராக மத்திய கிழக்கு பிராந்தியத்திற்கு இஸ்ரேல் ஓர் அச்சுறுத்தலான நாடு என்பதை மீண்டும் நிருபித்து விட்டது.

எத்தனை தீர்மானங்களை ஐக்கிய நாடுகள் நிறைவேற்றிய போதிலும் அவை பயனற்று போனமையானது மிகவும் வேதனைக்குரியதாகும்.

பலஸ்தீன் மக்களின் பாதுகாப்பும் சுதந்திரமுமே சர்வதேச அமைதிக்கும் குறிப்பாக மத்திய கிழக்கின் அமைதிக்கும் வழிவகுக்கும் என்பது சர்வதேசம் ஏற்றுக்கொள்கின்ற விடயமாகும்.

பலஸத்தீன் பூமியை கபளீகரம் செய்து பைத்துல் முகத்தஸை சூழ அகழிகள் வெட்டியது மாத்திரமன்றிஅங்குள்ள முஸ்லிம்களை கொலை செய்யும் யூதர்கள் கண்டிக்கப்பட வேண்டும்.

இது உலகிலுள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் சொந்தமான பூமியாகும்.

இதற்காக பிரார்த்திப் பதும் அதிக கவனம் செலுத்துவ தும் அனைத்து முஸ்லிம்களி னதும் கடமையாகும்" என்றார்.

# இலங்கையில் பாலியல் தொழிலை சட்டரீதியாக்க தென்மாகாணசபை யோசனை

இலங்கையின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக பாலியல் தொழிலை சட்டரீதியான தொழிலாக மாற்றுமாறு தென் மாகாணசபையின் ஆளுங் கட்சி உறுப்பினர் அஜித் பிரசன்னவினால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த யோசனையானது தென் மாகாணசபையின் யோசனையாவே முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த தொழிலுக்கு உள்நாட்டில் ஆளணி குறைபாடு காணப்படின் வெளிநாடுகளிலிருந்து அதற்காக பணியாளர்களை வருவிக்குமாறும் அந்த யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்கனவே சுமார் 40 ஆயிரம் பேர் பாலியல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் மாகாணசபை உறுப்பினர் தனது யோசனையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றுலாத்துறையின் எஸ் 3 வேலைத்திட்டத்தில் உள்ளடங்கும் கடல் மற்றும் சூரிய ஒளி திட்டத்துக்குள் தனது யோசனை உள்ளடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மாகாணசபை நிதி-யொ துக்கீட்டின் கீழ் தென்கொரியா உள்ளிட்ட சில நாடுகளில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்காக அண்மையில் இந்த தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதையும் அவர் தனது யோசனையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# மாவிட்டபுரத்தில் திருக்கார்த்திகைத் திருநாள்

(வலிகாமம்)

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருக்காார்த்திகைத் திருநாள் குமாராலயதீபம் எதிர்வரும் 27 ம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 2.00 மணிக்கு ஸ்நபன பிஷேகமும்,

3.00 மணிக்கு சாய ரட்சைப் பூசையும், 3.30 மணிக்கு ஷண்முகார்சனையும், 5.00 மணிக்கு இரண்டாம் காலப் பூசையும் தொடர்ந்து 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், சுவாமி வெளிவீதிவலம் வருதல், சொக்கப்பானை எரித்தல் என்பனவும் இடம் பெறவுள்ளன.

# கல்வி வழிகாட்டல் கருத்தரங்கு

வலிகாமம்

யாழ். வலய கல்வித் திணைக்களப் பிரிவில் மூன்று பாடசாலைகளில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் ஏற்பாட்டில் கா.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குக் தோற்றவுள்ள மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு நடாத்தப்பட்டுள்ளன.

கடந்த 14 ஆம் மற்றும் 15 ஆம் திகதிகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி மற்றும் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி ஆகிய பாடசாலைகளில் நடைபெற்றன.

யாழ்ப்பாணம், நல்லூர் மற்றும் கோப்பாய் கோட்ட மாணவர்களுக்கு மேற்படி பாடசாலைகளின் கருத்தரங்குகள் நடைபெற்றன.

## கடனட்டை மோசடி:

# ரஷ்ய சந்தேக நபர்களை தூதரக அதிகாரிகள் சந்திப்பு

கடன் அட்டை மோசடி தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் இலங்கையில் கைதுசெய்யப்பட்ட 5 ரஷ்யப் பிரஜைகளையும் ரஷ்ய தூதரகப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்துள்ளனர். இதன்போது இவர்கள் ரஷ்யப் பிரஜைகள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளனர்.

250 போலிக் கடன் அட்டைகளுடன் இந்த 5 ரஷ்யப் பிரஜைகளும் கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இந்த விடயம் தொடர்பில் இலங்கை அதிகாரிகளிடமிருந்து எந்தவித உத்தியோகபூர்வ தகவல்களும் கிடைக்கவில்லை என ரஷ்யத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த 5 ரஷ்யப் பிரஜைகளும் கம்போடியா மற்றும் வியட்னாமைச் சேர்ந்த பங்காளிகளுடன் இணைந்து இலங்கையிலுள்ள தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரம் ஒன்றிலிருந்து பெற்ற 25,000 அமெரிக்க டொலருடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.

தாங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையின் நிலைமை தொடர்பில் இந்த சந்தேக நபர்கள் எதுவும் தெரிவிக்கவில்லை எனவும் ரஷ்யத் தூதரகம் தெரிவித்துள்ளது.

# ஐ.நா.வின் உள்ளக அறிக்கைக்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டுமாம்

## ஐ.தே.க. சொல்கிறது

ஐக்கிய நாடுகள் சபையினால் அண்மையில் வெளியிடப்பட்ட உள்ளக அறிக்கை தொடர்பில் சர்வதேசத்துக்கும், நாடாளுமன்றத்துக்கும், இந்த நாட்டு மக்களுக்கும், அரசாங்கம் உடன-டியாக பதிலளிக்க வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.



கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஐ.தே.க.வின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க, இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஏற்பட்ட சம்பவங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் அண்மையில் உள்ளக அறிக்கையொன்று வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மனோ கணேசன் கேள்வி

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கிமூனும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் இணைந்து வெளியிட்ட ஐநா - இலங்கை அதிகாரப்பூர்வ கூட்டறிக்கையில், பதின்மூன்றாம் திருத்தத்தை அமுலாக்குவதாக கூறப்பட்ட வாக்குறுதிகளுக்கு என்ன நடந்தது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார். தனியார் தொலைக்காட்சி ஒன்றின் அரசியல் விவாத நிகழ்ச்சியில் கலந்துகொண்டபோதே ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஐ.நா. - இலங்கை அதிகாரப்பூர்வ கூட்டறிக்கையில், பதின்மூன்றாம் திருத்தத்தை அமுலாக்குவதாகவும், அத்துடன் தமிழ் கட்சிகள் உட்பட ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி பதின்மூன்றாம் திருத்தத்தை மேலும் அபிவிருத்தி செய்வதாகவும் மிக தெளிவாக சொல்லப்பட்டுள்ளது.

அரசியல் அமைப்பின் அங்கமான பதின்மூன்றாம் திருத்தம், இதே அரசியலமைப்புக்கு முரணானது என்று சொல்கிறீர்கள். அப்படியானால், இதை உயர் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லுங்கள். விமல் வீரவன்ச இது தொடர்பில் உயர் நீதிமன்றம் செல்வேன் என்று சொல்லி விட்டு பின் ஏன் பின் வாங்கினார்.

திவிநெகும சட்டமூலத்துக்கு நீதிமன்றம் சென்றதைப்போல, இதற்கும் நாம் தயாராகத்தான் இருந்தோம். நீங்கள் ஏன் நீதிமன்றத்துக்கு போகவில்லை? நீங்கள் இது தொடர்பில் வழக்குகள் போடுவீர்களானால் உங்கள் அரசாங்கத்துக்குத்தான் அரசியல் நெருக்கடிகள் அதி-கரிக்கும். முடிந்தால் அதை செய்யுங்கள். இந்த திருத்தம் இந்தியாவின் அழுத்தத்தால், அவசர, அவசரமாக கொண்டு வரப்பட்டது என சொல்கிறீர்கள் என அவர் மேலும் கூறினார்.

தமிழ்நாதம்
Thamil Naatham

நவம்பர் மாதம் 21ஆம் திகதி புதன்கிழமை

# பதின்மூன்றா? பத்தொன்பதா?

பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தை நீக்குவது தொடர்பான பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கென மாகாண மட்டத்தில் அதிகாரங்களைப் பகிர்வதற்கென கொண்டுவரப்பட்டதே பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தமாகும். இலங்கையில் ஜே.ஆர். ஜெயவர்தனா ஜனாதிபதியாகவும், இந்தியாவில் ராஜீவ்காந்தி பிரதமராகவும் இருந்த காலத்தில் செய்து கொள்ளப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மூலம் கொண்டு வரப்பட்டதே மாகாண சபை. இன்னொரு வார்த்தையில் சொல்வதானால் இலங்கை - இந்தியா என்ற இரண்டு நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இது. அதாவது இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமே இது என்று பல தரப்பட்ட விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

இலங்கையை இரத்தக் காடாக மாற்றிக் கொண்டிருந்த யுத்தத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கிலேயே இந்த மாகாணசபை முறைமை கொண்டு வரப்பட்டது. இருந்தும் தென்னிலங்கையில் மட்டுமல்ல, வடக்கு, கிழக்கிலும் இந்த ஒப்பந்தத்திற்கு எதிராக போராட்டங்கள் வெடித்தன. அன்று பிரதான எதிர்க்கட்சியாக விளங்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்த்தது. தென்னிலங்கையில் ஆயுத சக்தியாக வளர்ந்து கொண்டிருந்த ஜே.வி.பி. ஆயுத முனையில் எதிர்ப்பைத் தெரிவித்தது. ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்குப் பின்னர் அதிகாரத்திற்கு வந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா இங்கு நிலை கொண்டிருந்த இந்தியப் படையை வெளியேறுமாறு உரத்துக் குரல் கொடுத்தார்.

இந்த ஒப்பந்தத்தையும், இந்தியப் படையையும் எதிர்த்த புலிகள் இயக்கம் ஆயுதத் தாக்குதல்களை நடாத்தியது. இருந்தும் அடிப்படையில் எதிரும் புதிருமான நோக்குகளை கொண்ட ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவும் புலிகள் இயக்கமும் சுமார் பதினான்கு மாதங்களாக தேனிலவு கொண்டாடினார்கள். இந்தியப் படை வெளியேறியபின் இலங்கை ஆயுதப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்கள் வெடித்தன. இந்த வகையில் நெருப்பில் பூத்த ஒப்பந்தம் என்று இதனை வர்ணிக்கலாம்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாகவே மாகாணசபை முறைமை முக்கியமாகக் கொண்டு வரப்பட்டது. ஆனால் 'இணைந்த வடக்கு கிழக்கில் உருவான மாகாணசபை கருவிலேயே கலைந்துபோய் விட்டது. மாகாணசபை முறைமையை வெறும் வெள்ளை யானை என்று வர்ணித்தவர்களும் இருக்கிறார்கள். மாகாண சபை முறைமை கடந்த கால் நூற்றாண்டு காலமாக அமுலில் இருந்து வருகிறது. ஆனாலும் எந்த நோக்கத்துக்காக இந்த முறைமை கொண்டு வரப்பட்டதோ அது நிறைவேறவே இல்லை.

இப்போது பத்தொன்பதாவது அரசியல் அமைப்புத் திருத்தத்தைக் கொண்டு வருவது பற்றி பரவலாகவே பேசப்படுகிறது. கிராம ராஜ்யம் அல்லது இந்தியாவைப் போன்ற பஞ்சாயத்து முறையே சிறந்தது என்கிறார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ. மாகாண சபை முறைமை அமுலுக்கு கொண்டுவரப்பட்டபொழுது கர்ணகடூரமாக எதிர்த்த தமிழர் விடுதலைக் கூட்டணி பின்னாட்களில் பொலிஸ், காணி அதிகாரங்கள் தேவை என்று வாய்கிழியக் கூப்பாடு போட்டது.

யுத்தம் உச்சம் பெற்றிருந்த காலத்தில் கொண்டுவரப்பட்டதே பதின்மூன்றாவது திருத்தம். இருந்தும் பதின்மூன்றாவது திருத்தத்தால் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படவும் இல்லை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவும் இல்லை. மாகாண சபைமுறைமை அமுலுக்கு வந்து இருபது வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கழிந்த நிலையில்தான் யுத்தம் முடிவுக்கு வந்தது. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக்கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கிறது.

யுத்தப் பாதிப்புக்கு உள்ளான மக்களை வாழ வைப்பதற்கான தேவையும் இருக்கிறது. மீள்கட்டுமான, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் காத்திரமான முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டிய தேவைகளும் இருக்கின்றன. நாட்டின் ஜனாதிபதி கூட மாகாணசபை முறைமைகளில் மாற்றம் செய்யப்பட வேண்டிய தேவைகள் குறித்து மேலோட்டமாகவேனும் சொல்லியிருக்கிறார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மாகாணசபை முறைமைக்குப் புறம்பான அதிகார அலகுபற்றி புதிய கருத்தொன்றினை முன்வைத்திருக்கிறார்.

ஒன்பது மாகாணங்களுக்குப் பதிலாக நான்கு அல்லது ஐந்து பிராந்தியங்களைக் கொண்ட அதிகாரப் பகிர்வு அலகுகளை மேற்கொள்வது நல்லதென்று சம்பந்தன் சொல்லியிருக்கிறார். சம்பந்தனின் கருத்துப்படி பார்த்தால் வடக்கையும் கிழக்கையும் இணைத்த ஒருபிராந்திய அலகை அவர் கோருகிறார் போல் தெரிகிறது. மன்னாரில் இருந்து மட்டக்களப்பு வரையிலான ஒரு பிராந்திய அலகாகச் சிலவேளைகளில் அவரது கோரிக்கை அமையக்கூடும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சிக்காலத்தில் கிழக்கின் சில பகுதிகள் சிங்களப் பிரதேசங்களோடு இணைக்கப்பட்ட சம்பவங்களும் இடம் பெற்றிருக்கின்றன. இனத்துவ மேலாதிக்க சிந்தனையோ அல்லது இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எடுக்கப்படும் நியாயமான முயற்சிகளுக்கு விரோதமாகச் செயற்படும் குழப்பங்காச்சி சந்தர்ப்பவாத அரசியல் செயல்பாடுகளோ இருக்கவே கூடாது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முயற்சி எடுக்கப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் குழப்பங்களில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் இருக்கிறார்கள்.

பதின்மூன்றுக்கு மேலதிகமாக அதிகாரங்களைக் கூட்டிக் கேட்டவர்களும் இருக்கிறார்கள். கொடுத்த அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டுமென்று சொன்னவர்களும் இருக்கின்றார்கள். அந்த நாடகமே மீளவும் தற்போது ஒத்திகை பார்க்கப்படுகிறது. நாட்டின் யதார்த்தச் சூழல், இனப் பிரச்சினைத் தீர்வு, யுத்தம் கற்றுத் தந்த பாடங்கள் எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு அனைத்து இன மக்களின் நிம்மதியான வாழ்வுக்கு ஒன்றிணைந்து முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்.

நாட்டின் ஐக்கியம், பிரதேச ஒருமைப்பாடு, தேசிய இனங்களின் நல்லிணக்கம் ஆகியவற்றுக்குப் பதின்மூன்று ஏற்படுத்தித் தந்த வாய்ப்புகள் போதா. அதனைக் கவனத்தில் எடுத்து பத்தொன்பதாவது திருத்தம் முன்வைக்கப்படுமானால் அது வரவேற்கப்படக்கூடியதாக இருக்கும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# ராஜீவ்காந்தி கொலையில் தனக்கு சம்பந்தம் இல்லை என்கிறார் கே.பி.

## கிளிநொச்சியில் வழங்கிய பேட்டியில் கே.பி. தகவல்



கிளிநொச்சியில் உள்ள கே.பி.இன் பாரதி இல்லத்தில் உள்ள பிள்ளைகளுடன் கே.பி. காணப்படுகிறார்.

*(நேற்றைய தொடர்ச்சி)*

**கேள்வி**: அது நல்லது. நன்றி. நான் உங்களிடம் நேரிடையாகவே கேட்க விரும்புகிறேன். ராஜீவ் காந்தியின் கொலையில் உங்கள் பங்கு என்ன? நீங்கள் அதில் சம்பந்தப் பட்டிருந்தீர்களா?

**பதில்**: இல்லை! ஆணித்தரமாக கூறுகிறேன் இல்லை! ராஜீவ் காந்தியின் கொலையில் நான் எந்த வழியிலும் தொடர்பு கொண்டிருக்கவில்லை.

**கேள்வி:** அதை நீங்கள் விபரமாக விளக்கமுடியுமா?

**பதில்:** அப்போதைய எல்.ரீ.ரீ.ஈயில் இருந்த பல்வேறு துறைகளுக்கும் ஒவ்வொரு கடமைப் பிரிவுகள் இருந்தன. ஒரு துறையில் மற்றொன்று தலையிட முடியாது. தமிழ் நாட்டு விவகாரங்கள் மற்றொரு பகுதியினரின் கீழ் இருந்தன. எனக்கு அதில் எந்த பங்கும் இருக்கவில்லை, மேலும் மற்றொரு துறையுடன் தொடர்பு கொள்வதைப் பிரபாகரன் அனுமதிக்க மாட்டார். அவரின் அனுமதியோ அல்லது கட்டளையோ இன்றி எங்களில் எவருக்கும் அப்படிச் செய்ய முடியாது.

**கேள்வி:** இருந்த போதிலும் உங்கள் கடமைகள் வித்தியாசமானது,பிரபாகரன் அப்படிச் செய்யும்படி கட்டளையிட்டிருந்தால் உங்களால் அதில் ஈடுபட்டிருக்க முடியும். அவர் அப்படிச் செய்தாரா?

**பதில்:** இல்லை. பிரபாகரன் அப்படி ஒருபோதும் எனக்குக் கட்டளை பிறப்பிக்கவில்லை. ஏனைய எல்.ரீ.ரீ.ஈ.த் தலைவர்களைப் போலவே எனக்கும் இவைகளைப்பற்றிய எந்த அறிவும் இல்லை. அப்போது லண்டனிலிருந்த கிட்டுவுக்குகூட இதுபற்றி எந்த அறிவும் கிடையாது. இந்தியாவுடனும் மற்றும் ராஜீவ் காந்தியுடனும் நல்ல தொடர்புகளை ஏற்படுத்தும்படி கிட்டுவிடம் பிரபாகரன் சொல்லியிருந்தார். எனவே கிட்டுவும் கவிஞர் காசி ஆனந்தன், மற்றும் பொருளாதார நிபுணர் அர்ஜூனா சிற்றம்பலம் போன்றவர்களை இந்தியாவுக்கு சென்று ராஜீவ் காந்தியை சந்திப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இவைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில்தான் பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகியோர் திட்டமிட்டு இந்தக் கொலையை நடத்தியிருக்க வேண்டும். பிரபாகரன் தனது இரகசிய வழிகளில் கை தேர்ந்தவர் மற்றும் இப்படியான ஒரு விடயத்தில் கண்டிப்பாக அவர் அநேகரை ஈடுபடுத்தியோ அல்லது தகவல்களை பரிமாறியோ இருக்க முடியாது. எனவே என்னிடத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

**கேள்வி:** அப்போது நீங்கள் ஆயுதங்களை சேகரிக்கும் பணியில் ஈடுபாட்டிருந்தீர்கள். உங்கள் வெளிநாட்டு கொள்வனவுத் துறை அப்போது "கே.பி.யின் துறை" எனப் பெயர் பெற்றிருந்தது. அந்தத் துறையின் முக்கியத்துவத்தை கருதும்போது நீங்கள் அதில் தொடர்பு கொள்ளாமல் இருந்திருக்க முடியாது அல்லது குறைந்த பட்சம் அந்த வளையத்துக்குள்ளாவது இருந்திருக்க வேண்டும்?

**பதில்:** இப்படியான ஒரு நடவடிக்கைக்கு என்னுடையதும் மற்றும் என்னுடைய துறையினதும் ஈடுபாடு அவசியமற்ற ஒன்று. கொலைகள் யாவும் பொட்டனின் தலைமையின் கீழுள்ள உளவுத்துறையினரின் கீழ் வருகிறது. மேலும் ஆயுத விநியோகத்தை உறுதிபடுத்தும் எனது பங்கு இயக்கத்துக்கு அப்போது மிகவும் இன்றிமையாத ஒன்றாக இருந்தது. அந்த நேரத்தில் எனது துறைக்கும் எனக்கும் பிரச்சனைகள் ஏற்படுத்தும் விதத்தில் என்னைத் தொடர்பு படுத்தி ஆபத்தை உருவாக்கும் முயற்சியில் பிரபாகரன் இறங்கியிருக்க மாட்டார்.

**கேள்வி:** கொலை நடந்த சமயம் நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?

**பதில்:** அந்தச் சயத்தில் நான் இந்தியாவுக்கும் மற்றும் தென் கிழக்காசிய நாடுகளுக்கும் இடையே பறந்து கொண்டிருந்தேன். அப்போது என்னுடைய செயற்பாடு வெளிநாடுகளிலிருந்து ஆயுதங்களையும் வெடிபொருட்களையும் கொள்வனவு செய்து இயக்கத்துக்கு விநியோகிப்பதற்கு வேண்டிய வழிவகைகளை கண்டுபிடிப்பதாக இருந்தது. நான் இந்தியாவில் இருந்தபோதும்கூட எனது நேரத்தில் பெரும்பகுதியை பம்பாயிலேயே (இப்போது மும்பை) செலவழிப்பது வழக்கம். இந்தச் சம்பவத்துக்கு சில நாட்கள் முன்புதான் நான் இந்தியாவை விட்டு மலேசியாவுக்கு சென்றிருந்தேன்.

கேள்வி: ஏனெனில் இப்படியான ஒரு பாரிய சம்பவம் நடைபெறப்போகிறது என்பதை நீங்கள் அறிந்து அல்லது சந்தேகித்தபடியால்தான் அது நடைபெறுவதற்கு முன்னரே இந்தியாவை விட்டுத் தப்பி ஓடினீர்களா?

**பதில்:** இல்லை! அப்படியான எதுவும் இல்லை. பல வாரங்களுக்கு முன்னரே நான் செல்ல வேண்டிய திகதி தீர்மானிக்கப்பட்டு விட்டது, மற்றும் நான் இந்தக் கொலையுடன் தொடர்பு அற்றிருந்தேன்.

**கேள்வி:** ஆனால் இந்தியா உங்களை சர்வதேசக் குற்ற ஒழிப்பு காவல்துறையான இன்ரபோலுக்கு வேண்டப்பட்டவர்களின் பட்டியலில் ஏன் இட்டது? உங்கள்மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள், வாழ்க்கை மற்றும் ஆரோக்கியம், பயங்கரவாதம், தீவிரவாதம் மற்றும் ஆயுதங்கள் வெடிமருந்துகள் என்பனவற்றைக் கொண்டு செய்யப்படும் குற்றங்களில் ஈடுபடுட்டது - பின்னர் அது ராஜீவ் காந்தியின் கொலைச் சம்பவத்துடன் தொடர்புபட்ட ஒன்றில்லையா?

**பதில்:** இதற்கான பதில் ஆம் மற்றும் இல்லை என்பதேயாகும். ஆம் என்பது ஏனெனில் அது ராஜீவ் சம்பவத்துடன் தொடர்பு பட்டதுதான், இல்லை என்பது ஏனெனில் அந்தக் கொலையில் எனக்கு தொடர்பு இருப்பதானால் அல்ல அது இடப்பட்டது.

**கேள்வி:** உண்மையில் நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்? அதை மேலும் விளக்க முடியுமா?

**பதில்:** அந்தக் கொலையில் எனக்கு பங்கில்லை என்று இந்திய சி.பி.ஐ யினருக்குத் தெரியும். அதனால்தான் ராஜீவ் காந்தியின் கொலை சம்பந்தமாக இந்திய நீதிமன்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகையில் எனது பெயர் இடம்பெறவில்லை. அதனால்தான் அவரைக் கொலை செய்ய மேற்கொண்ட சதி முயற்சியில் கூட ஒரு குற்றவாளியாக என்னை அறிவிக்கவில்லை.

**கேள்வி:** அப்படியானால் ஏன் இந்தியா உங்கள்மீது ஒரு இன்ரபோல் குற்ற அறிக்கையை வெளியிட்டது? அது ராஜீவ் காந்தியின் கொலை சம்பவம் தொடர்பானது என நீங்கள் சொன்னீர்கள் சரிதானே?

**பதில்:** சரி. இந்தக் கொலையை சி.பி.ஐ விசாரித்தபோது சில குறிப்புகளுக்கு என்னிடம் விளக்கம் கேட்பது அவசியம் என அவர்கள் நினைத்தார்கள். கொலை சம்பந்தமான ஜெயின் ஆணைக்குழுவின் விசாரணைகளிலும் இது பிரதானப்படுத்தப் பட்டிருந்தது. ஆனால் நான் இந்தியாவுக்கு வெளியில் இருந்து இடத்துக்கு இடம் நகர்ந்து கொண்டிருந்தபடியால் அவர்களால் என்னை அணுக முடியவில்லை. என்னுடைய இருப்பிடங்கள் யாருக்கும் தெரியாதவைகளாகவே இரந்தன. அதனால்தான் அவர்கள் ஒரு இன்ரபோல் அறிவிப்பை வெளியிட்டார்கள். அவர்கள் என்னை விசாரிக்க விரும்பினார்கள்.

**கேள்வி:** இந்தியா உங்களை விசாரிக்க விரும்புகிறது என்கிற கேள்வி எழும்போது, சில இந்திய அதிகாரிகள் உண்மையில் ராஜீவ் காந்தியின் கொலை சம்பந்தமாக உங்களை விசாரித்ததாக சமீபத்தில் இந்திய ஊடகங்களில் ஒரு செய்தி இடம்பெற்றிருந்தது. அப்படி ஏதாவது நடந்ததா?

**பதில்:** ஆம் அப்படி நடைபெற்றது. இந்திய ஊடகங்கள் சொல்வதுபோல அது சமீபத்தில் நடைபெறவில்லை. மேலும் ஒரு தடவையல்ல அது இரண்டுமுறை இடம்பெற்றது.

**கேள்வி**: எப்போது அது நடைபெற்றது? எப்போது நீங்கள் இந்திய அதிகாரிகளின் விசாரணைக்கு உள்ளானீர்கள்?

**பதில்:** அது 2010 பிற்பகுதியில் ஒரு முறையும் மற்றும் திரும்பவும் 2011 முற்பகுதியில் ஒரு முறையும் நடைபெற்றது. அது இடம்பெற்ற மாதங்கள் எனக்கு சரியாக நினைவில்லை.

(நாளை தொடரும்)

# கூடங்குளம் அணு மின்நிலையத்தால் இலங்கை மக்களுக்கும் பாதிப்பு



கூடங்குளம் அணு மின்நிலையம்.

"கூடங்குளம் அணுமின் நிலையத்தின் அன்றாட இயக்கத்தினால் புற்றுநோய் உட்படப் பல பாதிப்புகள் ஏற்படும். அந்த மின் நிலையத்தில் விபத்து நேரும் பட்சத்தில் ஏற்படக் கூடிய அழிவுகள் 220 கிலோ மீற்றர்களுக்கு அப்பாலுள்ள இலங்கை மக்களுக்கும் பாரிய அச்சுறுத்தலாக அமையும்" என்று புதிய ஜனநாயக மார்க்சிச- லெனினிசக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்த அணுமின் நிலைய நிர்மாணத்தை ஆட்சேபித்தும், இதனால் இலங்கைமக்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்களை மக்களுக்கு உணர்த்தும் வகையிலும் கடந்த வாரம் மேற்படி கட்சி யாழ்.நகரில் ஆர்ப்பாட்டமொன்றினை நடத்தியது. கூடங்குளம் அணுமின் நிலையம் தொடர்பாக இந்தக் கட்சி வெளியிட்டிருக்கும் அறிக்கை வருமாறு:

தென்னிந்தியாவின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கூடங்குளம் என்னும் இடத்தில் அமையவுள்ள அணு உலைகளின் தொகுதியே கூடங்குளம் அணுமின் நிலையமாகும். இங்கே தற்போது இரண்டு அணு உலைகள் அமையவுள்ளன. எதிர்காலத்தில் மேலும் நான்கு அணு உலைகளை இந் இடத்தில் அமைப்பதற்கான திட்டங்கள் உள்ளன. கூடங்குளம் அணு மின் நிலையமானது இலங்கையின் வடக்கு, வடமேற்கு கரையோரத்தில் இருந்து 220 கிலோ மீற்றருக்கு உட்பட்ட குறுகிய தூரத்தில் அமைத்திருக்கிறது.

கதிரியக்கம் (Radiation) எனப்படுவது சிலவகை மூலகங்கள் தம்மகத்தில் இருந்து கதிர்களை வெளியிடுகிற செயற்பாடாகும். இக் கதிரியக்கமானது பயங்கரமான புற்றுநோய்கள் உட்படப் பல்வேறு கொடிய நோய்களை மனிதருக்கும் ஏனைய உயிரினங்களுக்கும் ஏற்படுத்த கூடியதாகும்.

அணு உலைகளில் ஆபத்தான கதிர்களை வெளியிடும் யுரேனியம் மூலப்பொருள் ஆனது அதைவிடப் பயங்கரமான கதிரியக்கம் கொண்ட புளூட்டோனியமாக மாற்றப்படும் பொழுதே வெளிவிடப்படும் வெப் பத்தைக் கொண்டு நீராவியை உருவாக்கி, மின்பிறப்பாக்கிகளை சுழற்றுவதன் மூலம் மின்சாரம் உரு வாக்கப்படுகின்றது.

அணு உலை ஒன்று இயங்கும்போது அதன் சுற்றுச்சூழல் யுரேனியம் மூலப்பொருளினரும், புளூட்டோனியம் கழிவினதும் கொடிய கதிரியக்க அபாயத்தினைக் கொண்டிருக்கிறது. அணு உலைகளில் விபத்துக் கள் நடந்தால் மட்டும்தான் பாதிப்புக்கள் உருவாகும் என்றில்லை. அணு உலையின் அன்றாட இயக்கம் காரணமாக ஏற்படக் கூடிய கதிரியக்க கழிவுகள் உயிரினங்களில் புற்றுநோய், பல அபாயங்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய பாதிப்புக்கள் ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டப் பட்டிருப்பதுடன் இச் செய் திகளை ஒவ்வொரு நாடுகளினதும் அரசாங்கங்கள் இருட்டடிப்புச் செய்தும் வருகின்றன.

### அணு உலை விபத்துக்கள்

2011ல் ஜப்பானின் ஃபுகுஷிமா அணு உலைகளில் சுனாமி காரணமாக ஏற்பட்ட விபத்து நாம் அனைவரும் அறிந்ததொன்றாகும். விபத்து ஏற்பட்டதுடன் ஜப்பானிய அரசு அணு உலையைச் சுற்றி 30 கிலோமீற்றர் தூரத்தில் வசிக்கும் அனைவரையும் அகற்றியது. அமெரிக்க அரசோ 80 கிலோமீற்றர் சுற்று வட்டாரத்தில் வசிக்கும் அனைத்து அமொிக்கப் பிரஜைகளையும் அகலச் சொன்னது. ரஷ்யாவின் சொர்னோபில் அணு உலை விபத்துக்குள்ளான போது பல 100 கிலோமீற்றர்களுக்கு கதிரியக்கம் பரவிப் பாதிப்புக்களை உருவாக்கியது. விபத்துக்களின்போது வெளியேறிய கதிரியக்கத்தினால் பலர் உடனடியாகவே கொல்லப்படுவதோடு மேலும் பலர் நீண்டகால நோய்களுக்கு ஆட்பட்டு மெல்லமெல்ல இறந்து போவர். விபத்து நடந்த இடங்கள் உயிரின வாழ்க்கைக்கு பொருத்தமற்றதாக மாறும்.



கூடங்குளம் அணுஉலைக்கு எதிராக இடிந்தகரை மக்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம்.

சுனாமி, நிலநடுக்கம், எரிமலை வெடிப்புக்கள் போன்றவை அணு உலை விபத்துக்களை ஏற்படுத்தவல்ல இயற்கை காரணிகளாகும். இவைதவிர அணு உலையில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகளும் பாரிய விபத்துக் களை ஏற்படுத்தக் கூடும்.

### அணுமின்சக்தி யாருக்காக?

மக்களுக்காக அல்ல

நாடொன்றின் பொருளாதார வளர்ச்சி, மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக ஏற்படும் அதியுயர் மின்சார தேவையைச் சமாளிப்பதற்கு அணுமின் சக்தியானது இன்றியமையாதது என்று நம்ப வைக்கப்படுகின்றது. இந்த வளர்ச்சிக்கு, மக்களது நல்வாழ்வின் பாதுகாப்பையும், சுற்றுச்சூழலின் நல்லிருப்பையும் விலையாகக் கொடுக்க வேண்டுமா என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். அணு உலைகளை மூன்றாம் உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து மிகக் கொழுத்த இலாபம் சம்பாதிக்கும் அணுத் தொழில்நுட்பக் கம்பனிகள் தமது இலாபப் பெருக்கத்திற்காக அதிகளவு பணத்தைச் செலவிட்டு பரப்புரைகளை மேற்கொள்கின்றன அரசாங்கங்களையும் அச்சுறுத்திப் பணியவைக்கின்றன என்பதையும் நாம் உணர வேண்டும்.

வளர்ச்சிக்கு இன்றியமையாத தேவையாக அணுமின்சக்தி இருக்குமானால், வளர்ச்சியடைந்த நாடுகள் ஏன் தம் நாட்டு அணு உலைகளை மூடத் தொடங்கியிருக் கின்றன? ஆஸ்திரியா, பெல்ஜியம், ஜப்பான், இத்தாலி, சுவீடன், சுவிற்சர்லாந்து போன்ற நாடுகள் தமது நாட்டு அணு உலைகளை மூடுவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

### கூடங்குளம் அணு மின் நிலையத்தால் இலங்கை மக்களுக்கு என்ன பாதிப்பு?

இலங்கையின் வடக்கு, வடமேற்கு, மேற்குக் கரையோரங்களிலும் திருகோணமலையிலும் கண்டியிலும் காலியிலும் கூட கதிர்வீச்சைக் கண்காணிக்கும் கருவிகள் 12 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்பட வுள்ளன. இது அணு உலை ஒன்றின் கதிர்வீச்செல்லையினை நன்கு எடுத்துக் காட்டும் செய்தியாகும்.

கூடங்குளம் அணு உலையின் அன்றாட இயக்கத்தினால் ஏற்படக்கூடிய புற்றுநோய் உட்பட்ட பாதிப் புக்களும், விபத்தொன்று நேரும் பட்சத்தில் ஏற்படக்கூடிய அழிவுகளும் 220 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள இலங்கை மக்களுக்குப் பாரிய அச்சுறுத்தலாகும்.

கூடங்குளம் மின் நிலையம் அமைந்துள்ள பகுதி, நிலநடுக்கம், எரிமலை வெடிப்பு, சுனாமி போன்ற அபாயங்களைக் கொண்டுள்ள இடமாகும்.

கடற்கரை ஓரமாக அமைந்துள்ள அணு உலைகளைக் குளிர்விக்கக் கடல் நீரே பயன்படுத்தப் படவுள்ளது. உரிய முற்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று இந்திய அரசு உறுதியளிக்கின்றதாயினும், ஊழலும் கவனக்குறைவும் மலிந்த நாடொன்றில் எவ்வளவு அக்கறையுடன் நீண்ட காலத்தில் இம்முன்னேற்பாடுகள் கவனிக்கப்படும் என்பது கேள்விக்குரியது.

கடல் நீரில் கதிரியக்கம் கலக்கும் பட்சத்தில் இலங்கையின் வடக்கு, வடமேற்கு மீன்வளம் கதிரியக்கப் பாதிப்புக்குள்ளாகும். இது மீன்பிடித் தொழிலினை அடியோடு ஒழிப்பதுடன் இந்த இடங்களில் பிடிக்கப் படும் மீன்களை உண்பவர்களுக்கு புற்றுநோய் உட்பட்ட பாரிய சுகாதாரக் கேடுகளை உருவாக்கும்.

கூடங்குளம் அணு மின் நிலையத்தின் கழிவான கொடிய புளூட்டோனியத்தினை ரஷ்யாவுக்கு மீள எடுத்துச் செல்லவதாகவே தொடக்க கால ஒப்பந்தம் இருந்தது. எனினும் தற்போது அவ் ஒப்பந்தம் கைவிடப்பட்டு, கொடியழிவுகளை இந்தியாவே கையாள வேண்டும் என்று ஆகியிருக்கிறது. இக் கழிவினை புதைத்து வைக்கப் பாதுகாப்பான இடமாக மன்னார் வளைகுடாப் பகுதி தெரிவு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கசிகின்றன. இத் தகவல் உண்மையாக இருக்கும் பட்சத்தில் இலங்கை மக்கள் தீவிர அச்சுறுத்தலுக்கு உள்ளாவார்கள்.

இவ்வாறு புதைக்கப்படும் கொடிய புளூட்டோனியம் கழிவு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு கதிரியக்கத்தினை வெளியேற்றிய வண்ணம் இருக்கும். இது எப்போது வேண்டுமானாலும் வெடிக்கக் காத்திருக்கும் அணுகுண்டு ஒன்றினை மடியில் கட்டிக்கொண்டிருப்பதற்குச் சமனாகும்.



கூடங்குளம் அணுமின்உலை அமைப்பதை எதிர்த்து மக்கள் நடத்தும் போராட்டத்தின்போது தடைஅரண் அமைத்து நிற்கும் தமிழகப் பொலிசார்.

# உலகின் சிறப்புவாய்ந்த தினங்களு
# முக்கியமானது குழந்தைகள்




எதிர்கால உலகை ஆளப்போகிறவர்கள் இவர்களே என்று அடிக்கடி பெரியவர்களால் சுட்டப்படும் குழந்தைகளை மகிழ்விப்பதற்காக கொண்டா டப்படும் தினம் குழந்தைகள் தினம். இந்தியாவில் முன்னா ள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாளான நவம்பர் 14ம் தேதியும், பல்வேறு நாடு களில் பல்வேறு தேதிகளிலும் இந்த தினம் கொண்டாடப்பட்டு வரு கிறது. அதேசமயம், சர்வதேச குழந்தைகள் தினமாக நவம்பர் 20ம் தேதி அனுசரிக்கப்படுகிறது.

கடந்த 1954ம் ஆண்டு, ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது சபை, சர்வதேச குழந்தைகள் தினம் என்ற ஒரு கருத்தாக்கத்தை ஏற்றுக் கொண்டது. கடந்த 1925ம் ஆண்டே, ஜெனீவாவில், குழ ந்தைகள் நல்வாழ்வு தொ டர்பாக ஒரு சர்வதேச மா நாடு நடைபெற்றது.

இந்தியாவின் முதல் பிரதம ராகவும், சக்திவாய்ந்த அரசி யல் தலை வராகவும் இருந்த நேரு, குழந்தைக-ளிடம் அளப் பரிய அன்பும், பிரியமும் கொண்டவர். அவரது சிறந்த புகைப்பட ங்களுள் ஒன்று, குழந்தைகளோடு அவர் இருப்பதாக உள்ளது.

உலகிலேயே, அதிகளவிலான குழந்தை மக்கள் தொகை கொண்ட நாடுகளில் இந்தியா மிகவும் முக்கியமான ஒன்று. ஆனால் இந்தியா வில் குழந்தைக-ளின் நிலை பரிதாபத்திலும், பரிதாபமாக உள்ளது. கோடிக்கணக்காக குழந்தைகள் சத்துக் குறைபாட்டால் பாதிக்கப்பட் டுள்ளனர். கணிசமான சக விகித குழந்தைகள் "குழந் தை தொழிலா ளர்களாக" உள்ளனர்.

அதிகளவிலான குழந்தைகள் நாள்தோறும் பாலியல் துன்பு றுத்தல்கள் மற்றும் பல வித மான வன்முறைகளுக்கு ஆளாகின்றனர். அடிப் படை கல்வி இல்லாத குழந்தைகள் அனேகம் பேர். மூன்று வேளை உண வுகூட கிடைக்காமலும், சரியான உடை கிடைக்காமலும், முறையா ன தங்குமிடம் இல்லாமலும் அல்லலுறும் குழந்தைகள் ஏராளமான பேர், நம் நாட்டில் நம்மைச் சுற்றி வாழ்ந்து கொண்டிரு க்கின்றனர்.

இவர்களின் துன்பங்களுக்கு சரியான பதில் சொல்வதாக அமையு மா, வருடா வருடம் நடக்கும் குழந்தைகள் தின கொண்டாட்டங் கள்? ஆள்வோர்களும், அதிகாரிகளும் குழ ந்தைகளின் நல்வாழ்வு தொடர்பாக விடை காண வேண்டிய கேள்விகள் எவ்வ ளவோ உள்ளன! உலகளாவிய அமைப்பான ஐ.நா. சபை, குழந்தைகள் உரிமை மற்றும் நல் வாழ்வு தொடர்பாக பல தீர்மான ங்களை நிறைவேற்றியிருக்கிறது. உலகின் ஏராளமான நாடுகள் அவற்றை ஏற்றுக் கொண்டுள்ளன. ஆனால் அவை அனைத்தும் காகித அளவிலேயே, பேச்சளவிலே யே உள்ளன. குழந்தைகளு க்கு எந்த நன்மையும் கிடை க்கவில்லை.

உலகிலேயே எந்தவிதமான வன்முறைக்கும் எளிதாக இலக்காகிற வர்கள் குழந் தைகள்தான். ஆப்ரிக்க நாடு களின் குழந்தைகள் உட் பட, மூன்றாம் உலக நாடுகளின் குழந்தைகள் மிக மோசமான பாதி ப்பிற்கு ஆளாகியுள்ளார்கள். அந் த நாடுகளில் வருங்கால தலை முறைகளே அழிந்து வருகின்றன. குழந்தைகள் சமூகத்தின் மீது செ லுத்தப்படும் எந்தவொரு அநீதியு ம், எதிர்கால உலகின் மீது செலு த்தப்படும் அநீதியே ஆகும். எதிர் கால உலகை அது நிச்சயம் சீரழி க்கும். குழந்தைகள் தின கொண் டாட்டங்களில், குழந்தை களுக்கு விதவிதமாக வே' மிடுவதும், பல்வேறுவிதமான போட் டிகளை நடத்துவது மட்டுமே நமக்கு திருப் தியை தந்துவிடுகிறது.

ஒரு குறிப்பிட்ட வி'யத்தை மேம்படுத்துவதன் பொருட்டே, சிறப்பு விழாக்களும், நிகழ்ச்சிகளும் அனுசரிக்கப்படுகின்றன. ஆனால், நமது சமூகத்தில் அவை சம்பிரதாயங்களாக மாறிவிட்டன. அது போலத்தான் குழந்தைகள் தினமும் மாறிவிட்டது. நமது நாட்டின் குழந்தைகளுக்கு மட்டுமல்ல, இந்த உலகின் குழந் தைகளுக்கே, என்று விமோச்சனமும், நல்வாழ்வும் கிடைக்கிற தோ, அன்றுதான் உலகெங்கிலும் உண்மை யான குழந்தைகள் தினம் கொண்டாடப்படும்.







யா/கொக்குவில் ஸ்தான அ.த.க பாடசாலையில் கல்வி பயிலும் தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பாராட்டுவிழாவில் எமது ருசு குசநைனெ குழரனெயவழைெ நிறுவனத்தலைவர் திரு.க.செ
உபகரணங்களும் வழங்கப்பட்டன.

21-11-2012
கல்வி ஒளி
தமிழ்நாதம்
மாணவர் உலகின் கலங்கரைவிளக்கம் கல்வி - 01 ஒளி - 23

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப் பரீட்சை - டிசெம்பர் 2012
## வரலாறு - II (மாதிரி வினாத்தாள்)

ஆசிரியர்: க.ரவிக்குமார் B.A., M.A.Dip.in.Tech., NCT (கடந்தவாரத் தொடர்ச்சி)

முதலாம் வினாவுக்கும் பகுதி-II இலிருந்து மூன்று வினாக்களுக்கும், பகுதி - III இலிருந்து இரு வினாக்களுக்கும் (எல்லாமாக ஆறு வினாக்களுக்கு) விடை தருக.

### பகுதி - I

(01)அ. பகுதி (I) இன் கீழ்த் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் இலங்கைப் படத்திலும் (II) இன் கீழ் தரப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

I.மகாநாக குல, மினிப்பே கால்வாய், எலகர அணை, ஜம்பு கோளப்பட்டினம், சேத்தியகிரி, தேவநகர், தெவிநுவர, மகாவாலுகா, அருவியாறு, பாகியன்கல. (10 புள்ளி)

II.சுவர்ணபூமி, கைபர் கணவாய், உரோம், சோழநாடு, ஹவாய் தீவு, பேர்லின், வடகடல், சுயஸ் கால்வாய். (8 புள்ளி)

(ஆ) I.
A.நீக்கலஸ் கொபர்னிக்கஸ் இதற்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர் யாது?

B.கலிலியோ விற்கு வழங்கப்படும் சிறப்புப் பெயர் யாது?

C.கொடையிலும் மக்களை வதைப்பதிலும் இவனுக்கு நிகர் இவனே என இபின்பதூதா இனால் குறிப்பிடப்படுபவன் யார்?

D.டில்லியில் உள்ள 242 அடி உயரமுடைய குதுபுமினாரையை கட்டிய பெருமைக்குரியவர் யார்? (4 புள்ளிகள்)

ஆ)11



I.இங்கு காணப்படும் கலைப்படைப்பு எது?

II.இது எவ் இராச்சிய காலத்துக்குரியது எனக் கருதப்படுகிறது?

III.இது எம் மன்னனது காலத்தில் அமைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது?

IV.இக் கட்டிடத்தை காணக்கூடிய இருவகை கட்டடகலை அம்சங்களும் எவை? (4 புள்ளி)

ஆ)111



I.அருகில் காணப்படும் கட்டிடத்தின் பெயர் யாது?

II.இது எவ் இராசதானி காலத்துக்குரியதாகும்?

III.இது தற்போது எங்குள்ளது?

IV. இதில் எத்தனை தளங்கள் காணப்படுகின்றன? (4 புள்ளி)

b) கீழே காட்டப்பட்டுள்ள பாய்ச்சற் கோட்டுப் படத்தை அவதானிக்க. இது 3 இலக்கங்களை உள்ளீடாக பெற்று அவற்றில் பெரிய எண்ணை அச்சிடுவதற்கான ஒரு பாய்ச்சற் கோட்டுப் படமே தரப்பட்டுள்ளது. இங்கு a, b, c, d, e, க என்பவற்றிற்கான இடைவெளிகளை நிரப்புக.




5.a)இங்கு காட்டப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள புலப் பெயர்களுக்கான (fields) தரவு வகையை (Data Type) தருக.

Centres : Table

| ID | Sports Centre | Address | Town | Telephone Number |
|---|---|---|---|---|
| 1 | Caerphilly Leisure Centre | Virginia Park | Caerphilly | 01443 851845 |
| 2 | Rhydycar Sports & Leisure Centre | Rhydycar | Merthyr Tydfil | 01443 371491 |
| 3 | Rhondda Sports Centre | Gelligaled Park | Ystrad | 01443 434093 |
| 4 | Llantwit Fadre Sports Centre | Central Park | Church Village | 01443 201721 |
| 5 | Ebbw Vale Leisure Centre | Civic Centre | Ebbw Vale | 01495 303766 |
| 6 | Hawthorn Leisure Centre | Fairfield Lane | Hawthorn | 01443 824873 |

b)கையால் செயற்படுத்தப்படும் (Manual) தகவல் முறைமையை விட கணினிகளை அடிப்படையாகக் கொண்ட தகவல் முறைமையில் காணப்படும் அநுகூலம் இரண்டைக் குறிப்பிடுக.

c) முறைமை விருத்தி வட்டத்தில்
I.தரவுத்தளத்தை திட்டமிடும்போது தேவையான தரவுகளை சேகரிப்பதற்கான இரு நுட்பங்களை குறிப்பிடுக.
II.முறைமை வடிவமைப்பின் பிரதான பணி யாது?

6.இன்றைய காலத்தில் அநேகமான அனைத்து விடையங்களும் இணையத்தின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளலாம். இலங்கையிலும் பல்வேறு விடையங்களுக்காக இணையத்தை பயன்படுத்துவதில் முன்னேறிவிட்டது.
I.இணையத்தின் மூலம் நாம் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய பயன்பாடுகள் ஐந்தினை குறிப்பிடுக.
II.இணையத்தில் நீர் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை பாதுகாப்பாக மேற்கொள்வதற்கு எவ் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவீர்?
III.இணையம் மூலம் இவ் செயற்பாடுகளில் ஈடுபடும் போது நாம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாக நீர் எவற்றை கருதுகிறீர்?
IV.மென்பொருள் திருட்டு (Software Theft), பதிப்புரிமை (Copyright) எனும் சொற்பதங்களை விளக்குக.

7.கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக நாம் பல்வேறு இடங்களை நாடுகின்றோம். உதாரணமாக பாடசாலை, பிரத்தியேக வகுப்புகள், பல்கலைக்கழகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பனவாகும். தற்போது தகவல் தொடர்பாடல் வளர்ச்சி காரணமாக e-Learning என்ற கற்கை முறையும் வந்துவிட்டது.
I.இங்கு e-Learning என்பதால் நீர் விளங்கிக் கொள்வது யாது?
II.e-Learning இல் கற்றல் செயற்பாடுகளுக்கு அல்லது கற்றலுக்கு தேவையான மூலங்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் முறைகள் இரண்டைத் தருக.
III.இலங்கையில் இவ் கற்கை நெறி காணப்படுகிறது. இதில் கணிப்பீடுகள் online மூலம் நடைபெறினும் இறுதிப் பரீட்சை வழமையான பரீட்சை மண்டபத்தில் வினாத்தாள்கள் மூலமே நடைபெறுகின்றது. இதற்கு காரணம் யாது?
IV.இப்போது அநேகர் பயன்படுத்தும் சமூக வலைத்தளம் (Social Network) ஒன்றிற்கு உதாரணம் தந்து அதில் காணப்படும் பிரதிகூலம் ஒன்றினையும் குறிப்பிடுக.

இப்பத்திரிகை இன்.'போமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 21.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

## பகுதி- II

(02)"எழுத்து மூல வரலாற்று ஆதனங்கள் கிடைப்பதற்கு முன்பிருந்தே இலங்கையில் மனித குலம் வாழ்ந்ததென்பதை தொல்பொருள் ஆதாரங்கள் புலப்படுத்துகின்றன"

I.வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனுடன் தொடர்புடைய விடயங்கள் A,B,C எனக் குறிப்பிடப்பட்டுள்ளன அவற்றிற்குப் பொருத்தமான விடையை எழுதுக.

A.இற்றைக்கு 12,500 வருடங்களுக்கு முற்பட்ட கட்டடம் என நம்பப்படும் கட்டடத்தின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்ட குகை?

B.இலங்கையில் 27,000 ஆண்டுகளுக்கு முன்பே உப்பு பயன்படுத்தப்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்ட குகை?

C.மகாவம்சம் குறிப்பின்படி விஜயன் இந்தியாவின் எப் பகுதியில் இருந்து வந்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றது? (3 புள்ளிகள்)

II.வரலாற்றுக்கு முற்பட்ட மத்திய கற்கால மனிதன் பயன்படுத்திய கருங்கல்லி லான உபகரனங்கள் நான்கு தருக? (4 புள்ளிகள்)

III.வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த குகைகள் இரண்டை குறிப்பிட்டு அவர்களது வாழ்க்கை கோலம் பற்றி விளக்குக? (5 புள்ளிகள்)

IV.A.அநுராதபுரத்தை தலைநகராக்கிய மன்னன்

B.முதன் முதலில் இலங்கையில் பௌத்த சமயம் பரவ உதவிய மன்னன்
ஆகியோரை முறையே குறிப்பிட்டு விடை A யில் குறிப்பிட்ட மன்னன் செய்த சாதனைகளையும் விடை Bயில் குறிப்பிட்ட மன்னர் பௌத்தம் பரவ மேற்கொண்ட நடவடிக்கைகளையும் ஆராய்க? (6 புள்ளிகள்)

(03)"நீர்ப்பாசனத் துறையில் இன்றைய அளவில் எட்டமுடியாத பல சாதனைகளை இலங்கையின் அன்றைய மனிதர்கள் சிறப்பாக செய்து முடித்துள்ளனர்"

I.இலங்கையின் நீர்வள நாகரீக காலத்தில் அமைக்கப்பட்ட A,B,C எனக் குறிப்பிடப்பட்டுள்ள குளங்களை அமைப்பித்த ஆட்சியாளர்களை முறையே குறிப்பிடுக?

A.காமினி வாவி
B.மனாகட்டிய குளம்
C.மெத்த கட்டிய குளம் (3 புள்ளிகள்)

II.இங்கே வழங்கப்பட்டுள்ள நீர்ப்பாசனக் குளத்தின் A,B,C,D எனக் குறிப்பிட்டுள்ள பாகங்கள் முறையே உமது விடைத்தாளில் எழுதுக. (4 புள்ளிகள்)




III.நீர்வள நாகரீககாலத் தொழில்நுட்பவியலாளர்கள் நீர்ப்பாசனக் கால்வாய்களை அமைக்கும் போது தொழில்நுட்பத்தை கையாண்ட விதத்தை உதாரணங்களுடன் விளக்குக? (5 புள்ளிகள்)

IV.இராசரட்டையின் தலைமை ஆட்சியாளன் தக்கினதேசத்தின் "மாபா" பதவியையும் உருகுணரட்டையின் "ஏபா" பதவியையும் யார் யாருக்கு வழங்கினான் எனக் குறிப்பிட்டு ஆரியரின் நிர்வாகக் கட்டமைப்பில் கிராமத்தலைவருக்குரிய கடமைகளை ஆராய்க? (6 புள்ளிகள்)



3.ஒரு புத்தகக் கடை தனது மாதாந்த விற்பனை, செலவுகள், வருமானம் பற்றிய அட்டவணையை மின்னணுசார் விரிதாளில் பேணுகின்றது. இவ் அட்டவணையை கீழே காணலாம்.

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | The Book Company | | | | |
| 2 | 1996 Projections | | | | |
| 3 | | Aug | Sep | Oct | Nov |
| 4 | | | | | |
| 5 | REVENUE | | | | |
| 6 | Sales | 46000 | 49680 | 53654.4 | 57946.752 |
| 7 | Service | 55000 | 59400 | 64152 | 69284.16 |
| 8 | Total | 101000 | 109080 | 117806.4 | 127230.912 |
| 9 | | | | | |
| 10 | EXPENSES | | | | |
| 11 | Wages | 62000 | 63240 | 64504.8 | 65794.896 |
| 12 | Supplies | 22500 | 22950 | 23409 | 23877.18 |
| 13 | Total | 84500 | 86190 | 87913.8 | 89672.076 |
| 14 | | | | | |
| 15 | INCOME | | | | |
| 16 | Gross | 16500 | 22890 | 29892.6 | 37558.836 |
| 17 | Tax | 3630 | 5035.8 | 6576.372 | 8262.94392 |
| 18 | Net | 12870 | 17854.2 | 23316.228 | 29295.89208 |
| 19 | | | | | |

இங்கு வருமானம் (Revenue) விற்பனையாலும் (Sales) சேவையாலும் (Service) கிடைக்கின்றது. விநியோகத்திற்கான செலவும் (Supplies) ஊதியம் வழங்களும் (Wages) இக் கடைக்கு செலவாக (Expenses) அமைகின்றது.

I.இக் கடையின் மாதாந்த மொத்த செலவை கணிப்பதற்கு B13 கலத்தில் இடவேண்டிய சூத்திரத்தை/ செயற்கூறை தருக.

II.மாதாந்த மொத்த வருமானத்தை (Gross) காண B16 கலத்தில் இடவேண்டியசூத்திரத்தை/செயற்கூறை தருக.

III.இக் கடை மொத்த வருமானத்தின் 22% வரியாக (Tax) கட்டுகிறது எனின் B17 கலத்தில் வரியாக கட்டும் பணத்தை காணுவதற்கான சூத்திரத்தை/செயற்கூறை தருக.

IV.இக் கடை இறுதியாக பெறும் வருமானத்தை (Net) காண B18 கலத்தில் இடவேண்டிய சூத்திரத்தை/செயற்கூறை இல் தருக.

4.a) முதல் 50 இலக்கங்களை கூட்டுவதற்கான பாய்ச்சற்கோட்டுப் படம் கீழே காட்டப்பட்டுள்ளது.
I. இவ் பாய்ச்சற் கோட்டுப் படத்திற்கான போலிக் குறிமுறையை எழுதுக.



தொகுப்பு: இரா. கல்பனா

## பகுதி II

**முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களும் உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1)பின்வருவனவற்றுக்கு சுருக்கமாக திட்டவட்டமாக விடை தருக.

I.தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப மாணவரான நீர் பாடசாலையை விட்டு வெளியேறியவுடன் உமது நண்பர்களுடன் தொடர்புகளை பேணும் முறை இரண்டை தருக.

II.கட்டளைக் கோட்டு இடைமுகத்தை (CLI) உடைய பணிசெயல் முறைமைக்கு (Operating System) ஒரு உதாரணம் தந்து அதில் காணப்படும் அநுகூலம், பிரதிகூலம் ஒவ்வொன்றை தருக.

III.1001100 என்பதை பதினறும எண்ணில் தருக.

IV.variable இற்கு பெயரிடப்படும் போது கவனிக்கவேண்டிய விதிமுறைகளில் இரண்டைக் குறிப்பிடுக.

V.Modem இன் செயற்பாடு யாது?

VI.4ம் தலைமுறைக் கணினிகளில் காணப்பட்ட சிறப்பியல்பு இரண்டைக் குறிப்பிடுக.

VII.கணினி வலைப்பின்னலின் அனுகூலங்கள் இரண்டையும் பிரதிகூலங்கள் இரண்டையும் குறிப்பிடுக.

VIII.RAM, ROM இற்கிடையிலான பண்புகள் இரண்டினை தருக.

IX.தரவு (Data), செய்முறை (Processing), தகவல் (Information) என்பவற்றை ஒரு உதாரணம் மூலம் விளக்குக.

X.Adope Photoshop எனும் மென்பொருளில் காணப்படும் அடுக்குகள் (Layers) இன் சிறப்பியல்பு யாது?

2.ஒரு மாணவன் தன் வீட்டு பாதுகாப்பு பற்றி நினைத்து பூலியன் படலைகளை பாவிக்கின்றான். அம் மாணவனின் வீட்டைச் சுற்றி மதில் கட்டப்பட்டுள்ளது. அவனது வீட்டிற்கு இரு நுழைவாயில்கள் உள்ளன. அவனது திட்டப்படி ஒரு நேரத்தில் ஒரு வாயிலால் மட்டுமே உள் நுழையலாம். ஒரு வாயிலை பயன்படுத்தும் போது மற்றைய வாயில் மூடியிருக்கவேண்டும். ஏதேனும் ஒரு வாயிலில் யார் உள்நுழைந்தாலும் அவர்கள் வீட்டின் அழைப்பு மணி அடிக்கும்.

I.இதற்கு பயன்படுத்தும் படலை (Boolean gate) யாது? அதற்கான உண்மை அட்டவணையையும் (Truth Table) தருக.

II.பின்வரும் படலைக்கான வருவிளைவை தந்து உண்மை அட்டவணையை தருக.




III.இவ் வருவிளைவுக்கு ஒத்த படலையை தருக.

IV.பின்வரும் பூலியன் கோவைகளை சுருக்குக.
a) AB + AB'      b) ABC + ABC' + AB'C + AB'C'



(04)"13ஆம் நூற்றாண்டின் பின்னரான ஆரியரின் வரலாறு பல மாற்றங்களுக்குட்பட்ட காலமாகும்"

I.கீழே A,B,C ஆகியவற்றின் கீழ் தரப்பட்டுள்ள பிரதேசத் தலைவர்கள் தமது நிர்வாக மையங்களைத் தெரிவு செய்த இடங்களை தரப்பட்டுள்ள அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிந்தெடுத்து முறையே எழுதுக.

A.3ஆம் விஜயபாகு

B.தளபதி சிங்க

C.புவனேகபாகு
(யாப்பகூவ, கோவிந்தமலை, மினிப்பே, தம்பதெனிய) (3 புள்ளிகள்)

II.கீழே P,Q,R,S ஆகியவற்றின் கீழ்க் காட்டப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடையவர்களை முறையே குறிப்பிடுக?

P.யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னர்களில் தமிழர், சிங்களவரிடையே நல்லுறவைப் பேணியதால் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற ஆட்சியாளன்?

Q.6ஆம் புவனேகபாகுவின் ஆட்சிக்கு எதிராக பஸ்துன்கோறளையில் கிளர்ச்சியை ஏற்படுத்திய இளவரசன்?

R.குலசேகர பாண்டியனிடம் பணிந்து கேட்டுப் பெற்ற புத்தரின் பல்லையும், பாத்திரத்தையும் வைத்து 1287இல் பொலன்னறுவையில் ஆட்சி அமைத்தவன்.

S."கலிகால சாகித்திய கலகலா பண்டிதன்" எனப் போற்றப்படும் ஆட்சியாளன். (4 புள்ளி)

iii.பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சிக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளி)

iv.பொலன்னறுவைக்குப் பிந்திய புலம்பெயர் இராசதானிகளின் பொருளாதாரப் போக்கை

A.வர்த்தகம்

B.விவசாயம் எனும் துறைகளின் கீழ் ஆராய்க. (6 புள்ளி)

(05)"இலங்கையின் பெருமைக்குரிய அரச வரலாறு பிரித்தானியர் என்னும் ஐரோப்பிய இனத்தவரின் காலடியில் முழுமையாகச் சாய்ந்தது"

i.இலங்கையின் இறுதி மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனுக்கு எதிராக ஆக்கிரமிப்பை மேற்கொண்ட இரு பிரதான தேசாதிபதிகளையும் ஒரு பிரித்தானிய படைத்தளபதியையும் குறிப்பிடுக? (3 புள்ளி)

ii.கீழே A,B,C,D ஆகியவற்றின் கீழ்க் காட்டப்பட்டுள்ள தகவல்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குள் இருந்து தேர்ந்தெடுத்து முறையே எழுதிக் காட்டுக.?

A.கியூ கடிதத்தை ஏற்க மறுத்த ஒல்லாந்தர்

B.ரொபர்ட் பிரவுண்றிக் கண்டி பற்றிய தகவல்களை அறியவென நியமித்த அதிகாரி.

C.இராஜ துரோகக் குற்றத்துக்காக கண்டி மன்னனால் கொலை செய்யப்பட்ட மகா அதிகாரம்.

D.வர்த்தகக் கம்பனி அதிகாரிகளால் இலங்கையில் வரி அறவிடுவதற்காக அழைத்து வரப்பட்ட சென்னை அதிகாரி?
(பன்கூன்ஸ், ஜோன் டொய்லி, பன் ஏங்கல்பெக், எகலப்பொல, பிலிமத்தலாவ, அவுமில்தார்கள்) (4 புள்ளி)

iii.முதலாவது சுதந்திரப் போராட்டத் தியாகிகள் மூவரைக் குறிப்பிட்டு இப் போராட்டத்திற்கான உடன்படிக்கை காரணத்தை விளக்குக?

iv.பிரித்தானியருக்குச் சார்பாக செயற்பட்ட கண்டியின் மகாஅதிகாரிகள் இருவரின் பெயர்களைக் குறிப்பிட்டு மன்னர்களைக் காட்டிலும் கண்டிப் பிரதானிகளின் அதிகாரங்கள் மேலோங்கியமைக்கான காரணங்களை ஆராய்க? (6 புள்ளிகள்)

(06)"எமது நாட்டில் அரசியல் யாப்பு என்பது பிரித்தானிய ஆட்சியாலேயே வளர்ச்சியுற்ற ஒன்றாகும்"
i.1947 அரசியல் யாப்பை உருவாக்கிய யாப்பு குழுத் தலைவர் உட்பட்ட மூவரையும் குறிப்பிடுக? (3புள்ளி)

ii.கீழே A,B,C,D ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய அரசியல் யாப்புகளை முறையே எழுதுக.

A.இலங்கையருக்கு முதன் முதலில் வாக்குரிமையை வழங்கிய அரசியல் யாப்பு?

B.மாகாண ரீதியான தேர்தல் தொகுதி முறையை அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு?

C.முதன் முதலில் நிர்வாக குழுவை அமைத்த அரசியல் யாப்பு?

D.பாராளுமன்றத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்திய அரசியல் யாப்பு? (4 புள்ளிகள்)

iii.A.1822 சிங்ஹபிட்டியில் கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்தவர்?

B.1824 கன்னொருவையில் தனியார் கோப்பித் தோட்டத்தை ஆரம்பித்தவர்.
மேலே A,B ஆகியவற்றினால் குறிப்பிடப்பட்டவர்களை முறையே குறிப்பிட்டு இலங்கையில் கோப்பி பயிர்ச்செய்கை வளர்ச்சி பெறுவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகளை ஆராய்க? (8 புள்ளிகள்)

iv.A.கந்தலாய்க்குளம் B.யோதவாவி

மேலே A,B ஆகியவற்றால் காட்டப்பட்டுள்ள குளங்களைப் புனரமைத்த பிரித்தானியர்களை குறிப்பிட்டு 19ம் நூற்றாண்டின் பின்பகுதியில் பிரித்தானியரை இலங்கை நீர்ப்பாசனத்தை புனரமைக்க தூண்டிய காரணிகளையும் ஆராய்க? (6 புள்ளிகள்)

## பகுதி - III

(07)"நீண்டு நிலைத்திருந்த சிந்துவெளி நாகரீகம் ஆரியரின் இந்திய வருகையுடன் வேத நாகரீகத்தின் பரவுகையால் சிதைந்து போனது"

i.கீழே A,B,C ஆகியவற்றின் கீழ் காட்டப்பட்டுள்ளவற்றுடன் தொடர்புடையவர்களை முறையே குறிப்பிடுக?

A.மகதப் பேரரசின் முக்கிய ஆட்சியாளனும், புத்தரினதும், மகா வீரரினதும் அவதாரமாகவும் கருதப்படுபவன்.

B.என் பிள்ளைகளோ பேரப்பிள்ளைகளோ புதிய திக் விஜயங்களை மேற்கொள்ளாதிருப்பீர்களாக" எனத் தனது கல்வெட்டுக்களில் குறிப்பிடுபவன்?

C.வட இந்தியாவில் மௌரிய அரசு பரம்பரையின் ஆரம்ப ஆட்சியாளன்?

ii.கீழே A,B,C,D எனக் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்புப் பெயர்களுடன் தொடர்புடைய மன்னர்களை கீழ் உள்ள அடைப்புக்குறிக்குள் தேர்ந்தெடுத்து முறையே எழுதுக.

A.இந்தியாவின் நெப்போலியன்

B.விக்கிரமாதித்தன்

C.தேவநம்பிய பியதிசி

D.இராஜாதி ராஜா

(2ஆம் சந்திரகுப்தன், அசோகன், சமுத்திரகுப்தன், 1ஆம் சந்திரகுப்தன், ஸ்கந்த குப்தன்) (4 புள்ளிகள்)

iii.குப்தர்காலச் சித்திரக் கலைக்குப் புகழ்பெற்ற இரண்டு குகைகளை குறிப்பிட்டு இக்கால கலைவளர்ச்சி பற்றி ஆராய்க. (5 புள்ளிகள்)

iv.குப்தர்காலத்தில் உலகப்புகழ்பெற்ற பௌத்த உயர்கல்வி நிலையங்கள் இரண்டை குறிப்பிட்டு குப்தர்கால கல்வி வளர்ச்சி பற்றி ஆராய்க. (6 புள்ளிகள்)



(08)"மத்திய கால ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்குப் பின்னரான எழுச்சியே இன்றைய நவீன விஞ்ஞானமயமான உலகம் தோன்றக் காரணம்"

i.கிரேக்க உரோமப் பேரரசுகள் வீழ்ச்சியுறக் காரணமான

A.வடக்கிலிருந்து
B.கிழக்கிலிருந்து
C.தெற்கிலிருந்து மேற்கொள்ளப்பட மிலேச்சத்தனமான படையெடுப்புக்களை முறையே குறிப்பிடுக. (3 புள்ளி)

ii.கீழே A,B,C,D ஆகியவற்றினால் காட்டப்பட்ட நபர்கள் கண்டுபிடித்த இடங்கள் அடைப்புக்குறிக்குள் உள்ளன. அவற்றை கண்டுபிடித்து முறையே எழுதுக.

A.வஸ்கொடகாமா
B.பார்த்தலோமியடயஸ்
C.பேர்டினன் மகலன்
D.கொலம்பஸ்
(இந்தியா, பேய்முனை, எஸ்பானியோலா, பிலிப்பைன்ஸ்) (4 புள்ளி)

iii.ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற தேசிய அரசுகள் இரண்டைக் குறிப்பிட்டு அத்தேசிய அரசுகளின் பண்புகளை ஆராய்க? (8 புள்ளி)

iv.மத்தியகால ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்பட ஏதுவாக அமைந்த காரணிகள் மூன்றைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

(09)"மஞ்சு வம்சத்தின் ஆட்சியின் வீழ்ச்சியே சீனா எழுச்சி பெறக் காரணமாகியது"
i.தேசியவாதக் கோமிங்டான் கட்சியின் அடிப்படைக் கொள்கைகள் மூன்றும் எவை? (3 புள்ளி)

ii.கீழே A,B,C,D யினால் காட்டப்பட்டுள்ள கூற்றுக்களுடன் தொடர்புடையவர்களையும் A,D யினால் காட்டப்பட்டுள்ள கட்சித் தலைவர்களையும் முறையே குறிப்பிடுக?

A.நாடுகளுக்கு சுதந்திரம் தேவை இனங்களுக்கு விடுதலை தேவை மக்களுக்கு புரட்சி அவசியம்.
B.சீனாவின் வெற்றிகரமான புரட்சியாளர்கள் விவசாயிகளே
C.தேசியவாத கோமிங்டான் கட்சி
D.கொம்யூனிஸ்ட் கட்சி (4 புள்ளி)

iii.தேசியவாத கோமிங்டான் கட்சியின் தலைநகராக இருந்த இடங்கள் இரண்டைக் குறிப்பிட்டு இக்கட்சியாளர் சீனாவை ஐக்கியப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகளை சுருக்கமாக ஆராய்க?

iv.சீனப் பொருளாதாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்த மா.ரு.சேறு மேற்கொண்ட நடவடிக்கைகளையும் அதன் விளைவுகளையும் ஆராய்க. (6 புள்ளி)

10."உலகப்போர் வரலாறு காணாத பெரும் மனித, பொருள் அழிவுகளை ஏற்படுத்தியது. மனித குலத்தால் மறக்கப்பட முடியாதது"

i.முதலாம் உலகப் போரில் நடுநிலை வகித்த நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

ii.கீழே A,B,C,D ஆகியவற்றினால் காட்டப்பட்டுள்ள தலைவர்கள் எந்த நாட்டவர்கள் என்பதை முறையே எழுதுக
A.பிரான்சிஸ் பேர்டினாற்
B.வைுறர் வில்லியம்
C.வூட்ரோ வில்சன்
D.டோஜோ (4 புள்ளி)

iii.1ஆம் உலகப்போரில் ஜேர்மன் தோல்வியுற்றமைக்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு உடன்படிக்கையில் ஜேர்மனிக்கு ஏற்பட்ட இழப்புகளை ஆராய்க? (5 புள்ளி)

iv.1ஆம் உலகப் போருக்கான காரணங்கள் மூன்றைக் குறிப்பிட்டு அதில் இரண்டை விளக்குக? (6 புள்ளி)

ள் மிகவும்
தினம்








வேள் அவர்கள் கலந்து கொண்டதுடன் மாணவர்களுக்கான கற்றல்



# சம்பிரதாய சடங்குமுறைகள்

மரணம் ஏற்பட்ட வீட்டிற்குசென்று வந்தவுடன் துணிகளை துவைத்து குளிக்க வேண்டும் என்று இந்து மதத்தில் வலியுறுத்தப்படுகிறது

அக்காலத்திலிருந்து இன்று வரை இந்துக்களிடம் இந்த பழக்கம் பரவலாக இருந்து வருகிறது.

இது நல்ல பழக்கமா அல்லது எதற்கும் உபயோகமில்லாத பழக்கமா என்பதை பார்ப்பதற் கு முன் அதிலுள்ள சில நடை முறை கேள்விகளுக்கு பதில் தேடியாக வேண்டிய சூழல் உள்ளது.

இறந்துபோன மனிதருடைய ஆவி, துக்கம் விசாரிக்க சென்றவர்க ளை தாக்கும் என்றும், அவர்களோடவே தொடரும் என்றும் அதனால்தான் குளிக்க சொல்லப்படுகி றது என்று பலர் சொல்கிறா ர்கள். ஒரு மரண நிகழ்விற்கு ஒருவர் மட்டும் செல்வதில்லை. உற்றார் உறவினர் நண்பர் என்று ஏராளமா ன பேர்கள் செல்கிறார்கள் இவர்களை ஆவி தாக்குகிறது என்றாலும், தொடர்கிறது என்றாலும் ஒருவரை மட்டும் தான் ஆவியால் குறி வைக்க முடியும்.

வந்து போகும் எல்லோரையும் தொடர்கிறது என்பது சாத்தியமில்லா தது ஆகும்.

அப்படி தொடரப்படும் ஒரு நபர் யார் என் று நமக்கு தெரியாது. அதனால் கலந்து கொள்ளும் எல்லாருமே குளித்து விட வேண்டியதுதான் என்றால்கூட அதிலும் ஒரு சிக்கலிரு க்கிறது.

மயானத்தில் வெட்டியான் ஒரு நாளில் பல பிணங்களை பார்க்கிறான் தொடு கிறான். அவன்கூட தினசரி வேலை முடிந்தவுடன் குளித்து விடுகிறான் என்று சொல்ல முடியாது.

எனக்கு தெரிந்த பல வெட்டியான்கள் வேலை முடிந்ததும் கிடைக்கும் காசை கொண்டு போய் மது அருந்துவதில் காட்டுகின்ற வேகத்தை குளிப்பதில் காட்டுவதில் லை.

இறந்த ஆவி மனிதனை தொடும் என்றால் வெட்டியானும் மனிதன் தானே. அவனும் நம்மை போலவே உண்கிறான். உறங்கு கிறான். பிள்ளை குட்டிகளை பெற்றுக் கொள்கிறான்.

பிணங்களோடு புழங்கும் தனது தொழிலுக்காக பிரத்யோகமாக அவன் எந்த சடங்குகளையும் தின சரி செய்வது கிடையாது.

அது அவனால் முடியாது. அதனால் ஆவிகள் மரணம் அடைந்தவுடன் மனிதர்களை தொடரும் என்பதும், தாக்கும் என்பதும் அவ்வளவு தூரம் உண்மையானது அல்ல.

பொதுவாக இறந்துபோன ஆத்மாக்கள் தங்களது பழைய உடலுக்கு புகுந்து கொள்ளத்தான் ஆர்வம் காட்டுமே தவிர புதிய மனித உடல் களை உடன டியாக விரும்பாது.

தனது பழைய உடல் அழிந்து போன பிறகே வேறு உடல்களை ஆத்மாக் கள் தேடுகின்றன.

அதுவும் எல்லா ஆத்மாக்களும் அப்படி செய்கிறது என்று சொல்லி விடமுடியாது. ஆயிரத்தில் ஒன்று, இலட்சத்தில் ஒன்று என்று வேண் டுமானால் சொல்லலாம்.

ஆக இறந்தவர்கள் வீட்டிற்கு சென்று வந்தவுடன் குளிக்க வேண்டும் என்று சொல்வதற்கு இது காரணம் அல்ல.

ஒருவர் இறந்த பிறகு அவர் சடலத்திலிருந்து கண்ணுக்கு தெரியாத ஏராளமான விஷகிருமிகள் விஷ அணுக்கள் வெளியேறும்.

சடலத்தை தொடவோ, நெருங்கவோ செய்யும்போது இந்த வி' உயிர்கள் நமது உடலிலும் உடையிலும் ஒட்டிக்கொள்ள வாய்ப்புள்ளது.

இவைகளை உடனடியாக அப்புறப்படுத் தினால் தான் நமக்கு பாதிப்பு கள் வராது. பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அசட்டையாக இருந்தால் நமக்கோ நம்மை தொடுகின்ற குழந்தைகளுக்கோ நிச்சயம் பாதிப்பு வரும்.

அதனால் தான் சாவுக்கு சென்று வந்தவுடன் குளிக்க வேண்டும் என்றார்கள். இதற்கு வேறொரு காரணமும் இருக்கிறது. இறந்தவர் நமக்கு வே ண்டப்பட்டவராக இருக்கலாம். நம் அன்பிற்கு பாத்திரமானவர்களாகவும் இருக்கலாம். அவர்களின் நிரந்தர பிரிவு நம் மனதை வாட்டி வதைக்கும். மனம் வாடும் போது உடலும் சோர்ந்து விடும்.

அந்த நேரத்தில் குளிர்ச்சையா ன நீர் உடலை தொடுவதினால் சிறிது மலர்ச்சி ஏற்பட்டு மனதிற்கு ஓரளவு தெம்பும், தைரியமும் கிடைக்கும்.

இந்த உண்மைகளை எல்லாம் நமது ஜனங்களிடம் வெட்ட வெளிச் சமாக சொன்னால் அசட்டை செய்து விடுவார்கள் என்று கருதி நமது முன்னோர்கள் ஆவிக ளின் பெயரை சொல்லி குளிக்க வைத்தார்கள்.

நல்லதிற்காக பொய் சொன்னால் தப்பில்லை என்பது அவர்கள் கொள்கை.



# கிளிநொச்சி–யாழ்.நீர்வழங்கல் மற்றும் சுகாதார திட்டத்தினால் நான்கு இலட்சம் பேருக்குப் பயன்

கிளிநொச்சி யாழ். நீர்வழங்கல் மற்றும் சுகாதார திட்டத்தின் கீழ் 4 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பேர் நேரடியாக நன்மை பெறவுள்ளனர். குடிதண்ணீர் வழங்கல் மூலம் சுமார் 3 இலட்சம் பயனாளிகளும் கழிவு நீர் அகற்றல் மூலம் 80 ஆயிரம் பயனாளிகளும் நீர்ப்பாசனம் மூலம் 55 ஆயிரம் பயனாளிகளுமாக மொத்தம் 4 இலட்சத்து 35 ஆயிரம் பேர் 2015இல் நன்மை அடைவர்.

இவ்வாறு யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதாரத் திட்டப் பணிப்பாளரும் தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் உதவிப் பொது முகாமையாளருமான எந்திரி தி.பாரதிதாசன் தெரிவித்தார்.

இரணைமடு அபிவிருத்திக்கான மொத்த முதலீட்டுத் திட்டம் தொடர்பாகவும் இதனால் மக்கள் அடையப் போகும் நன்மைகள் குறித்தும் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுத்தமான குடிதண்ணீர் மற்றும் சுகாதார நடவடிக்கைகளுக்கான தேசிய கொள்கைகள் திட்டத்தின் கீழ் 2015 இல் மொத்த சனத்தொகையில் 85 சதவீதமான மக்களும் 2025 இல் 100 சதவீதமான மக்களுக்கும் பாதுகாப்பான குடிதண்ணீரை வழங்க வேண்டும் என்ற நோக்கில் இந்தத் திட்டம் முன்னகர்த்தப்படுகிறது. இதன் மூலம் சுமார் 3 இலட்சம் பேர் பயனடைவர்.

அதேசமயம் சுகாதார திட்டத்தின் கீழ் கழிவு அகற்றலில் 80 ஆயிரம் பயனாளிகள் நன்மையடையவுள்ளனர். இதில் யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பயனாளிகளே நன்மையடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. யாழ்.மாநகர சபைப் பிரிவில் மலசலகூடக் கழிவுகளைச் சேகரித்து கல்லுண்டாயில் வைத்து சுத்திகரிக்கும் திட்டத்தில் இது உள்வாங்கப்பட்டுள்ளது.

இதேநேரம் யாழ். கிளிநொச்சி பிரதேசங்களின் நீர்வழங்கல் திட்டத்தில் 2015 இல் யாழ்ப்பாண மக்களுக்கு 13 வீதமும், கிளிநொச்சி மக்களுக்கு 6.5 வீதமும் குடிதண்ணீர் கிடைக்கும்.

2020 இல் யாழ்ப்பாண மக்களுக்கு 22.74 வீதமும் கிளிநொச்சி மக்களுக்கு 10.86 வீதமும் குடிதண்ணீர் கிடைக்கும். 2030 இல் யாழ்ப்பாண மக்களுக்கு 43 வீதமும் கிளிநொச்சி மக்களுக்கு 21 வீதமும் பாதுகாப்பான குடிதண்ணீர் கிடைக்கும்.

இதற்காக மொத்தச் செலவாக நீர்வழங்கலுக்கு 10180.50 மில்லியன் ரூபாவும் கழிவு நீர் அகற்றல் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்காக 3920.40 மில்லியன் ரூபாவும் செலவிடப்படும். அத்துடன் இரணைமடு அணைக்கட்டு மேம்படுத்தலுக்கு 1169.30 மில்லியன் ரூபா செலவிடப்படும்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நகர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி 9900 மில்லியன் ரூபாவும் பிரான்ஸிய முகவர் நிலையம் 5280 மில்லியன் ரூபாவும் இலங்கை அரசு 2864.40 மில்லியன் ரூபாவுமாக மொத்தம் 18044.40 மில்லியன் ரூபா செலவில் திட்டம் துரிதகதியில் முன்னெடுக்கப்படுகின்றது என்று மேலும் கூறினார்.

## ஏழாலையில் விவேகானந்தர் ஜயந்தி விழா

விவேகானந்தரின் நூற்றி ஐம்பதாவது ஜயந்தி தினத்தையொட்டி நேற்றுப் பகல் ஏழாலை மகா வித்தியாலயத்தில் இருந்து ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம் வரை விவேகானந்தரின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

மாணவர்கள், பொதுமக்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்திற்கு பொதுமக்கள் வீதிகளில் மகர தோரணங்கள் கட்டி கும்பங்கள் வைத்து மரியாதை செலுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து மாநாடு ஏழாலை சைவமகாஜனா வித்தியாலய மண்டபத்தில் ஓய்வுபெற்ற அதிபர் செ.சிவநடராசா தலைமையில் இடம்பெற்றது. மாணவிகளின் நடன நிகழ்வுகள் மற்றும் சொற்பொழிவுகள் என்பனவும் இடம்பெற்றன.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக் காலத்தின் 2 வருட பூர்த்தி, பிறந்தநாள் நிகழ்வை முன்னிட்டு யாழ்.பெரிய முஹிதீன் ஜும்மா பள்ளியில் கடந்த திங்கள் மாலை விசேட பிரார்த்தனைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் ஜே-86, ஜே-87 கிராம அலுவலர் எம்.எஸ்.ஜினூஸ், மாநகர சபை உறுப்பினர்களான பீ.ஏ.சுபியான், பி.எஸ்.எம்.சரபுல் அனாம், மௌலவி அப்துல் அஸீஸ், உதவித்திட்டமிடல் அதிகாரி, பொருளதார அமைச்சின் அதிகாரி, ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம்.எஸ்.எம்.ஏ.முபாரக், பள்ளிவாசல் தலைவர் எம்.எல்.லாபிர் ஆகியோர் கலந்துகொண்டனர். (படம் - மீரான்)

## மாதகலில் மண் அணைகள் அகற்றப்படவுள்ளன

மாதகல் பகுதியில் அண்மையில் கடற்படையினரால் மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மண் அணைகள் அகற்றப்படவுள்ளன.

பொன்னாலை, மாதகல் மேற்குப் பகுதியில் உள்ள சுமார் 11 கி.மீற்றர் நீளமான மண் அணைகளை அகற்றும் பணி தொடர்ந்து இருவாரங்களாக இடம்பெறும். இதற்கென முதற்கட்டமாக இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் மூலம் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள முழுமையான மண் அணைகளும் அகற்றி முடிக்கப்படும் என அரச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மாதகல் மற்றும் பொன்னாலை பகுதிகளிலுள்ள வன்னியன் வீதி, போதிப்புலம் வீதி, வாசிகசாலை வீதி, சம்பில்துறை வீதி உள்ளிட்ட ஆறு துறை வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

## பரீட்சை

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் மூன்றாம் தவணைப் பரீட்சைகள் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் முதலாம் திகதி வரையும் நடைபெறவுள்ளன. வலயமட்டத்தில் இடம்பெறும் பரீட்சை தரம் 10 இற்கு 23ஆம் திகதி முதல் முதலாம் திகதி வரையும், தரம் 8, 7 மற்றும் 6 இற்கு 24ஆம் திகதி முதல் முதலாம் திகதி வரையும் தரம் 3, 4 மற்றும் 5 இற்கு 28 ஆம் திகதி முதல் முதலாம் திகதி வரையும் நடைபெறவுள்ளன.

## யாழிலிருந்தும் இராணுவத்துக்கு ஆட்கள் திரட்டப்படுவர்

**யாழ்.கட்டளைத் தளபதி**

கிளிநொச்சியை அடுத்து யாழ்ப்பாணத்தில் இருந்தும் பெருந்தொகையானவர்கள் இராணுவத்தில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துறுசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்று கீழ் வாழும் குடும்பங்களுக்கு வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று அளவெட்டியில் நடைபெற்றது.

அளவெட்டி மத்தியில் நடைபெற்ற இந்நிகழ்வில் கலந்துகொண்டு பயனாளிகளுக்கான வீடுகளைக் கையளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போது மீண்டும் தமிழர்கள் இராணுவத்தில் இணைந்து கொள்கின்றனர். இதனால் தனி சிங்கள இராணுவம் என்று இல்லாமல் இலங்கை இராணுவம் என்ற பதம் உருவாகக் கூடும்.

யாழ்.மாவட்டத்தினைப் பொறுத்தவரையில் இராணுவம் தொடர்பான வதந்திகளைப் பரப்பிக் கொண்டு தமது அரசியலை நடத்துபவர்களே அதிகமாக உள்ளனர் என்றும் சொன்னார்.

## இலங்கை அகதி சென்னையில் தற்கொலை

சென்னை, கும்மிடிப்பூண்டியில் அமைந்துள்ள அகதிகள் முகாமைச் சேர்ந்த இலங்கை அகதியொருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வவுனியா, சிதம்பரபுரத்தைச் சேர்ந்த கண்ணன் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

மனைவியுடன் ஏற்பட்ட தகராறே இந்த தற்கொலைக்கு காரணம் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## வெங்காய செய்கை

(தீவகம்)

தீவகம் பகுதிகளைச் சேர்ந்த அல்லைப்பிட்டி, சரவணை, மண்கும்பான் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வெங்காயச் செய்கையானது விவசாயிகளுக்கு அதிக உற்ச பயன்களையும் நல்ல விளைவுகளையும், அதிக சந்தை வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுத்திருப்பதாக வேலணைப் பகுதிக்கான விவசாய போதனாசிரியர் செ.இராமநாதன் தெரிவித்துள்ளார். இதேநேரத்தில் எதிர்வருகின்ற காலங்களிலும் இவ்வாறான சாதக காலமற்ற காலங்களில் தீவகப் பகுதிகளினது ஏனைய இடங்களிலும் இவ்வாறான பயிர்ச் செய்கை பரீட்சாத்தமாக இருப்பதாக வேலணைப் பகுதி விவசாயப் போனாசிரியர் செ.இராமநாதன் தெரிவித்துள்ளார்.

## சிவப்பு மழை குறித்து ஆராய விசேட நிபுணர்கள் குழு

செவனகல பகுதியில் பெய்த சிவப்பு மழை தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சின் ஆறு விசேட வைத்தியர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குமாறு பொரளை வைத்திய ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் டொக்டர் அணில் சமரநாயக்கவிற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக அமைச்சின் செயலாளர் டொக்டர் நிஹால் ஜயதிலக்க தெரிவித்தார்.

இதற்கமைய நுண்ணுயிர்கள், நீர், பக்டீரியா தொடர்பிலான இந்த ஆய்வுக்குழு சிவப்பு மழை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளுமென அவர் சுட்டிக்காட்டினார்.

இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வுகளின் பிரகாரம், இந்த மழையினால் மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாதென்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஆய்வுகளை தொடர்ச்சியாக முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## கடன் தொல்லையால் இளைஞர் தூக்கிட்டுத் தற்கொலை

கிரிபாவ - ஹெட்டியாராச்சிகம - வராவெவ பகுதியில் ஒருவர் நேற்று (20) காலை தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

வீட்டின் மொட்டை மாடியில் இவர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக கிரிபாவ பொலிஸார் தெரிவித்தனர்.

ஜயந்த ரத்நாயக்க என்ற 26 வயது இளைஞரே தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டவராவார்.

பணக்கொடுக்கல் - வாங்கலே இந்தத் தற்கொலைக்கு காரணம் என தெரியவந்துள்ளது. சடலம் சம்பவ இடத்திலேயே வைக்கப்பட்டுள்ள நிலையில் இன்று மரண விசாரணையும் பிரேத பரிசோதனையும் இடம்பெறவுள்ளது.

கிரிபாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய காலகட்டத்தில் சாமத்தியச்சடங்கு அவசியந்தானா.?

## பெற்றோரே சிந்தியுங்கள்!

புலம்பெயர் வாழ்வில் பெண்கள் முகம் கொடுக்கும் உளவியல் பிரச்சனைகளின் காரணிகளில் இந்தச் சாமத்தியச்சடங்கும் ஒன்றாக இருக்கிறது.

ஒரு பெண் உள ரீதியாகவும், உடல் ரீதியாகவும் மிகவும் பாதிக்கப் படும் பருவம் அவள் பூப்பெய்தும் பருவம்தான். இது பற்றிய சரியான புரிந்துணர்வு புலத்தில் பல பெற்றோர்களிடம் இல்லை. இந்த நிலையில் நாம் இது பற்றிப் பேச வேண்டியதொரு கட்டாயத்தில் இருக்கிறோம்.

இந்த 21ம் நூற்றாண்டில், இத்தனை தூரம் நாம் பல்வேறு துறைகளிலும் வளர்ந்து விட்ட நிலையில் சாமத்தியச் சடங்குகள் அவசியந்தானா? சாமத்தியச் சடங்கு எமது கலாசாரத்தில் ஏன் இடம் பிடித்துக் கொண்டது? என்பது போன்றதான கேள்விகளுக்கு மிகத் தெளிவான கருத்துக்களோ அல்லது விளக்கங்களோ எனக்கு இதுவரை சரியான முறையில் கிடைக்கவில்லை.

பல பெரியவர்களுடன் சாமத்தியச்சடங்கு பற்றிப் பேசிப் பார்த்த போது ஒவ்வொருவரும் சொன்ன அதற்கான காரணங்கள், ஒவ்வொரு விதமாகவே இருந்தன.

1 - ஆண் பெண் பாகுபாடின்றி விளையாடித் திரிந்தவளை ஆண்களில் இருந்து பிரித்து வைப்பதற்காக..

2 - எனது வீட்டில் ஒரு குமர் இருக்கிறாள். மணமகன்மார் பெண் கேட்டு வரலாம் என்பதைத் தெரியப் படுத்துவதற்காக..

3- ருதுவானால்தான் அவள் முழுமையான பெண் என்ற உடல் ரீதியான அங்கீகாரம் சமூகத்திடம் இருந்து கிடைக்கும் என்பதற்காக... என்று காரணங்கள் நீண்டன.

இப்படியான கருத்துக்களின் மத்தியில், "இவள் இனி உங்கள் பிள்ளை நீங்கள்தான் அவளைக் காக்க வேண்டும்" என்று சொல்லி ஊர்மக்களிடம் பிள்ளையை ஒப்படைப்பதற்காக... என்றும் ஒரு பெரியவர் சொன்னார்.

இப்படியானதொரு கருத்தைக் கேட்க..., சிரிப்பாக இல்லை...!

கற்றவர் ஆழ்ந்து ஆராய்ந்து ஆக்க பூர்வமானதொரு கருத்தை ஆணித்தரமாகத் தருவார் என்றுதான் எதிர் பார்த்தேன். கருத்துக்கள் தருவது அவரவர் சுதந்திரம். ஆனால் எம்மத்தியில் உள்ள கற்றவர்கள் இப்படியான உப்புச் சப்பற்ற கருத்துக்களைத் தருவது எமது சமூகத்தை, எமது கலாசாரத்தை, எமது பண்பாட்டை நாமே அவமானப் படுத்துவதற்குச் சமானமாகிறது.

குறை பிடிக்கவும், குற்றம் பிடிக்கவும், பருவம் பார்த்துத் தருணம் தேடி பெண்ணைச் சீரழிக்கவுமே சமூகத்துள் ஒரு கழுகுக் கூட்டம் காத்திருக்கும். ஊரவர்தான் அப்படியென்றால் உள்ளுக்குள் அதைவிடக் கேவலம். அனேகமான பாலியல் வன்முறைகளும், பாலியல் துர்ப்பிரயோகங்களும் வீட்டுக்குள்தான் நடக்கின்றன. மாமாவால், சித்தப்பாவால், அக்காவின் கணவனால், அப்பாவின் நெருங்கிய நண்பனால்... என்று, பெரும் பான்மையான பாலியல் வன்முறைகளும், பாலியல் துர்ப்பிரயோகங்களும் உள்ளிருப்பவர்களால்தான் அரங்கேறியுள்ளன. இன்னும் இன்னும் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

இன்று ஓரளவுக்காவது இவை வெளிச்சத்துக்கு வருகின்றன. ஆனால் எம்மவரிடையே இவை குமுறல்களாகவும், கோபங்களாகவும் ஆற்றாமையாகவும் பெண்களுக்குள் அடங்கிக் கிடக்கின்றன. இவைகளை வெளியில் சொல்லி கலாச்சாரம், பண்பாடு, என்று வாயளவில் உச்சரித்து மனதுள் போலியாக வாழும் மனிதமல்லா தவர்களின் முகத்திரைகளைக் கிழித்தெறிய எம் பெண்களிடம் தைரியம் இல்லை. வெளியில் தெரிந்தால் சமூகமும், அதன் கலாச்சாரமும், அதன் பண்பாடும், பாதிக்கப் பட்ட பெண்களையே பாழுங்கிணற்றில் தள்ளி விடும் என்ற பயம்.

இந்த நிலையில் நன்கு யோசித் துப் பாருங்கள்.

ஒரு பெண் தன்னைக் காத்துக் கொள்ள எமது கலாச்சாரமும் பண்பாடும் உதவுகிறதா? அல்லது விழிப்புணர்வும் தைரியமும் உதவுகிறதா? என்று. எமது கலாசாரத்தையும் பண்பாட்டையும் காத்து, எமது முகங்களை அழிய விடாது காப்பது ஆண், பெண் இருபாலாரதும் கடமை. அதற்காகப் போலிகளை, கலாச்சாரம், பண்பாடு என்று பொய்யாகப் பெயர் சூட்டி பெண்களில் திணித்து அவர்களை அடக்க நினைப்பது மடமை. இந்தப் பொய்களின் வேசம் புரியாது, போலிக் கலாச்சாரங்களில் தம்மைப் புதைத்துக் கொள்வது எம் பெண்களின் அறியாமை.

முதலில் எமது பெண்பிள்ளைகளிடம், எந்தப் பிரச்சனையையும் பெற்றோருடன் பேசி தம்மை நெருங்கும் துட்டர்களிடமிருந்து தம்மைக் காத்துக் கொள்ளும் தைரியம் வர வேண்டும். பெற்றோர்களுடன் அவர்கள் இப்படியான விடயங்களை இயல்பாகப் பேசும் துணிவு ஏற்படும் படியாகப் பெற்றோர் நடந்து கொள்ள வேண்டும்.

எமது முன்னோர்கள் வரையறுத்த அனேகமான கோட்பாடுகள் அர்த்தமுள்ள, அவசியமான விடயங்களுக்காகவே இருந்தன. அவைகள் ஒவ்வொன்றுக்குமான



கரு ஆரோக்கியமானதாகவும் அழகியதாகவும் இருந்தது.

ஆனால் நீண்ட கால ஓட்டத்தில், காரணங்கள் திரிபு பட்டது மட்டுமல்லாது காரியங்களும் ஆணாதிக்க மேலோங்கலில் மிகுந்ததொரு சுயநல நோக்குடன் கட்டாயமாகத் திரிக்கப் பட்டு, இன்றைய கால கட்டத்தில் ஏன், எதற்கு, என்ற சிந்தனைகள் எதுவுமின்றி, உண்மையான, தேவையான விடயங்கள் புறக்கணிக்கப் பட்டு, கலாச்சாரம், பண்பாடு என்ற போர்வைக்குள் பொய்யான விடயங்கள் தொடர்கின்றன.

வருத்தமான விடயம் என்னவெனில் அனேகமான பெண்களுக்கு இந்தப் பொய்யான திணிப்புகளின் போலி வடிவங்கள் புரிவதில்லை. தாம் போலிக் கலாசாரத்தில் பொசுங்கிக் கொண்டிருப்பது பற்றி அவர்கள் எந்தவித பிரக்ஞையும் கொள்வதுமில்லை. உண்மையில், சாமத்தியச் சடங்கை கோலாகலமாக ஹோல் எடுத்து விழாவாகச் செய்யும் அனேகமான பெற்றோருக்கு சாமத்தியச் சடங்கு செய்வதற்கான காரணம் என்னவென்றே தெரியாது.

1 - வீடியோ கமராவில் எடுப்பதற்கும்,

2 - என் வீட்டுச் சாமத்திய வீடு மற்றையவர் வீட்டை விடப் பெரிதாக நடந்ததெனக் காட்டு வதற்கும்,

3 - இப்படிப் பெரிதாகச் செய்யாவிட்டால் என்ன நினைப்பார் கள் என்பதான போலி கௌரவத் துக்கும்,

4 - கொடுத்த மொய்யை திரும்பப் பெற்றுக் கடன் கழிப்ப தற்கும்..,

என்றதான இன்னும் பல கார ணங்களைக் காரணமாகக் கொண்டுதான், பூப்படைந்த பெண்ணைக் காட்சிப் பொருளாக வைத்து இன்று புலம்பெயர் மண்ணில் பெரும்பாலான சாமத்தியச் சடங் குகள் நடைபெறுகின் றன. இதற்கு வெறுமே கலாசாரம், பண்பாடு என்று போலி முலாம் பூசப்படுகிறது. அவ்வளவு தான். யேர்மனிய மருத்து வர்கள் கூறுகிறார்கள் -

ருதுவாகும் பருவத்தில், ஒரு பெண் பிள்ளையின் உளத்திலும், உடலிலும் பல் வேறு மாறுதல்கள் ஏற்பட்டு அவள் ஒரு அசாதாரண நிலைக்குத் தள்ளப்படுகிறாள். இந்த அசாதாரண நிலை அவள் மனதை மேலும் குழப்பாத வகையில், பெற்றோர்கள் "இது சாதாரண விடயந்தான்" என்பதை அவளுக்கு விளங்கப் படுத்த வேண்டும். தாழ்வு மனப்பான்மையோ தற்பயமோ அவளுக்கு ஏற்படாத வகையில் அவளுடன் நிறையப் பேச வேண்டும். ஆதரவுடன் நடக்க வேண்டும், என்றும்.

இந்த நேரத்திலான அவளின் உடலின் அதீத வளர்ச்சியினால் அவள் தோள்மூட்டுகளிலும், முதுகுப் பகுதியிலும் ஏற்படும் உபாதைகளின் தன்மையை உணர்ந்து அவளுக்குத் தாராளமான ஓய்வைக் கொடுக்க வேண்டும். அவளின் தோள்மூட்டுக்களும், முதுகும் வலுப்பெறக் கூடிய வகையில் சில உடற் பயிற்சிகளை அவள் செய்ய வழி சமைத்துக் கொடுக்க வேண்டும், என்றும்.

யேர்மனியப் பாடசாலை உளவியல் ஆசிரியர்கள் சொல்கிறார்கள் - பூப்படையும் நிகழ்வை சாதாரண நிகழ்வாக எடுக்காமல் இப்படிப் பெருவிழாவாகக் கொண்டாடிப் பெரிது படுத்தும் போது, அது அந்தப் பெண்பிள்ளைகளின் மனதில் பல்வேறு பட்ட சலனங்களையும், உளவியற் தாக்கங்களையும் ஏற்படுத்தி அந்தப் பிள்ளைகளைத் தவறான பாதைக்கு இட்டுச் செல்ல வழி கோலுகின்றது, என்று.

ஆனால் இங்கே புலத்தில் என்ன நடைமுறைப் படுத்தப் படுகிறது? பல அத்தியாவசியத் தேவைகளை பெண்பிள்ளைகள் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் அந்த நேரத்தில், அத்தனையையும் விடுத்து வெறுமே சாமத்தியச் சடங்கு என்ற பெருவிழா நடாத்தப் படுகிறது. இப்படிச் செய்வதால் அந்தப் பெண்பிள்ளைகள் என்ன பயனைப் பெறுகிறார்கள்?

இதைச் சண்டையாகவோ, ஆண் பெண் பாலாருக்கிடையிலான விவாதமாகவோ எண்ணாமல் யதார்த்தமாக எல்லாப் பெற்றோர்களும் சிந்தித்துப் பாருங்கள்.

யேர்மனிய மருத்துவர்கள் கூறிய இந்த ஆதரவுகள் பெற்றோர்களிடமிருந்து கிடைக்காத பட்சத்தில்தான் பெண்பிள்ளைகள் மற்றவர்கள் மேல் கோபப் படுபவர்களாகவும், எரிச்சல் படுபவர்களாகவும் காணப்படுகிறார்கள். அல்லாதுவிடில் அழுமூஞ்சிகளாகி விடுகிறார்கள்.

இந்த உடல் ரீதியான மாறுதல்கள் ஆண்களிடமும் ஏற்படுகிறதுதான். அது சற்று வேறுபாடானதாக இருந்தாலும் அவர்களுக்கும் இந்த நேரத்தில் அன்பு, ஆறுதல், அரவணைப்பு என்பன தேவைப் படுகின்றன. அது கிடைக்காத பட்சத்தில்தான் அவர்களும் எரிச்சல், கோபம், மௌனம் என்பவற்றிற்கு ஆளாகிறார்கள். ஆனால் ஆண் பிள்ளைகளுக்கு வெளியில் செல்லவும் அவர்கள் விரும்பியதைச் செய்யவும் தாராளமான சுதந்திரம் இருப்பதால் பெண்பிள்ளைகளிடம் ஏற்படுமளவுக்கு பாதிப்பு ஆண்பிள்ளைகளிடம் ஏற்படுவதில்லை.

அதனால் முக்கியமாக, கட்டுப்பாடு என்ற பெயரில் பெண் பிள்ளைகளைக் கட்டி வைக்கும் எமது சமூக அமைப்பில் வளர்ந்து கொண்டிருக்கும் எமது பெண் பிள்ளைகளுக்கு இந்த சமயத்தில் பெற்றோரினது முழு ஆதரவும் தேவை என்பதை தமிழ்ப் பெற்றோர்கள் மறந்து விடவோ அலட்சியப் படுத்தி விடவோ கூடாது.

- சந்திரவதனா

## சிறுவையாய் சீதனம்

சீதனம் கொடுப்பதில்
சிறுவை சுமக்கின்றோம்
சீதையர் நாங்கள்
தவிக்கின்றோம்
சின்ன வயதில் கண்ட கனவுகள்
சின்னா பின்னமாகின்றதே!
பத்து பவுண் நகையுடனும்
பத்து இலட்சப் பணத்துடனும்
பெத்த பெண்ணை விலை
கேட்கும்
இந்தச் சீதனக் கொடுமை
சிறகுகட்டி எம் சமூகத்தை விட்டு
பறக்காதோ! என்று
கண்களைக் குளங்களாக்கி
கண்ணீரின் ஓடத்தில்
கதைபாடிக் கொண்டிருக்கும்
காரிகைகள் ஆயிரமாயிரம்
பெண்ணுக்கு இதுதான்
பெறுமதியென்றால்
ஆண் எதைக் கொடுத்து
தன்னை
பெறுமதியாக்குகின்றான்
காதல் வலையில் வீழ்ந்து
கல்யாணம் ஆகி
ஓரிரு ஆண்டுகழிய
பிள்ளை முளைவிட முன்னர்
சீதனம் முளைவிட்டு
எழுகின்றது.
துணைவியோ அழுகின்றது
வாழ வேண்டிய வயதுகள்
வறுமையின் சுழிவுகளால்
சமூகம் போட்ட சீதன வேலியில்
அழிகின்றதே தாளப்பந்தம்
தாயாகி வரவேண்டிய
தாய்க்குலங்கள்
வரதட்சணையில் வதங்கி
இந்தப் பாத்திரமின்றி
செலவாகின்றது அவர்கள் வயது
செல்லியல்
சீதனத்தை வாங்குவதில்
மாமி தேவாங்காய்
தூங்குகிறாள்
சிரித்தபடி வாக்குகிறாள்
எதிர்த்தவர் எந்த
ஏழையானாலும்
குறித்த தொகை
கொடுக்காவிட்டால்
முறித்திடுவாள் திருமண
உடன்படிக்கையை
வாய்விட்டு வெட்கமின்றி
வரதட்சனை கேட்கின்றாள்
ஐயோ!
இது என்ன அநியாயம்
அன்னை ஆக நினைக்கும்
நிலையை
சீதனம் வலைவிரித்துத்
தடுக்கின்றதே
பொருள் கொடுத்தும்
பணம் கொடுத்தும்
செய்து கொள்வதா?
பெண்கள் திருமணம்
என்னடா அநியாயம்
விலைவாசி ஏற்றம் போல்
சீதன விலைவாசி
ஏற்றம் காணுதே!
சிறுவையாய் சீதனம்
சீதையர் எமக்கு அமையுதே!

- ஜெவம் ஜெகன்

பெண்ணுக்காக...




**ஒருநாள்** சொல்லியது, "மிகவும் ரகசியமான பல பைல்கள், அறிக்கைகள், குறிப்புகள் முதலியவற்றைச் சேகரிக்கச் சில மிருகங்கள் ஓயாமல் ஒழியாமல் உழைக்க வேண்டியதாக இருக்கிறது". இந்த வார்த்தைகளே புரியாத சாமான்ய மிருகங்களுக்கு விஷயம் எப்படிப் புரியும்? "ஒவ்வொரு நாளும் மிகவும் சிரமப்பட்டுச் சம்பாதித்த அனைத்தையும் காகிதங்களில் விடாமல் எழுதி, காகிதம் நிரம்பியதும் யார் கையிலும் அதெல்லாம் அகப்பட்டு விடாமல் அடுப்பில் போட்டு எரித்தாக வேண்டும். பண்ணையின் நலனே இதை நம்பித்தான் இருக்கிறது" என்று சொல்லியது ஸ்க்வீலர். எனினும், இந்தப் பன்றிகளோ நாய்களோ உணவு எதையும் உற்பத்தி செய்வதில்லை என்பது உண்மைதான்.

அவற்றின் பசி மட்டும் அதிகமாக இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். மற்ற மிருகங்களைப் பற்றிய வரையில் ஏதாவது சொல்ல வேண்டுமானால், அவற்றின் வாழ்க்கை எப்போதும் போலவேதான் இருந்தது. எப்போதும் அரைப்பட்டினிதான், எப்போதும் அதே வைக்கோல் படுக்கைதான், எப்போதும் குடிக்கும் தண்ணீர் அந்தக் குட்டையில் இருப்பதுதான், எப்போதுமே வயலில் ஓயாத உழைப்புத்தான், மாரி காலத்தில் குளிரில் நடுங்க வேண்டும், கோடை காலத்தில் ஈக்கள் உபத்திரவம் செய்யும். இப்போது இருந்ததைவிட ஜோன்ஸ் அடித்துவிரட்டப்பட்ட பின் அதாவது புரட்சியின் முதல் சில வருடங்களிலாவது நிலைமை சிறப்பாக, உயர்வாக இருந்ததா என்று சில மிருகங்கள் ஞாபகப்படுத்திப் பார்க்க முயன்று தங்கள் மண்டைகளை உடைத்துக்கொண்டன.

தீர்மானமாக அவற்றிற்கு எதுவும் சொல்லும்படியாக ஞாபகம் இல்லை. அவற்றின் இன்றைய வாழ்வை எதனுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது என்றுஅவற்றிற்குத் தெரியவில்லை. ஒப்பிடக்கூடியதாக ஒன்றும் இருந்ததில்லை என்றுதான்தோன்றியது. ஸ்க்வீலரின் புள்ளிவிபரங்களைத் தவிர வேறு எதுவும் ஆதாரமாக அவற்றிற்குக் கிடைக்கவில்லை. ஆனால் ஸ்க்வீலரின் புள்ளிக் கணக்குகள், நாளுக்கு நாள் நிலைமை சீரடைந்து மேன்மையடைந்திருப்பதாகத்தான் நிரூபித்தன. இதெல்லாம் முடிவில்லாத பிரச்சினையாகவும், விடையற்ற புதிராகவும் தான் விலங்குகளுக்குத் தோன்றின.

எது எப்படியானாலும், பிரச்சினையைப் பற்றிச் சிந்திக்கவோ, யோசனை செய்து புதிருக்கு விடை காணவோ மிருகங்களுக்கு இப்போது நேரமேயில்லை. கிழட்டு பெஞ்சமின் மட்டும்தான் எல்லாவற்றையும் நினைவிலிருத்திக் கொண்டதாகச் சொல்லிக்கொண்டது. தனது நீண்ட வாழ்க்கையின் அனுபவத்தில் எதுவும் எப்படியும் சீரடைந்து விடுவதுமில்லை, எப்படியும் மோசமாகி விடுவதுமில்லை, அநேகமாக, சற்றேறக் குறைய ஒரேமாதிரியாகத் தான் எல்லா விஷயங்களும் எப்போதுமே இருந்துவருகின்றன. என்று அபிப்பிராயப்பட்டது பெஞ்சமின். பசி, க்ஷ்டம், ஏமாற்றம் எல்லாம் அதி உச்சமும் அடைவதில்லை. அதிகமாகக் குறைந்துவிடுவதுமில்லை. இதுதான் மாறாத இயற்கை நியதி என்றது பெஞ்சமின். இருந்தும் விலங்குகள் நம்பிக்கை இழக்கவில்லை. அது மட்டுமல்ல, சுதந்திர மிருகங்களாக, விலங்குப் பண்ணையின் பிரஜைகளாக இருப்பதிலே அவை கௌரவமும், பெருமையும் பாராட்டிக்கொண்டன.

(நாளை)

## வரைவோம் வாருங்கள்



## கண்ணாடியின் கதை



சுமார் எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஆதி மனிதன் கண்ணாடிகளை உபயோகப்படுத்தி னான். அந்தக் கண்ணாடிகள், எரிமலைக் குழம்பு காய்ந்து கெட்டியாகும்போது உண்டானவை. இந்தக் கட்டிகளைக் கத்தி செய்வதற்கும், அம்புகள் செய்வதற்கும் பயன்படுத்திக் கொண்டான். கண்ணாடிகளை மனிதனே படைக்கும் முறை கி.மு. மூவாயிரம் ஆண்டளவில் மத்திய கிழக்கு நாடுகளில் உண்டாகியிருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். கி.மு. ஆயிரம் ஆண்டுவாக்கில் வெட்டவெளிகளில் கண்ணாடிக் குழம்புகளை வார்த்து கண்ணாடி செய்யும் முறை எகிப்தியர்க ளால் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பிறகு ரோமானியர்கள் கி.பி. முதல் நூற்றாண்டளவில் கண்ணாடிகளாலான சிறிய பொருட்களை உருவாக்கிக் கொண்டார்கள்.

பன்னிரண்டாம் நூற்றாண்டு வரை இஸ்லாமிய நகரங்களான பாக்தாத் மற்றும் கெய்ரோவில் கண்ணாடி செய்யும் கலை வளர்ந்தது. இதனால் தான் இந்தக் காலகட்ட கண்ணாடிகளை இஸ்லாமியக் கண்ணாடிகள் என்று அழைத்தார்கள். பன்னிரண்டிலிருந்து பதினாறாம் நூற்றாண்டுவரை வெனிஸ் நகரில் இந்தக் கலை உச்சகட்டம் தொட்டது. பாதரசத்தைப் பயன்படுத்தி முகம் பார்க்கும் கண்ணாடிகளை செயற்கையாகச் செய்யும் தொழில்நுட்பத்தையும் அவர்கள் அறிந்திருந்தனர். ஆனால், இந்த நுணுக்கங்களை அவர்கள் ரகசியமாக வைத்திருந்தார்கள். ஆனால், பதினேழாம் நூற்றாண்டளவில் இந்த ரகசியம் கசிந்து, ஐரோப்பிய நாடுகள் பலவும் கண்ணாடிகள் செய்தன. 17 முதல் 19ம் நூற்றாண்டு வரை கண்ணாடிகளால் டெலஸ்கோப், தெர்மாமீட்டர், மைக்ரோஸ்கோப் போன்ற பல அறிவியல் தொழில்நுட்பங்கள் வளர்ந்தன.

இதன் தொடர்ச்சியாக பார்வைக் கோளாறுக்கான கண்ணாடிகள் ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்டன. 1903ம் ஆண்டில்தான் அமெரிக்காவில் ஒரு நிமிடத்தில் ஆயிரக்கணக்கான கண்ணாடிகளை தயாரிக்கும் தானியங்கி இயந்திரம் உருவானது.

## ஊஞ்சல்

ஆல மரத்து ஊஞ்சலாம்
அமர்ந்து ஆடிப் பாடலாம்
காலை உயர நீட்டியே
கீழும் மேலும் ஆடலாம்.

விண்ணை நோக்கிப் போகலாம்
வடக்குத் தெற்குப் பார்க்கலாம்
பண் இசைத்துப் பாடலாம்
பகல் முழுதும் ஆடலாம்.

பழக்க மில்லாப் பிள்ளைகள்



பையப் பைய ஆடலாம்
பழக்கமான போதிலே,
பறந்து விண்ணில் ஆடலாம்.

அண்ணா, தம்பி, தங்கை
இணைந்து நாமும் ஆடலாம்
இன்னிசைகள் இசைத்தே
இனிதாய் எழும்பி ஆடலாம்

ஆட ஆட அடங்காது ஆசை
விட்டிறங்க ஆசை இல்லை
அம்மா வந்து கூப்பிட்டால்
அடம் பிடித்தே ஆடுவோம்

## சிறுவர் அமுதம்

### உங்களுக்குத் தெரியுமா?.............

■ பாலைவன போபாப் மரங்கள் தனது உடலில் 1000 லீற்றருக்கும் அதிகமான நீரினை சேமிக்கும் தன்மை கொண்டவையாகும்.






■ 1980ம் ஆண்டு வரையும், உலகில் தொலைபேசி பாவனையற்றதாக விளங்கிய ஒரே நாடு பூட்டான் மட்டும்தான்.

■ பூகம்பத்தின் போது அந்துப் பூச்சிகளினால் பறக்கவே முடியாது.

■ மனிதனின் வலது புற நுரையீரலானது இடது புற நுரையீரலினை விடவும் பெரியதாகும். ஏனெனில் வளி மற்றும் இதயத்டிதின் அமைவிடத்தினைக் கொண்டுள்ளமையாலாகும்.






■ உலகில் மிகக் குறைந்த வெப்பநிலையைக் கொண்டுள்ள கடலாக ரஷ்சிய நாட்டில் அமைந்துள்ள வெண் கடலானது விளங்கு கின்றது. இதன் வெப்பநிலை -2 டிகிரி செல்சியஸ் ஆகும்.

■ உலகில் மிகக் கூடிய வெப்பநிலைக் கொண்டுள்ள கடலாக பெர்சியன் வளைகுடாவில் அமைந்துள்ள கடலானது விளங்குகின் றது. வசந்த காலத்தில் இதன் வெப்பநிலை 35.6 டிகிரி செல்சியஸ் ஆகும்.



# மன்னார் கட்டாக்காலிக் கழுதைகளுக்கும் ஒரு விடிவு காலம்

மன்னாரில் வாழ்ந்து வரும் சுமார் 500 இற்கு மேற்பட்ட கழுதைகள் மூலம் அதன் உச்சப்பயனைப் பெறுமுகமாக மன்னார் நகரசபை ஆலோசனைகளை கடந்த 5 மாதங்களாக நடாத்தி வந்தது.

இதன் பயனாக "அவுஸ்திரேலியா டயஸ்போரா லங்கா" என்ற அமைப்பின் உதவி கோரப்பட்ட போது, அவர்கள் பல வெளிநாட்டு மிருக வளர்ப்பு சங்கங்களுடனும் கால்நடைப் பாதுகாப்பு வைத்தியர்களுடனும் கலந்துரையாடியதின் பேரில் அநாதரவான மன்னார் கழுதைகளுக்கு ஓர் விடிவு காலம் ஏற்பட்டுள்ளதாக மன்னார் டயஸ்போரா லங்கா அமைப்பின் பிரதி நிதி சின்கிலேயர் பீற்றர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன் முன்னோடியாக கடந்த 07, 08, 09ம் திகதிகளில் இந்தியாவிலிருந்து மூன்று ஆலோசகர்கள் மன்னாரிற்கு வருகை தந்து ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர்.

இக்குழுவின் தலைவராக இந்தியா புதுடில்லியைச் சேர்ந்த திரு. வினோத் கருணா செல்வி இராம் பர்வின் சமூக சேவையாளரும் கல்வித் தொடர்பதிகாரியும் சென்னையைச் சோர்ந்த வைத்திய கலாநிதியுமான ரமேஸ், அவுஸ்திரேலியா டயஸ்போரா லங்காவின் தலைவர் திரு. ஜெரமி லியனகே அவர்களும் சமூகமளித்திருந்தனர்.

இவர்கள் கழுதைகளின் பிரயோசனங்கள் பற்றிப் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவ் ஆய்வின் மூலம் மன்னார் மக்களில் ஒரு சிலர் கழுதைகளின் பிரயோசனத்தை அறிந்து கொண்டதுடன் இவற்றை பராமரிப்பதன் மூலம் கழுதைகளின் உச்சப் பயனைப் பெறமுடியுமென நம்பிக்கை தெரிவித்தனர்.

கழுதைகளுக்கான பராமரிப்பு இல்லங்கள் உலகில் 1973ல் ஆரம்பிக்கப்பட்டதாகவும் இதன் மூலம் பன்னிரெண்டாயிரத்திற்கும் மேற்பட்ட கழுதைள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும். ஐக்கிய இராச்சியம் உலகின் 8 ஆவது கழுதை பராமரிப்பு நாடாக திகழ்வதாகவும் அகில உலகில் 342 ஊழியர்கள் தொழில்நுட்பம். வைத்தியம், ஆலோசனை. பயிற்சி போன்றவற்றை நடாத்தி வருவதாகவும் தெரியவருகின்றது.

இகழுதையின் வாய்க்கு கடிவாளம் இட்டு ஆடு மாடு குதிரைகள் போன்று பல வேலைகளுக்கு அதை உபயோகிக்க முடியும். சாரசரி ஓர் கழுதை 80 - 120 கிலோ கிராம் நிறையுடையதாகவும் 30 - 50 கிலோ கிராம் பொதி சுமக்க கூடியதாக உடலமைப்பு கொண்டுள்ளதாகவும்

அதன் கால்கள் கற்பாறைகளிலும் உயரமான மேட்டிலும் உயர்ந்த கட்டிட படிகளில் ஏறக்கூடியவாறும் நன்கு பலம் உள்ளதாக அமைந்துள்ளது.

இதன் சாணம் நுளம்பு கொசுக்கள் ஈக்கள் போன்றவற்றிற்கு எதிர்ப்பு சக்தி உள்ளது. இவற்றை புகைமுட்டுவதன் மூலம் பாதுகாப்பளிக்க முடியும். ஆபிரிக்க நாடுகளில் இவற்றின் இறைச்சியை உண்ணுகின்றனர்.

மன்னாரில் 50 வருடங்களுக்கு முன்பு சலவைத் தொழிலாளர்கள் தமது பொதிகளை கழுதையில் ஏற்றியுள்ளதாகவும் மீனவர்கள் வீட்டில்லிருந்து கடலுக்கு வலைகளையும். பிடிக்கப்பட்ட மீன்களையும் சந்தைக்கு கொண்டு வரவும்

விறகு வெட்டி பிழைக்கும் மக்கள் காடுகளில் விறகு வெட்டி சுமந்து கெண்டு வந்ததாகவும் மன்னார் கோட்டையை கட்டவதற்கு திருக்கேதீஸ்வரத்தில் இருந்து முருகைக் கற்கள் கழுதையில் கொண்டு வந்ததாகவும் சான்றுகள் பகர்கின்றன.

மேலும் ஐக்கிய ராட்சியத்தில் இருந்து கழுதை கள் புனர்வாழ்வு நிபுணர்கள் ஐந்து பேர் அடுத்த மாதம் மன்னாரிற்கு வருகை தரவுள்ளனர்.

இதனால் வேண்டப்படாத மிருகமாக ஒதுக்கி விடப்பட்ட மன்னார் கழுதைகளுக்கு ஓர் விடிவு காலம் பிறக்குமென மன்னார் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# தீர்வுத் திட்டத்தை அரசாங்கமே முன்வைக்க வேண்டுமாம்

வலிகாமம்

பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையில் ஒரு தீர்வுத் திட்டத்தை அரசு மக்கள் மத்தியில் முன்வைக்க வேண்டும்.அரசு முன்வைக்கும் தீர்வுத் திட்டத்தில் இருந்தே பேச்சுவார்த்தையை நோக்கி நகர முடியும்.

மேற்கண்டவாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வலி மேற்கு சங்கானை பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் தெரிவித்துள்ளார்.

இவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

தீர்வு ஒன்றை நோக்கிச் செல்வதற்க்கு முன்பாக பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்க மத்தியில் நம்பிக்கைகளை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் அரசு ஈடுபட வேண்டும். ஆனால் இன்று தமிழ் மக்கள் மத்தியில் இருநத கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் எதிர் பார்ப்புகளும் கூட தகர்ந்து போகும் நிலையினையே அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. செயல்பட்டுக் கொண்டும் இருக்கின்றது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட 13 வது திருத்தச்சட்டத்தை தமிழ் மக்கள் தங்களுக்கான ஒரு தீர்வாக முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும் அதனை ஒரு அடிப்படையாக கருதுகின்றார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பேச்ச வார்த்தைக்கு வருமாறு கோரிக்கொண்டு இருப்பதை விடுத்து முடிந்தால் ஒரு முன் ஏற்பாடாக ஒரு தீர்வுத் திட்டத்தைப் பகிரங்கமாக அரசு அறிவிக்கமுடியுமா?

தமிழ் மக்களுக்கும் சர்வதேசத்திற்கும் அதனை வெளிப்படுத்த முடியுமா? நேர்மையும் தணிச்சலும் இருந்தால் அதனை அரசாங்கம் செய்து காட்டட்டும்.

அதனை பேச்சுவார்த்தைக் காண அடிப்படையாக வைத்தக் கொண்டு அதில் உள்ள குறை நிறைபற்றி தமிழ்ர் தரப்பும் அரசம் பேச்சுவார்த்தையில் ஈடுபடலாம்.

யுத்தம் முடிந்த பின்பு பாதிக்கப்பட்ட தமிழ் மக்கிளன் அமனங்களை வெல்லும் விதத்தில் ஒரு தீர்வை நோக்கி நகர்ந்திருந்தால் தமிழ் மக்கள் நடந்த முடிந்த அவலங்களை சில வேளை எல்லாம் மறந்திருக்கக் கூடும்.

ஆனால் இன்று வெநத புண்ணில் வேல் பாய்சுவதைப் போல நில அபகரிப்பக்களும் சங்களக் குடியேற்றங்களும் தமிழ் மக்களை மென்மேலும் அவலத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

எனவே அரசாங்கமும் நாட்டின் ஜனாதிபதியும் வெறும் வார்த்தை ஜாலங்களை மட்டுமே பயன் படுத்தி தமழ் மக்களை ஏமாற்ற முயல்வதை ஏற்றுக் கொள்ள முடியாதெனவும் தெரிவித்துள்ளார்.

# யாழ். நகர வீதி அபிவிருத்தி குறித்து இன்று கலந்துரையாடல்

வீதி அபிவிருத்தி நடவடிக்கையினால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ற தொனிப்பொருளிலான கலந்துரையாடல் இன்று 21 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 4 மணிக்கு முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

# தீவகத்தில் பணிபுரிய அரசாங்க உத்தியோகத்தர்கள் தயக்கம்:

அரசாங்க ஊழியர்கள் தீவுப் பகுதிகளில் கடமையாற்றத் தயக்கம் காட்டுவதாக யாழ். மாவட்ட செயலாளர் சுந்தரம் அருமைநாயகம் விசனம் தெரிவித்துள்ளார்.

அரச உத்தியோகத்தர்களுக்கான புதிய நியமனம் வழங்கும் போது நியமனம் பெறும் சில உத்தியோகத்தர்கள் பின்தங்கிய பிரதேசங்களுக்கு சென்று கடமையாற்ற பின்னடிப்பதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

திணைக்களங்களில் கடமையாற்றும் போது உத்தியோகத்தர்கள் சேவை மனப்பாபுடன் கடமையாற்றுமாறும், பின்தங்கிய பிரதேசங்களுக்குக் கடமை யாற்றுவதற்கு முன் வருமாறும் யாழ். மாவட்ட செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பின்னடிப்பினால், நியமன ஒழுங்கமைப்பில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அரச நியமனங்கள் பெற்றுக்கொள்ளும் அனேகமானோர் பணி நிலைகள் நிர்ணயிக்கும் போது, அங்கு செல்ல முடியாமைக்கு பல்வேறு காரணங்கள் காட்டுவதாகவும் மாவட்டச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவம் நிர்மாணித்த வீடு கையளிப்பு



513ஆம் படைப்பிரிவின் ஏற்பாட்டில் அளவெட்டி மத்திப் பிரதேசத்தில் சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீடு இன்று செவ்வாய்கிழமை கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீட்டின் உரிமையாளரிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்த நிகழ்வின் போது தெரிவு செய்யப்பட்ட 18 மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் மாற்றுதிறன் கொண்ட இருவருக்கு சக்கர நாற்காலிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் படைப் பிரிவுகளின் தளபதி மற்றும் தெல்லிப்பளை பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள் பொதுமக்கள் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# செக்குடியரசின் பாராளுமன்ற தூதுக்குழு அமைச்சர் டக்ளஸைச் சந்தித்துக் கலந்துரையாடியது



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை செக்குடியரசின் பாராளுமன்ற தூதுக் குழுவினர் சந்தித்து அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டனர்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சுக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட தூதுக் குழுவினர் அமைச்சின் செயற்திட்டம் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தனர்.

இதன்போது பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான பனை அபிவிருத்திச் சபை, கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் பேரவை மற்றும் வடகடல் நிறுவனம் ஆகியவற்றுக்கு ஊடாக நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பாகவும் அதன் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகளது மேம்பாடு தொடர்பாகவும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் குடிசைக்கைத் தொழில் துறையூடாக துறைசார்ந்தவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பாக எடுத்து விளக்கிய அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி எதிர்காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்திட்டங்கள் தொடர்பாகவும் இதன்போது எடுத்து விளக்கினார்.

அத்துடன் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைப்பாடு தொடர்பில் குறிப்பாக தமிழர் பகுதிகளில் அரசினால் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள், இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசு முன்னெடுத்து வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பிலும் அதனைக் குழப்பும் வகையில் சில அரசியல் கட்சிகள் சர்வதேச சமூகத்தில் மேற்கொண்டு வரும் பொய்யான பிரசாரங்கள் குறித்தும் இதன்போது தூதுக் குழுவினருக்கு விளக்கமளிக்கப் பட்டது.

இதனிடையே செக் குடியரசின் தொழில்நுட்பத்துறைகளை அறிமுகப்படுத்தி அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும், இலங்கையில் முதலீடுகளைச் செய்வதற்கு தமது அரசும், வர்த்தக நிறுவனங்களும் தயாராக இருப்பதாகவும் இதன் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தக உறவை வலுப்படுத்த முடியுமெனவும் தூதுக் குழுவின் தலைவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# காஸா மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்துங்கள்: இஸ்ரேலுக்கு பான் கி மூன் அவசரமாக அழைப்பு

இஸ்ரேல் - காஸா வன்முறைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என ஐ.நா பொதுச் செயலாளர் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது இஸ்ரேல் தொடர்ந்து 6வது நாளாக தாக்குதல் நடத்தி வருகிறது.

கடல் வழி மற்றும் வான்வழியாக நடந்த இந்த தாக்குதல்களில் ஆயுத கிடங்குகள், பொலிஸ் நிலையங்கள், ஹமாஸ் போராளிகளின் பதுங்குமிடங்கள் தாக்கப்பட்டன. இதுவரை 1350 இலக்குகள் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.



இந்நிலையில் பாலஸ்தீனியர்களுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே யுத்த நிறுத்தத்தை கொண்டு வரும் முயற்சியில் எகிப்தி இறங்கியுள்ளதுடன், இதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இதில் இஸ்ரேலிய தூதுக்குழுவொன்றும் கலந்து கொண்டிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கிடையே காஸா- இஸ்ரேல் பகுதிகளில் உடனடியாக போர் நிறுத்தத்தை கொண்டு வர வேண்டும் என ஐ.நா பொதுச் செயலாளர் பான் கி மூன் தெரிவித்துள்ளார்.

இதற்காக அவர் கெய்ரோ சென்று, அங்கு நடக்கும் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள உள்ளார்.

# சீனாவின் ஆதிக்கத்தை எதிர்க்கும் மறைமுக நோக்கில் ஒபாமா தென்கிழக்காசிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம்

தென்கிழக்காசிய நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அந்நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஒபாமாவின் மறைமுக நோக்கம் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்ப்பதாகுமென்று அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக இரண்டாம் முறை தெரிவு செய்யப்பட்ட பராக் ஒபாமா தனது முதலாவது வெளிநாட்டு விஜயமாக தென் கிழக்காசிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.



அமெரிக்கா வெளிவிவகார துறை அமைச்சர் ஹிலாரியுடன் பயணம் மேற்கொண்டுள்ள ஒபாமா, முதற் கட்டமாக தாய்லாந்து பின்பு மியான்மர் இதையடுத்து கம்போடியாவில் நடைபெற உள்ள மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

இந்தச் சுற்றுப் பயணத்தின் முக்கிய நோக்கமாக அமெரிக்க பொருளாதார, அரசியல் மற்றும் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக ஒபாமா கவனம் செலுத்தவுள்ளார். மேலும் மியான்மார் சிறையில் வாடும் நூற்றுக்கணககான அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பாகவும் அங்கு ஜனநாயகத் தேர்தலை முன்னெடுப்பது தொடர்பாகக் கலந்து ஆலோசிக்கும் நோக்கத்துடனேயே ஒபாமாவின் விஜயம் அமைந்துள் ளதாக கூறப்படுகிறது.

மேலும் தென் கிழக்கு ஆசியாவுக்கான விஜயத்தின் பின்னர் ஆசியாவுக்கான அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக ஒபாமா மீளாய்வு செய்யவுள்ளார். இந்த விஜயத்துக்கான மறைமுக நோக்கமாக தென்கிழக்காசியாவில் அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்ப்பதாக இருக்கலாம் எனவும் அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# வீட்டிற்கு சென்று ஆங் சாங் சூகியை சந்தித்தார் ஒபாமா

மியான்மருக்கு சென்ற அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, எதிர்க்கட்சி தலைவர் ஆங் சாங் சூகியை சந்தித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கம்போடியாவில் நடைபெறும் ஆசியான் மாநாட்டுக்கு செல்லும் வழியில் மியான்மருக்கு சென்றார்.



முதலில் மியான்மர் ஜனாதிபதி தெய்ன்செய்ன்-ஐ சந்தித்த ஒபாமா, பின்னர் எதிர்க்கட்சி தலைவர் ஆங் சான் சூகி-யை அவரது இல்லத்துக்கு சென்று சந்தித்தார்.

அந்த வீட்டில் தான் இதற்கு முன்னர் ஆங் சான் சூகி சிறை வைக்கப்பட்டிருந்ததார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சந்திப்புக்கு பின்னர் ஒபாமா கூறுகையில், கடந்த சில ஆண்டுகளாக மியான்மரில் அரசியல் முன்னேற்றத்துக்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

ஆங் சாங் சூகி விடுதலை செய்யப்பட்டதன் மூலமாகவும், தேர்தலில் அவர் வெற்றி பெற்றதன் வாயிலாகவும் இந்த முன்னேற்றத்தை அறிய முடிகின்றது.

ஜனநாயகத்தை நோக்கி நடைபோடும் முன்னேற்றம் தொடருமானால், மியான்மருடனான அமெரிக்காவின் நல்லுறுவு மேலும் பலப்படும்.

தற்போதைய சீர்திருத்தத்தின் மூலம் இந்த அழகான நாட்டில் பல மாற்றங்கள் ஏற்படும்.

அச்சத்துடன் ஆட்சி நடத்தும் நாடுகளுக்கு அமெரிக்கா உதவிக்கரம் நீட்டும் என்று நான் பதவியேற்றபோது வாக்குறுதி அளித்தேன். அந்த வாக்குறுதியை நிறைவேற்றவும், நட்புக்கரம் நீட்டவும் உங்களிடம் நான் இப்போது வந்துள்ளேன் என்று தெரிவித்தார்.

# கனடாவில் வெகு சிறப்பாக நடந்தேறிய கிறிஸ்மஸ் தாத்தாவின் ஊர்வலம்

கனடாவில் கிறிஸ்துமஸ் தினத் திற்கு ஐந்து வாரங்களுக்கு முன்பாக வரும் ஞாயிற்றுக் கிழமையில் கிறிஸ்துமஸ் தாத்தா ஊர்வலம் கொண்டாடப்படுவது வழக்கம்.

இந்நிலையில் கனடாவின் ரொறண் ரோவில் நேற்றை தினம் கிறிஸ்துமஸ் தாத்தா ஊர்வலம் வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது.

தொடர்ந்து 108 வருடங்களாக இந்த விழா கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.



# உலக பார்வை

## 12 ஆண்டுகளுக்கு முன்பு பதப்படுத்தி வைத்திருந்த கருமுட்டை மூலம் குழந்தை பெற்றெடுத்த பெண்

12 ஆண்டுகளுக்கு முன்பு பதப்படுத்தி வைக்கப்பட்ட கருமுட்டை மூலம் அர்ஜென்டினா பெண் ஒருவர் இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார்.



அர்ஜென்டினா நாட்டின் தலைநகரான பியூனஸ் ஏர்ஸைச் சேர்ந்தவர் மோனிகா ஜபோடாக்ஸ்னி(வயது 45). அவரது கணவர் கில்லர்மோ ஹுசக்.

இயற்கையாக கருத்தரிக்க முடியாத மோனிகா செயற்கை முறை மூலம் கருத்தரிக்க முயன்று பல தடவை தோல்வியையே சந்தித்தார்.

அப்போது கடைசியாக ஒரு முறை முயற்சி செய்து பார்ப்போம் என்று எண்ணிய மோனிகா, 12 ஆண்டுகளுக்கு முன்பு பதப்படுத்தி வைத்திருந்த கருமுட்டையை கடந்தாண்டு பயன்படுத்தி உள்ளார்.

இதனையடுத்து கடந்த ஜனவரி மாதம் அறுவை சிகிச்சை மூலம் மெர்சிடீஸ், குவாடலூப் என்னும் இரட்டைக் குழந்தைகள் பிறந்தன.

இதற்கு முன்பு அதிகபட்சமாக 7 ஆண்டுகள் பதப்படுத்தப்பட்ட கருமுட்டையில் இருந்து தான் குழந்தை பிறந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஆண்டுகள் ஆக ஆக கருமுட்டை சேதமடையலாம் என்னும் நிலைமையில் மோனிகா 12 ஆண்டுகள் பதப்படுத்தப்பட்ட கருமுட்டையில் இருந்து இ[illegible]டைக் குழந்தைகளை பெற்றெடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



மியான்மரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா, அந்நாட்டு எதிர்கட்சித் தலைவர் ஆங் சான் சூச்சியை சந்தித்து பேசினார்.

## விமானிகளில் பலர் அரைத் தூக்கத்தில் விமானம் ஓட்டுகிறார்களாம்: ஆய்வில் அதிர்ச்சி தகவல்

விமானத்தில் பயணம் செய்யும் பயணிகளின் உயிர், விமானிகளின் கையில்தான் இருக்கிறது. அவர்கள் கொஞ்சம் அசந்தாலோ அல்லது கவனம் சிதறினாலோ ஏற்படும் விளைவை எண்ணிப் பார்த்தாலே நடுக்கம் ஏற்படுகிறது. ஆனால் விமானிகளில் பலர் அரைத் தூக்கத்தில் விமானம் ஓட்டுகிறார்கள் என்பதை உங்களால் நம்ப முடிகிறதா? ஆனால் ஆய்வு முடிவு அதைத்தான் சொல்கிறது.

ஆஸ்திரியா, ஸ்வீடன், ஜெர்மனி மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வில், மூன்றில் ஒரு விமானிகள், நடுவானில் விமானம் கட்டுப்பாட்டுக்குள் வந்து சீராக சென்றுகொண்டிருக்கும்போது தூங்குவது கண்டறியப்பட்டுள்ளது. ஐந்தில் நான்கு விமானிகள் காக்பிட்டில் (விமானிகள் அறை) இருக்கும் போது சோர்வை சமாளித்துக் கொண்டு இருக்கின்றனர்.

விமானிகள் சங்கமான ஐரோப்பிய காக்பிட் அசோசியேசன் வெளியிட்ட இந்த ஆய்வு முடிவில், பெரும்பாலான விமானி கள் விமானம் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்போது அரைத் தூக்கத்திலோ அல்லது எழுப்பும் வரை முழு தூக்கத்திலோ இருப்பது தெரிய வந்துள்ளது. இத்தகவலை டெய்லி மெயில் வெளியிட்டுள்ளது.

இங்கிலாந்து, நார்வே மற்றும் ஸ்வீடனில் நடத்திய ஆய்வில், 43 முதல் 54 சதவீத விமானிகள் நடுவானில் விமானம் பறந்து கொண்டிருக்கும்போது சோர்வு காரணமாக தானாகவே தூங்கியதாகவும், சக விமானி எழுப்பும் வரை தூங்கியதாகவும் தெரிவித்துள்ளனர்.

2010 முதல் 2012-ம் ஆண்டு வரை 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஐரோப்பிய விமானிகளிடம் நடத்தப்பட்ட இந்த சர்வே முடிவு வெளியான சில வாரங்களில், விமானத்தில் விமானிகள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள், வேலை நேரம்,

ஓய்வு தேவை ஆகியவை ஆய்வு செய்யப்பட்டு அதன் திட்டங்களை ஐரோப்பிய விமான பாதுகாப்பு ஏஜென்சி முன்மொழிந்துள்ளது.

# 2ஜி வழக்கு: உச்ச நீதிமன்றம் கண்டனம்



இந்தியாவின் இமாலய ஊழலான 2ஜி வழக்குகளை கையாள்வதில் மத்திய அரசு அலட்சியம் காட்டுவதாக உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்துள்ளது. 2ஜி அலைக்கற்றை ஏலத்தில் உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படவில்லை என்று சட்டத்தரனி பிரசாந்த் பூஷன் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு விசார ணைக்கு வந்தபோது மத்திய அரசின் துணை செயலாளர் அள விலான அதிகாரி ஒருவர் பிர மாண பத்திரத்தை தாக்கல் செய் தார். இதனை எற்க முடியாது என நீதிபதிகள் தெரிவித்தனர். செயலாளர் அளவிலான அதிகாரி ஒருவர்தான் பிரமாணப் பத்திரத்தை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் நீதிபதிகள் உத்தர விட்டனர்.

மேலும் உச்சநீதிமன்றத்தால் இரத்துச் செய்யப்பட்ட 122 உரிமங்களுக்கும் மறுஏலம் நடத்தாதது ஏன்? இது தொடர்பாக 2 நாட்களுக்குள் மத்திய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர். மேலும் 2ஜி வழக்குகளை கையாள்வதில் மத்திய அரசு மெத்தனமாக செயல்படுவதாகவும் உச்சநீதிமன்றம் கண்டனம் தெரிவித்தது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் தொலைத் தொடர்பு நிறுவனங்கள் எதிர்பார்த்த உரிமங்களுக்கான ஏலம் திட்டமிட்டே நடத்தப்படவில்லை என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியன் சுவாமி குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக உச்சநீதிமன்றத்தில் நீதிபதி கேள்வி எழுப்பியபோது, மத்திய அரசின் சட்டத்தரனி மௌனமாக இருந்ததாகவும் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார். இதேபோல் 2ஜி ஊழல் தொடர்பாக டெல்லியில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணையின்போது, ரிசர்வ் வங்கி கவர்னர் சுப்பாராவ் ஆஜரானார்.

கடந்த 2007ம் ஆண்டு முதல் 2008ஆம் ஆண்டு வரை நிதித் துறை செயலாளராக இருந்த சுப்பாராவ், 2 ஜி வழக்கில் சிபிஐ தரப்பின் முக்கிய சாட்சியாக விளங்குகிறார். நீதிமன்றத்தில் தான் அளித்த சாட்சியத்தின் போது 2001ஆம் ஆண்டு நிர்ணயித்த விலைக்கு அலைக்கற்றை ஒதுக்கீட்டை எப்படி கொடுக்க முடியும் என்று தான் கேள்வி எழுப்பியதாக சுப்பாராவ் தெரிவித்தார்.

இது தொடர்பாக, அப்போதைய தொலைத்தொடர்பு செயலாளர் மத்தூருக்கு கடிதம் எழுதியதாகவும் அவர் கூறியுள்ளார். இது தொடர்பான பல்வேறு குறிப்புகளையும் சிபிஐ தரப்பு சட்டத்தரனி ஏ.கே. சிங், சிறப்பு நீதிபதி ஓ.பி. சைனியிடம் காண்பித்தார். சுப்பாராவ் இன்றும், சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகி தனது சாட்சியம் அளிப்பார் என்று தெரிகிறது.

# இந்திய செய்திகள்

## இந்திய - சீன எல்லைப் பகுதியில் பறக்கும் தட்டுகள்



இந்திய - சீனா எல்லையை ஒட்டிய பகுதியில் கடந்த சில மாதங்களாக டென்னிஸ் பந்து அளவிலான பறக்கும் தட்டுகள் கிடைத்துள்ளன.

இந்தப் பொருள் உலோகம் அல்லாத பொருளால் உருவாக்கப்பட்டுள்ளதால் இது குறித்து ராடாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த விவகாரம் குறித்து இரு நாடுகளின் உயர்மட்ட அளவிலான அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கலந்து ஆலோசிக்க உள்ளதாக தகவல் தெரிவிக்கின்றது.

பறக்கும் தட்டுகள் போன்ற பொருட்களை பற்றி விவாதிக்க மத்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு, இந்திய இராணுவம் ஆகியவை அளித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

## டெல்லி ஹிமாலயா ஹவுசில் பயங்கர தீ விபத்து: ஒருவர் பலி



தலைநகர் புதுடெல்லியில் உள்ள பிரபல ஹிமாலயா ஹவுசில் இன்று ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் ஒருவர் பலியானார். 15 மாடி குடியிருப்பு பகுதியான ஹிமாலயா ஹவுசில் இன்று அதிகாலை 6.30 மணிக்கு திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

மின்கோளாறு காரணமாக 3ஆவது மாடியில் பிடித்த தீ, மளமளவென 4,5,6,7,8 என அடுத்தடுத்த மாடிகளுக்கு பரவியது. உடனடியாக விரைந்து வந்த தீயணைப்பு படையினர், பல மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். இவ்விபத்தில் ஜெய் பகவான் (வயது 52) என்பவர் உயிரிழந்ததாக டெல்லி தீயணைப்பு துறையின் இயக்குனர் ஏ.கே.ஷர்மா தெரிவித்துள்ளார்.



சென்னையில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் 95ஆவது நினைவு விழாவில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய முதல்வர் ஜெயலலிதா.

## கற்பழிக்க முயன்றவரின் நாக்கை கடித்துத் துப்பிய இளம் பெண்

உத்தர பிரதேச மாநிலத்தில் வீடு புகுந்து கற்பழிக்க முயன்ற வாலிபரின் நாக்கை இளம்பெண் ஒருவர் கடித்துத் துப்பிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உத்தர பிரதேச மாநிலம் இதாவா மாவட்டத்தில் உள்ள பர்ரா சலீம்பூர் கிராமத்தில் 17 வயது இளம்பெண் ஒருவர் நேற்று வீட்டில் தனியாக இருந்துள்ளார்.

அப்போது கைலாஷ் பஹேலியா (வயது 25) என்ற வாலிபர் அத்துமீறி அந்த இளம்பெண்ணின் வீட்டுக்குள் புகுந்து, தனியாக இருந்த அப்பெண்ணை கற்பழிக்க முயன்றார். அப்பெண் எவ்வளவு போராடியும் அவரால் கைலாஷைத் தடுக்க முடியவில்லை. இதையடுத்து தனது கற்பை காப்பாற்றிக்கொள்ள அப்பெண் கைலாஷின் நாக்கை கடித்துத் துப்பினார்.

இது குறித்து தகவல் அறிந்த பொலிஸார் அந்த வாலிபரைக் கைது செய்து சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். அங்கு அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

## கடவுச்சீட்டு பறிமுதல்:

## நித்தியானந்தாவின் கனடா பயணம் இரத்து



சுவாமி நித்தியானந்தா தனது பெயரிற்கு ஏற்பட்ட களங்கத்தைப் போக்குவதற்காகவும், தனது வெளிநாட்டுப் பக்தர்களைப் பார்ப்பதற்காகவும் கனடா செல்ல திட்டமிட்டிருந்தார்.

ஆனால் கடந்த மாதங்களில் பல வழக்குகளில் சிக்கிய நித்தியின் கடவுச்சீட்டு பொலிஸாரின் வசமிருப்பதால் அவரால் கனடா பயணத்தை மேற்கொள்ள முடியவில்லை.

இதையடுத்து இன்றைய நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வீடியோ - ஓடியோ தொலைதொடர்பால் வென்திரையில் தோன்றி பக்தர்கள் மத்தியில் அவர் உரையாற்றவுள்ளார்.

தியானபீடம் எனும் ஆசிரமத்தை உருவாக்கி 33 நாடுகளில் அதற்கு 1,000க்கும் மேற்பட்ட கிளைகளை உருவாக்கிய 32 வயதான பரமாஹாஸ்மா நித்தியானந்தாவிற்கு படுக்கையறையில் அவருக்குத் தெரியாமல் பொருத்தப்பட்டிருந்த ஒரு வீடியோ கமிராவாலேயே பிரச்சினை எழுந்தது.

இதனை நடிகை ரஞ்சிதாவுடன் தொடர்புபடுத்தியே தமிழகத் தொலைகாட்சிகள் நேரடியாக அந்தக் காட்சிகளை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

## தாக்கரேக்கு நினைவுச் சின்னம் கட்டாயம் அமைக்க வேண்டும்



சிவசேனா தலைவர் பால் தாக்கரேக்கு, அவர் இறுதிச் சடங்குகள் நடந்த, சிவாஜி பார்க்கில், நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என, சிவசேனா மூத்த தலைவரும், அம்மாநில முன்னாள் முதல்வருமான, மனோகர் ஜோஷி, மகாராஷ்டிரா மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

சிவசேனா தலைவர் பால் தாக்கரே, 86, உடல் நலக் குறைவால், 17ஆம் திகதி காலமானார். அவரது இறுதிச் சடங்குகள் நேற்று முன்தினம் நடந்தன.

மும்பையில் மிகவும் பிரபலமான, சிவாஜி பார்க்கில், அவரது உடல் தகனம் செய்யப்பட்டது. மகாராஷ்டிராவில், காங்கிரஸ் - தேசியவாத காங்., கூட்டணி ஆட்சி நடக்கும் நிலையில், மாநிலத்தின் பிரதான எதிர்க்கட்சியான, சிவசேனா சார்பில், முக்கிய கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சிவசேனா கட்சியின் மூத்த தலைவரும், மகாராஷ்டிரா முன்னாள் முதல்வருமான, மனோகர் ஜோஷி, நேற்று கூறியதாவது:

மகாராஷ்டிரா மக்களின் அன்புக்குரிய, பால் தாக்கரே, நாட்டின் மிக முக்கியத்துவம் வாய்ந்த, அரசியல் தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர். அவரது இறுதிச் சடங்குகள் நடந்த சிவாஜி பார்க்கில், அவருக்கு, நினைவுச் சின்னம் அமைக்க, மகாராஷ்டிரா மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# ஹேரத் எம்மை வெற்றிக்கு இட்டுச் சென்றார்

## - இலங்கை அணித் தலைவர் மஹேல



இலங்கையின் பிரதான பந்து வீச்சாளராக 18 வருடங்கள் விளங்கிய முத்தையா முரளிதரனின் ஓய்விற்குப் பின்பு ரங்கன ஹேரத் காணப்பட்டிருக்காவிட்டால் டெஸ்ட் அரங்கில் இலங்கை அணி தொடர்ந்து தடுமாறியிருக்கும் என இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

உலக சாதனையாளரான முத்தையா முரளிதரன் 2010ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றதையடுத்து யாராவது ஒரு பந்துவீச்சாளர் இலங்கையின் பந்துவீச்சைத் தலைமை தாங்க வேண்டிய தேவை காணப்பட்டதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, அந்தப் பணியை ரங்கன ஹேரத் மிகச்சிறப்பாகச் செய்துவருவதாகத் தெரிவித்துள்ளார்.

முத்தையா முரளிதரனின் ஓய்விற்குப் பின்னர் ரங்கன ஹேரத் அணியில் இடம்பெற்றுத் தனது திறமையைச் சரியாக வெளிப்படுத்தியிருக்காவிட்டால் இலங்கை அணி மேலும் 2 அல்லது 3 வருடங்கள் தடுமாற வேண்டியிருந்திருக்கும் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, ஆனால் ரங்கன ஹேரத்தின் சிறப்பான பந்துவீச்சுக் காரணமாகச் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தக்கூடியதாக இருந்தது எனத் தெரிவித்தார்.

முத்தையா முரளிதரனிற்குப் பின்பு இலங்கையில் உருவான சிறந்த சுழற்பந்து வீச்சாளராக ரங்கன ஹேரத் காணப்படுகிறார் எனக் குறிப்பிட்ட மஹேல, ரங்கன ஹேரத்தின் கட்டுப்பாடான பந்துவீச்சுக் காரணமாக எதிரணி வீரர்களுக்கு அவர் சவாலாக விளங்குவதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு ஏனைய பந்து வீச்சாளர்கள் ரங்கன ஹேரத்திற்குத் துணையாகச் சிறப்பாகப் பந்துவீசி வருவதாகவும் மஹேல ஜெயவர்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நிறைவடைந்த நியூசிலாந்திற்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகப் பந்துவீசியதாகத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, நியூசிலாந்து அணி தொடர்ந்தும் போராடிய போதிலும், சிறப்பான பந்துவீச்சுக் காரணமாகவே நியூசிலாந்து அணி தடுமாறியிருந்ததாகவும் தெரிவித்தார்.

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி காலியில் இடம்பெற்ற வேளையில் ரங்கன ஹேரத் முதல் இனிங்ஸில் 5 விக்கெட்டுக்களையும்,

இரண்டாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கட் போட்டிகளுக்காக மீண்டும் தம்புள்ள மைதானம்



ரங்கிரி தம்புள்ளை கிரிக்கெட் மைதானத்தில் மீண்டும் சர்வதேசக் கிரிகெட் போட்டிகள் இடம் பெற வாய்ப்புக்கள் உள்ளதாக அறிவிக்கப்படடுள்ளது. நீண்ட காலமாக தம்புள்ளை மைதானத்தில் சர்வதேசப் போட்டிகள் இடம்பெறவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

இலங்கையில் உலர் வலயத்தில் அமைந்துள்ள ரங்கிரி தம்புள்ளை சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் போட்டிகள் நடத்தப்பட்டால் மழையில் குறுக்கீடுகள் குறைவாகக் காணப்படும் என்பதால் இந்த மைதானத்தில் போட்டிகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்தும் காணப்பட்டது.

குறிப்பாக அண்மையில் இடம்பெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான தொடர், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ரி-20 தொடர், நியூஸிலாந்து அணிக்கு எதிரான தொடர் ஆகியவற்றில் மழையின் குறுக்கீடுகள் அதிகமாகக் காணப்பட்ட பின்னர் ரங்கிரி தம்புள்ளை மைதானத்தைத் தவிர்ப்பது தொடர்பான கேள்விகள் அதிகமாக எழுப்பப்பட்டன.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் நிஷாந்த ரணதுங்க, தம்புள்ளை மைதானத்தின் மின்விளக்குகளில் தவறுகள் காணப்படுவதாகவும் அவை சீர்செய்யப்பட்டதும் தம்புள்ளை மைதானத்தில் மீண்டும் போட்டிகள் இடம்பெறும் எனத் தெரிவித்தார்.

அடுத்தாண்டு இடம்பெறவுள்ள தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தொடர் இந்த மைதானத்தில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சென்னை ஓபன் டென்னிஸ்: முன்னாள் சாம்பியன்கள் பங்கேற்பு

சென்னை ஓபன் டென்னிஸ் தொடரில் முன்னாள் சாம்பியன்களான குரோஷியாவின் மரின் சிலிச், சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா பங்கேற்க உள்ளனர்.

தமிழ்நாட்டின் தலைநகர் சென்னையில், ஏ.டி.பி அந்தஸ்து பெற்ற 18வது சென்னை ஓபன் டென்னிஸ் தொடர் டிசம்பர் 31ம் திகதி முதல் 2013 ஜனவரி 6ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

சமீபத்தில் உலகின் நம்பர்-6 வீரரான செக்குடியரசின் தாமஸ் பெர்டிக், செர்பியாவின் ஜான்கோ டிப்சரிவிச் (நம்பர்-9) இத்தொடரில் பங்கேற்க தங்களது பெயரை உறுதி செய்தனர்.

இந்நிலையில் நேற்று உலகின் "நம்பர்-15" வீரரான குரோஷியாவின் மரின் சிலிச், செர்பியாவின் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரின்கா (நம்பர்-17) தங்களது பங்கேற்பை உறுதி செய்தனர். ஏற்கனவே ஐந்து முறை சென்னை ஓபனில் பங்கேற்ற சிலிச், 2009ல் முதன் முறையாக சாம்பியன் பட்டம் வென்றார்.

தொடர்ந்து அசத்திய இவர், 2010ம் ஆண்டு மீண்டும் கிண்ணத்தை கைப்பற்றினார். கடந்த ஆண்டு அரையிறுதி வரை முன்னேறிய இவர், இந்த ஆண்டு நடந்த தொடரில் முழுங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பங்கேற்கவில்லை. தொடர்ந்து ஐந்தாவது முறையாக பங்கேற்க உள்ள வாவ்ரின்கா, இரண்டு முறை இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

இதில் 2010ல் இறுதிச்சுற்றில் தோல்வியடைந்த இவர், 2011ல் முதன்முறையாக கிண்ணம் வென்றார். இந்த ஆண்டு நடந்த தொடரில் காலிறுதியோடு வெளியேறினார்.

# ரஞ்சி கிண்ணம்: தமிழ்நாடு அபார வெற்றி



மகாராஷ்டிரா அணிக்கெதிரான ரஞ்சி கிண்ண லீக் போட்டியில் தமிழக அணி 104 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

ரஞ்சி கிண்ண கிரிக்கெட் தொடரின் 3வது சுற்று லீக் போட்டிகள் நாட்டின் முக்கிய நகரங்களில் நடைபெற்று வருகிறது. சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் நடக்கும் பி பிரிவு லீக் போட்டியில் தமிழகம், மகாராஷடிரா அணிகள் மோதின. முதல் இன்னிங்சில் தமிழகம் 276 ஓட்டங்களும், மகாராஷடிரா 233 ஓட்டங்களும் எடுத்தன.

நேற்று மூன்றாம் நாள் ஆட்டம் நடந்தது. இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய தமிழக அணிக்கு தொடக்க வீரர்கள் சொதப்பினர். அதிகபட்சமாக பின்பு களமிறங்கிய பாபா அபராஜித் , தினேஷ் கார்த்திக் தலா 35 ஓட்டங்கள் எடுத்தனர். மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

இரண்டாவது இன்னிங்சில் தமிழக அணி 149 ஓட்டங்களுக்கு சுருண்டது. மகாராஷ்டிரா சார்பில் அக்ஷய் தரேகர், சிராக் குரானா தலா 4 விக்கெட் வீழ்த்தினர். இதனையடுத்து 193 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற சுலப இலக்கோடு இரண்டாவது இன்னிங்சை துவக்கிய மகாராஷ்டிரா அணி துடுப்பாட்ட வீரர்களை, தமிழக பந்துவீச்சாளர்கள் மிரட்டினர்.

நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் 2வது இன்னிங்சில் மகா ராஷடிரா அணி 8 விக்கெட்டுக்கு 75 ஓட்டங்கள் எடுத்து திணறியது. இதனையடுத்து இன்றைய கடைசி நாள் ஆட்டத்தை தொடங்கிய மகா ராஷ்டிரா அணி மீதமுள்ள இரண்டு விக்கெட்டுகளையும் இழந்து 88 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது. தமிழகம் சார்பில் அவுசிக் ஸ்ரீனிவாஸ், ரெங்கரா ஜன் தலா 3 விக்கெட்டும், பாலாஜி, யோமகேஷ் தலா 2 விக்கெட்டும் கைப்பற்றினர். இதனால் தமிழ்நாடு அணி 104 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்று முதல் வெற் றியை பதிவு செய்துள்ளது.

# 9 விக்கெட் வித்தியாசத்தில் இந்தியா அபார வெற்றி



இங்கிலாந்து அணியுடனான முதல் டெஸ்டில், இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் அபாரமாக வென்று 1:0 என முன்னிலை பெற்றது. புஜாரா ஆட்ட நாயகன் விருது பெற்றார். அகமதாபாத், சர்தார் பட்டேல் ஸ்டேடியத்தில் நடந்த இப்போட்டியில், டாசில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 8 விக்கெட் இழப்புக்கு 521 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. சேவக் 117, யுவராஜ் 74, புஜாரா 206 ஓட்டங்களை விளாசினர்.

இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 191 ஓட்டங்களுக்கு சுருண்டது. ஓஜா 5 விக்கெட் கைப்பற்றி அசத்தினார்.

இதையடுத்து, முதல் இன்னிங்சில் 330 ஓட்டங்கள் பின் தங்கிய இங்கிலாந்து அணி பாலோ ஆன் பெற்று 2வது இன்னிங்சை தொடர்ந்து விளையாடியது. அந்த அணி 4ம் நாள் முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 340 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கேப்டன் குக் 168 ஓட்டங்கள், மேட் பிரையர் 84 ஓட்டங்களுடன் கடைசிநாள் ஆட்டத்தை நிறைவு செய்தனர்.

பிரையர் 91 ஓட்டங்கள் எடுத்து (225 பந்து, 11 பவுண்டரி) ஓஜா சுழலில் அவரிடமே கேட்ச் கொடுத்து ஆட்டமிழந்தார். பொறுப்புடன் போராடியகுக் 176 ஓட்டங்கள் எடுத்த நிலையில் (374 பந்து, 21 பவுண்டரி) ஓஜாவின் மந்திரச் சுழலில் கிளீன் போல்டானார். பிராடு 3, ஸ்வான் 17, பிரெஸ்னன் 20 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணி 2வது இன்னிங்சில் 406 ஓட்டங்களுக்கு ஆல் அவுட் ஆனது. இந்திய பந்துவீச்சில் ஓஜா 4, உமேஷ் 3, ஜாகீர் 2, அஷ்வின் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து, 77 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் இந்தியா 2வது இன்னிங்சை தொடங்கியது. பாட்டியின் ஈமச்சடங்கில் பங்கேற்பதற்காக கம்பீர் டெல்லி சென்றுவிட்டதால், சேவக், புஜாரா ஜோடி துரத்தலை தொடங்கியது. இருவரும் முதல் விக்கெட்டுக்கு 57 ஓட்டங்கள் சேர்த்தனர். சேவக் 25 ஓட்டங்கள் எடுத்து ஸ்வான் சுழலில் பீட்டர்சன் வசம் பிடிபட்டார்.

இந்தியா 15.3 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 80 ஓட்டங்கள் எடுத்து அபாரமாக வென் றது.

புஜாரா 41, கோஹ்லி 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இரண்டு இன்னிங்சிலும் சிறப்பாக துடுப்பாட்டத்தில் அசத்திய புஜாரா ஆட்ட நாயகன் விருது பெற்றார்.

மொத்தம் 4 போட்டிகள் கொண்ட தொடரில் இந்தியா 1,0 என முன்னிலை வகிக்க, 2வது டெஸ்ட் மும்பையில் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 21.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது